விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 20 புதன்கிழமை (02.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 135

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



## ரணில் - சம்பந்தன் கூட்டாக சிங்கக் கொடியை தூக்கினர்

### நான் செய்ததை அரசு செய்ய முடியுமா? - ரணில்

*(யாழ்ப்பாணம்)*, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மே தினத்தை நடத்துவதனால் எம்மை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் என அடையாளப்படுத்தும் இந்த அரசாங்கத்திடம் நாம் கேட்கின்றோம் கே.பி. யார் என்று?

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் இணைந்து மே தினக் கூட்டத்தில் நான் சிங்கக் கொடியை தூக்கிப் பிடித்து அசைத்தது போன்று கே.பியுடன் மேடையில் சிங்கக் கொடியை அசைக்க அரசாங்கத்தால் முடியுமா? என எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க் கட்சிகளின் ஒன்றிணைந்த மே தினக் கூட்டம் நேற்று யாழ் குருநகர் சென்.றோக்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் இங்கு வந்துள்ளது இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிலைநாட்ட எல்லோருடைய ஆதரவையும் பெறுவதற்காக.

அதற்கு எங்களை முழுமையாக நாங்கள் அர்ப்பணித்துள்ளோம். இது கூட்டு எதிர்க் கட்சிகளின் முதலாவது கூட்டமல்ல.

எரிபொருள் விலையை உயர்த்தியபோது ஒன்றாகஇணைந்து *(02ஆம் பக்கம் பார்க்க)*

### ஐ.தே.கவின் ஆதரவாளர்களே அதிகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க் கட்சிகளுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்திய மே தினக் கூட்டத்தில் தென்னிலங்கையில் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## உரிமை என்பது வெறும் பேச்சல்ல அதனை அடைந்தே தீர வேண்டும்

### ஈபிடிபியின் மே தினத்தில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

உரிமை என்பது வெறுமனே பேசிக்கொண்டு இருப்பதற்கான வெற்றுக் கோசம் அல்ல. அதனை அடைந்தே தீரவேண்டும் என தனது மே தின உரையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தின நிகழ்வுகள் நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்.மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது மக்களின் உரிமை என்பது வெறுமனே அரசியலுக்காக மட்டும் பேசிக் கொண்டு இருப்பதற்கான விடயமல்ல.

உரிமையை பெற்றுத் தருவோம் என உணர்ச்சி பொங்க பேசிவிட்டு தலை மறைவாகும் அரசியல்வாதிகளும் நாங்களல்ல.

மக்களோடு மக்களாக இருந்து மக்களுக்காகவே வாழ்ந்து வருகிறோம். இன்றைய(நேற்று) தினம் ஒடுக்கப்பட்ட உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைக் குரலின் தினம்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் 'எழுவோம்' என்ற குரல் பிறந்த தினம். *(24ஆம் பக்கம் பார்க்க)*

## பழைய அனுபவங்களை மறந்து நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும்

### மே தினக் கூட்டத்தில் சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)

கௌரவமானதும் நியாயமானதும், நடைமுறைப் படுத்தக்கூடியதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான நாட்டில் பிரிவினையைஏற்படுத்தாத அரசியல் தீர்வினை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நாங்கள் தயாராகவுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து யாழ்.குருநகர் சென். றோக் விளையாட்டு மைதானத்தில் நடத்திய மே தினக் கூட்டத்தில் தலைமையுரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டில் வாழும் தொழிலாளர்கள் பல விதமான கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பல ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் இல்லாமல் இருக்கின்றார்கள். குறிப்பாக தமிழ் இளைஞர், யுவதிகள் பலர் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களை பொறுத்தவரையில் அரச சேவையில் அவர்களின் பங்கு வெறும் 5 வீதம் தான். ஆனால் நாட்டில் தமிழ் பேசும் மக்கள் 25 வீதமாக இருக்கிறார்கள்.

அப்படி இருந்தபோதிலும்கூட தற்போதைய அரசாங்கம் பாரபட்சமாக அரச சேவையினை வழங்கிவருகின்றது.

இன்று (நேற்று) மே தின நிகழ்ச்சி ஒரு விடயத்தை வெளிப் *(23ஆம் பக்கம் பார்க்க)*

## அரசியல் தீர்வில் முன்னேற்றம் இல்லை வட பகுதி முழுவதும் சிங்கள மயமாகிறது

### பிரித்தானிய அமைச்சர் அறிக்கை

(லண்டன்)

இலங்கையில் போருக்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற போதிலும்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதிலோ, மனித உரிமை விவகாரங்களிலோ முன்னேற்றம் காணப்படவில்லை என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

மாறாக வட பகுதி முற்றுமுழுதாக சிங்கள மயப்படுத்தப்பட்டு வருவதாக பிரித்தானியா குற்றம் சுமத்தியுள்ளது.

2011-ம் ஆண்டுக்கான வெளிவிவகார மனித உரிமைகள் தொடர்பிலான அறிக்கையை அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

இவ் அறிக்கையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் போருக்குப் பின்னரான புனரமைப்புப் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

போரின்போது சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை, போரின்போது படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்ட ஏராளமானோர் இன்னமும் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள போதிலும், அதன் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கையில் மனிதவுரிமை விவகாரங்களில் இன்னமும் முன்னேற்றம் காணவில்லை. பேச்சுச் சுதந்திரத்துக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை உரிய முறையில் பொறுப்புக் கூறவில்லை *(02ஆம் பக்கம் பார்க்க)*

## பிரி. அரசின் அறிக்கை இலங்கை அரசு சீற்றம்

(கொழும்பு)

பிரித்தானிய அரசாங்கத்தின் மனித உரிமைகள் அறிக்கையில் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான கரிசனைக்குரிய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதை இலங்கை அரசாங்கம் விமர்சித்துள்ளது.

யுத்தம் முடிபடைந்து 3 வருடங்கள் மாத்திரமே கடந்துள்ள. நிலையில் பொறுப்புடமை விவகாரத்தில் இலங்கை போதுமானளவு செயற்படவில்லை என இலங்கை மீது குற்றம் சுமத்துவதற்கு பிரிட்டனுக்கு உரிமையில்லை என வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா கூறினார்.

நாம் பேதுமானளவு செய்யவில்லை என அவர்கள் எப்படிக் கூறமுடியும்? எந்த அடிப்படையில் அவர்கள் அப்படி கூறுகிறார்கள்? கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றம் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த வருடம் *(23ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஆசிரியர் உதவியாளர்களுக்கான பயிற்சி நெறி 15 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய உதவியாளர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்களுக்கான ஈராண்டுப் பயிற்சி நெறி மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகின்றன என்று கொழும்பில் கல்வி அமைச்சு அதிகாரிகளை சந்தித்த இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கோப்பாய்,பலாலி ஆகிய ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சிநெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் உடற்கல்வி பயிற்சிநெறிக்குரியமைதான வசதிகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ளதால் அவ்வாசிரியர்களுக்கான பயிற்சிகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளதாகவும், ஏனைய பாடங்களுக்கான பயிற்சிநெறிகள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான அனுமதிகள் பற்றிய விபரங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் எனவும், இதுதொடர்பான இறுதிமுடிவுகள் எடுக்கும் கூட்டம் கல்வியமைச்சில் இன்று நடைபெறவுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# ரணில் -சம்பந்தன் கூட்டாக...

ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இந்த கூட்டிணைந்த எதிர்க்கட்சிகள் பொதுவான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காகவும் அதனை நடைமுறைப்படுத்துவதற்காகவும் தான் இங்கு ஒன்றுகூடியுள்ளோம்.

தமது சொந்த மக்களை விலையேற்றத்தினால் அடிக்கும் ஒரேஒரு அரசு மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தான். வாரத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு பொருட்களின் விலைகளையும் உயர்த்தி எமது வயிற்றில் அடிக்கின்றது.

மே தினத்திற்கு முன்பாக பாண் விலையைக்கூட்டினர். இதற்கு அடுத்து என்ன செய்ய இருக்கிறார்களோ தெரியவில்லை.

கடந்த நவம்பர் மாதத்திலே அமெரிக்க டொலர் ஒன்றுக்கு 109 ரூபாயுக்குள் கிடைத்தது. ஆனால் தற்போது ஒரு அமெரிக்க டொலருக்கு 133 ரூபாயை செலவளிக்க வேண்டியுள்ளது.

தனியார் துறைகளிலும், அரசதுறைகளிலும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று தோட்டத்தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்.

பொதுமக்கள் மீது சுமையைவைக்கும் அரசாங்கமாக மகிந்தராஜபக்ஷ அரசாங்கம் மாறிவருகின்றது. அரசிடம் பணமில்லாமல் போனதும் எங்களுடைய ஊழியசேமலாப நிதியத்தில் இருந்து பணத்தை களவாடினார்கள்.

இந்த நாட்டில் தற்போது உள்ள நிலைவரத்தை விட ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இன்னும் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டு மோசமான நிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள்.

பொருட்களின் விலைஉயர்வைக் கண்டித்து நாங்கள் வீதியில் இறங்கி போராடவேண்டி ஏற்படும்.

மேலும் வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துங்கள். உடனடியாக மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துங்கள். இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் வாழவிடுங்கள் என இந்த அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும் வெள்ளை வான் கலாசாரம் இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு மிகப்பெரிய துயரம்.

இந்த வானை ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு மிகவும் பிடிக்கும். இலங்கையில் அதிகளவில் விற்பனையாகின்றது இந்த வெள்ளை வான்.

வெள்ளைவானில் கடத்தப்பட்டவர்களில் சிலர் தப்பித்து வந்துள்ளனர். பலர் வேறு உலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஜெனிவா கூட்டத் தொடரிலும் பேசப்பட்டுள்ளது. இருந்தும் தொடர்ந்து அராஜகமான ஆட்சியைநடத்திவருகின்றது இந்த அரசாங்கம்.

தம்புள்ளயில் அண்மையில் என்ன நடந்தது. முஸ்லிம் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. சட்டத்தை கையில் எடுத்து அராஜகப் போக்குடன் இந்த அரசாங்கம் செயற்படுகின்றது.

பள்ளிவாசலுக்கு பாதுகாப்புக் கொடுக்குமாறு அமைச்சர் ஒருவரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது இருப்பினும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

யுத்தம் முடிபிற்கு கொண்டுவரப்பட்டு மூன்றவருடங்கள் ஆகியும் வன்னிமக்கள் நரகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் உரிமைகளை பகிர்ந்து கொள்ள வேண்டுமானால், சம உரிமை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு முக்கியமாக அரசியல் உரிமை வேண்டும்.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப் படுத்தவில்லை. தேசிய கீதத்தில் உள்ள வரிகளையாவது நடைமுறைப்படுத்துங்கள். ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மே தினத்தைக் கொண்டாடவுள்ளது என்பதற்காக, எமக்கு புலிமுத்திரை குத்தியவர்களிடம் நாம் கேட்கின்றோம். கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் யார் என்று?

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் என்னுடன் இணைந்து சிங்கக் கொடியை மேடையில் அசைத்து போன்று உங்களுடன் உள்ள கே.பியை கொண்டு தேசியக் கொடியை அசைத்துக் காட்டுங்கள் பார்க்கலாம்.

இல்லையேல் உங்களின் முதுகில் புலி முத்திரையைக் குத்திக் கொண்டு திரியுங்கள்– எங்களை புலிக்கு ஆதரவானவர்கள் என்று அடையாளப்படுத்தாதீர்கள்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காகவே யாழ்ப்பாணத்தில் மே தினத்தைக் கொண்டாடினோம். கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு முறை என்னிடம் கூறினார். நான் இலங்கையராக வாழ்வேன். இலங்கையராகவே இறப்பேன் என்று. நாங்களும் அதைத்தான் சொல்கிறோம்.

தெரிவுக்குழுவிற்குள் அழைக்கும் அரசாங்கம் தெரிவுக் குழுவில் நாம் இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்தித்தரவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனக் கூறியது இந்த அரசாங்கம். ஆனால் இதுவரை நடந்த பேச்சுவார்த்தையில் எந்தப் பயனும் இல்லை.

இதனால் உலக நாடுகள் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்துள்ளன என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ந-6)

## அரசியல் தீர்வில்...

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டிலாவது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என பிரித்தானியா நம்புகின்றது. இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான உதவிகளை வழங்கவும் பிரித்தானியா தயராக உள்ளது.

இலங்கையில் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. அங்கு பலர் தொடர்ந்தும் கடத்திச் செல்லப்படும் நிலை காணப்படுகின்றது. இதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. காணாமல் போனோர் தொடர்பில் உரிய விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இலங்கையில் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. 2011 ஆம் ஆண்டில் மட்டும் 6000 சிறுவர்கள் வர்த்தக ரீதியாக பாலியல் தொழிலில் ஈடுபடுவதாக இலங்கை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு சிறுபான்மையின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விடயத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை. மாறாக வடபகுதியில் சிங்கள மயப்படுத்தல் கொள்கை முன் னெடுக்கப்படுகின்றது.

இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் வாழும் இடங்களில் புத்தரின் சிலைகளும், பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் பிரதேசமான வடபகுதியில் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இலங்கையின் பொது நிர்வாக மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மத்தியல் தமிழ் மொழிப் பயன்பாடு உரிய முறையில் மேம்படுத்தப்படவில்லை.

பிரித்தானியாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட அகதிகள் இலங்கையில் துன்புறுத்தப்படுவதாக எவ்வித சான்றுகளும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8-11)


### வாடகைக்கு

அலுவலகமாக/ களஞ்சியமாக பாவிக்கக் கூடிய கட்டிடம் வாடகைக்கு உண்டு. (யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில்) (8274)

தொடர்பு: 0777 150931

1. இலங்கை நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை
2. வடக்கு மாகாண பொதுச் சேவை
3. வடக்கு மாகாண கணக்காளர் சேவை தரம் - III
4. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்
5. கணக்காய்வாளர் சேவை தரம் - II
6. தொகைமதிப்பு, புள்ளி விபரத் திணைக்களத்தில் புள்ளி விபர உத்தியோகத்தர் தரம் - II

விண்ணப்பங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல்யமான புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்க. (8272)

எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ், இல. 237, கந்தர் மடச் சந்தி, யாழ்ப்பாணம். T.P: 0777164613

### Study Abroad

Diploma in Business Management (U.K)
Start:- 12.05.2012

GREENWICH COLLEGE
39, 3rd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna.

Head Office
GREENWICH COLLEGE (PVT) LTD
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

மேலதி விபரங்களுக்கு Mob: 0777630708 (C-6478)

### கண்ணீர் அஞ்சலி





பிறப்பு 11 08 1946

இறப்பு 28 04 2012

அன்புடன் எம்மை அரவணைத்து
அவனியில் முந்தியிருக்கவைத்து
பண்போடு எம்மை நல்வழிப்படுத்தி
பார்போற்ற ஜெகத்தினில் வாழ வைத்து
தென்புலம் சென்றீரே! எம் தெய்வமே!
தேம்பியே அழுகின்றோம் யாம் இங்கு

புண்ணியமூர்த்தி
வேலும்மயிலும்

உங்கள் நீங்காத நினைவுகளுடன்
மகள், மருமகன், பேரப்பிள்ளை
(மூர்த்தி டிஜிற்றல் கலர்லாப்)
தொ.பே.: 0772247428

(ஸ்ரீ-6480)

# இன்று ஒரு தகவல்

## வீரம்

ஒரு வீரன் எப்படி இருப்பான்?

இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன?

வீரன் என்றால் பெரிய மீசை வைத்திருப்பான். கையில் கத்தி வைத்திருப்பான். முழங்கைக்கு மேல் தாயத்து கட்டியிருப்பான். கண் சிவப்பாக இருக்கும். ஆள் பயில்வான் மாதிரி இருப்பான். அவன்தான் வீரன். இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் வீரன் அவனில்லை.

ஒரு ராஜா ஒருநாள் தன் மந்திரியைப் பார்த்து கேட்டார்: "நம்முடைய தேசத்தில் இருப்பவர்களில் வீரன் யார்? கோழை யார்? என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

உடனே அந்த மந்திரி கோழைகள் யார்? வீரர்கள் யார்? என்பதற்கு விளக்கம் கொடுத்தார். கோழை யார் தெரியுமா?

மற்றவர்களின் பொருள் நமக்குக் கிடைக்குமா? என்ற நினைப்பிலேயே இருப்பவன்; முயற்சியே செய்யாதவன்; பாடுபட்டு உழைக்காதவன்; சிரமப்பட்டு வேலை செய்து பிழைக்க விரும்பாதவன்; குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் சந்நியாசியாகப் போகிறேன் என்று சொல்பவன், இலஞ்சம் வாங்குபவன். இப்படிப்பட்டவர்கள்தான் கோழைகள்.

சரி, அப்படியானால் வீரமுள்ளவன் யார்?

தன்னம்பிக்கையுடன் உழைப்பவன், தன்னுடைய உழைப்பிலிருந்து கிடைக்கும் பணத்தை சிக்கனமாக செலவு செய்து தனது குடும்பத்தை காப்பாற்றுபவன், சுய முயற்சி உள்ளவன், எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பவன். இவர்களெல்லாம் வீரம் உள்ளவர்கள். இது அமைச்சரின் விளக்கம்.

இந்த விளக்கத்தை கேட்டார் ராஜா.

''அமைச்சரே, நீங்கள் சொல்வதும் சரிதான். கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இதை நான் அனுபவத்தில் பார்த்தால்தான் நன்றாக இருக்கும். நம் தேசத்தில் இதற்கு யாரையாவது உதாரணம் காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

"காட்டுகிறேன்" என்றார் அமைச்சர்.

சிறிது நாட்கள் சென்றன. அந்த ராஜாவுக்கு பிறந்தநாள் வந்தது. அதை முன்னிட்டு அரண்மனையில் ஒருவாரம் விருந்து வைத்தார்கள். பொதுமக்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமில்லாமல் விருந்து சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அரண்மனை விருந்தென்றால் மக்கள் சும்மா இருப்பார்களா? கூட்டம் கூட்டமாக அரண்மனைக்குப் போய் விருந்து சாப்பிட்டார்கள். இது தினமும் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு நாள் ராஜாவும் மந்திரியும் உலாவப் போனார்கள். ஊருக்கு வெளியில் வயதான ஆள் ஒருத்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் இவர்களை திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவன் பாட்டுக்குத் தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

ராஜாவும் மந்திரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த மந்திரி மெதுவாக அந்த ஆளிடம் போனார்.

''பெரியவரே, அரண்மனையில் விருந்து நடக்கிறதே அது உனக்குத் தெரியாதா? சனங்கள் முழுப்பேரும் போய் சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறார்கள். நீயும் போய் வயிறார சாப்பிட்டு விட்டு வரவேண்டியது தானே" என்றார். அதற்கு அந்த ஆள்:

''அரண்மனையில் விருந்து நடப்பது எனக்கும் தெரியும். நீங்கள் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும் என் கையால் உழைத்து அதனால் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் சாப்பிடும் சாதாரண சாப்பாடே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அரண்மனை விருந்தைவிட இதுதான் எனக்குப் பெரியது. அதுவுமில்லாமல் அரண்மனையில் ஒருவாரத்துக்கு வேண்டுமானால் விருந்துச் சாப்பாடு தருவார்கள். அதன்பின் என்ன செய்வது?" என்று சொல்லிவிட்டு தொடர்ந்து தன்னுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்.

இப்பொழுது அந்த அமைச்சர் அந்த ராஜாவைப் பார்த்தார்.

'என் வாழ்நாளிலேயே நான் பார்க்கும் வீரமுள்ள ஆள் இவர் ஒருத்தர்தான்' என்றார். ராஜாவும் அதை ஒத்துக் கொண்டார்.

இந்தக் கதையைக் கேட்டு விட்டு இந்தக் கால ஆசாமி ஒருத்தர் சொன்னார்:

"என்னுடைய பிறந்தநாளுக்கும் நான் வருடாவருடம் விருந்து வைப்பேன். நண்பர்களையெல்லாம் கூப்பிடுவேன். அடுத்த வாரம் அந்தப் பிறந்தநாள் வருகிறது. இந்தத் தடவை எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு நண்பனை நான் கூப்பிடப் போவதில்லை" என்றார் உறுதியாக.

"ஏன் சேர் அப்படி?" என்றேன்.

"போன வருடம் பிறந்த நாளன்று வந்தவன் இன்றும் திரும்பிப் போகவில்லை சேர்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பாடசாலைக்கல்வியை விட்டு இடைவிலகிய மாணவர்களினையும் உயர் கல்வியினை தொடர முடியாத மாணவர்களையும் கருத்தில் கொண்டு பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், காய்ச்சி இணைத்தல், மரவேலை தொழில் நுட்பம், தகவல் கணனி வன்பொருள் திருத்துநர், தையல் கற்கை நெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணம் தொழிற்பயிற்சி நிலையத்தினால் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்- தேசிய சான்றிதழ், மோட்டார் சைக்கிள் திருத்துநர், முச்சக்கரவண்டிதிருத்துநர் ஆகியவற்றிற்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறியினை கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் தமது சுயவிபரக் கோவையினை பூர்த்தி செய்து கைதடி தொழிற்பயிற்சிநிலையத்தில் முன்னாள் சைவ சிறுவர் இல்லம், ஏ9 வீதி, கைதடி அல்லது இல.375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ இன்று புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு இப்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் கேட்டுள்ளார்.

(அ-2)

# தென்னியன்குளம் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு

ஜப்பான் நாட்டின் பீஸ் எனும் திட்டத்தின் கீழ் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் வலுப்படுத்தல் கருத்திட்டத்திற்கு அமைய 120 மில்லியன் ரூபா செலவில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தென்னியன்குளமும் அதனுடன் இணைந்த பிரதான கால்வாய்களும் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிதியத்திலிருந்து குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றும் கலிங்குப்பகுதி உயர்த்தப்பட்டுள்ளதுடன் குளத்தின் உட்பக்க மண் அணைப்பகுதி நீரினால் அரிக்கப்படாது இருப்பதாக அலைகற்கள் அடுக்கப்பட்டுள்ளன.

பிரதான நீர் வழங்கும் கால்வாய்களின் நாலரை கிலோ மீற்றர் நீளமான பகுதிக்கு சீமெந்து கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றத்தின் கீழ் இக்கிராமத்தில் குடியேறியுள்ள விவசாயக் குடும்பங்கள் பல நூற்றுக் கணக்கில் புனரமைக்கப்பட்டுள்ள இக்குளத்தினால் பயனடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-9-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 |
| பச்சைமிளகாய் | 25-30 | 30 |
| தக்காளி | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 40 | 40 |
| பூசணி | 25 | 20 |
| புடோல் | 35 | 40 |
| வாழைக்காய் | 15-20 | 15 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 |
| பெரிய வெங்காயம் | 85 | 65 |
| பாகற்காய் | 90-100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 |
| பயற்றங்காய் | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 90 |
| பீற்றூட் | -- | 60 |
| கறிமிளகாய் | 40 | 30 |
| முருங்கைக்காய் | 200 | 160 |
| போஞ்சி | 40 | 100 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 |
| கீரை – 1 பிடி | 8-15 | 30 |
| தேசிக்காய் | 40-60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 |

# இராசி பலன்

02.05.2012
(சித்திரை 20, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
ஏகாதசி மாலை 6.41 மணிவரை
பூரம் பிற்பகல் 12.05 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
ஏகாதசி விரதம்.

**மேடம்** தொழில் நலன் கருதி அதிக பிரயாசை எடுப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பூர்வ புண்ணிய கருமங்களில் அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளால் பெருமை சேரலாம்.

**இடபம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வீட்டில் விருந்தினர் வருகையால் அகமகிழ்வீர்கள், பெற்றோர் மீது அதிகம் பிரியம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் தோன்றும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பொது நலன்களில் ஆர்வம் காட்ட முற்படுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் ஏற்படும், புதிய பொருட்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் ஒளிவு, மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அனுபவத்தின் மூலம் பல விடயங்களை அறியும் வாய்ப்புண்டு.

**கன்னி** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வெளியூர் போக்குவரத்துக்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது.

**துலாம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத வகையில் ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும்.

**தனுசு** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், நிர்ப்பந்தமான நிலையுண்டு, குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும், புத்தி சாதுரியமாக நடந்து கொள்வீர்கள்.

**மகரம்** கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம்.


**கும்பம்** குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், உறவினர் வருகையுண்டு, முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும், உற்சாகமான நாள், புத்திசாதுரியமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**மீனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், தொழில் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

# மேதின நிகழ்வுகள்...

## யாழில்....



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எதிர்க் கட்சிகளின் கூட்டிணைந்த மே தினப் பேரணியும் கூட்டமும்.

## கிளிநொச்சியில்....



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற மே தின கூட்டம்.

## கொழும்பில்....



கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம்

## நெல்லியடியில்....



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி -அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இணைந்து நடத்திய மே தின பேரணியும் கூட்டமும்.

## கொழும்பில்....



ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் சஜித் பிரேமதாச தலைமையில் கொழும்பில் நடைபெற்ற மே தின நிகழ்வும் பிரேமதாச ஞாபகார்த்த நிகழ்வும்.

# முள்ளிவாய்க்காலின் மூன்றாம் ஆண்டில் ஹிலாரி கிளின்டனுக்கு கோரிக்கை மனு

**ஈழத்தமிழினத்தின் மீது நடந்தேறிய இனப்படுகொலையினை மையமாகக் கொண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனிடம் அமெரிக்க வாழ் தமிழ் உறவுகள் கோரிக்கை மனுவொன்றினை அனுப்பி வருகின்றனர்.**

மத்திய ஆபிரிக்காவின் ருவண்டா தேசத்தில் கடந்த 19 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தேறிய இனப்படுகொலையானது மானிட சமூகத்தின் நெஞ்சங்களில் இரத்தம் படிந்த நினைவுகளாக இருக்க ஈழத்தமிழினத்தின் மீது நடந்தேறிய இனப்படுகொலையினை மையமாகக் கொண்டு மனுவொன்றினை அனுப்பி வருகின்றனர்.

ருவண்டா இனப்படுகொலையின் 19 ஆவது ஆண்டினை நினைவேந்தி, ஹிலாரி கிளின்டன் அம்மையாரினால் சமீபத்தில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையினை கருத்தில் கொண்டு முள்ளிவாய்க்கால் மூன்றாம் ஆண்டினைமையப்படுத்தி ஹிலாரி கிளின்டன் அம்மையாரிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

தொலைநகல் மூலமாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கும் வெள்ளை மாளிகைக்கும் அனுப்பி வைக்கப்படும் இம்மனுவில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழராகிய நாங்கள் தமிழருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற தங்களின் ஆர்வத்திற்கும் தாங்கள் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் A/HRC/ 19/L.2 பிரேரணையை நிறைவேற்றி வைக்க எடுத்த அதி உச்ச முயற்சிகளுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்மக்கள் தியாகம் செய்ய வைக்கப்பட்ட மே 18 ஆம் திகதியன்றும் தாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்த பாரிய குற்றங்களுக்கு பொறுப்பு கூறுதலினால் ஏற்படுத்தப்பட வேண்டிய நல்லிணக்கத்தையும் ஒரு நம்பிக்கை அறிக்கையாக வெளியிட வேண்டுமென்பதாகும் என அக்கோரிக்கை மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டினை ஒருங்கிணைத்து வரும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் துணை அமைச்சர் சுபா சுந்தரலிங்கம் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், அமெரிக்க வாழ் தமிழர்கள் மட்டுமல்ல உலகத் தமிழர்கள் அனைவருமே இதில் பங்கெடுத்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார். (அ-2)

# பள்ளிவாசல் விவகாரத்தில் பதவியை துறக்கவும் தயார்

(கொழும்பு)

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரத்தால் அரசிலுள்ள முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் அவசரமாகக் கூடிய அகில இலங்கை மக்கள் காங்கிரசின் அதியுயர் பீடம் பள்ளிவாசல் விவகாரத்திற்கு தீர்வு காண்பதற்குப் பதவிகள் தடையாக இருப்பின் அவற்றைத் துறப்பதற்கும் தயாராகுவதெனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.அகில இலங்கை மக்கள் காங்கிரசின் அதியுயர் பீட கூட்டம் கட்சித்தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என கட்சியின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் நாட்டின் இஸ்லாமிய அதியுயர்பீடமான உலமாசபை எடுக்கின்ற தீர்மானத்தை அமுல்படுத்த தமது முழு அரசியல் பலத்தையும் பிரயோகிப்பதெனவும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு பதவிகள் தடையாக இருப்பின் அவற்றைத் துறப்பதெனவும் பிரதானமாக இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஏனைய தீர்மானங்களாக தம்புள்ள பள்ளிவாசல் மீதான தாக்குதலைக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் சம்பந்தப்பட்டோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலமா சபை முஸ்லிம்களுக்கு சரியான வழிகாட்டுதல்களை வழங்கி முஸ்லிம்களின் எதிர்ப்பை அமைதியான முறையில் நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்த எடுத்த முயற்சிகளுக்கு உலமா சபைக்கு நன்றி தெரிவிப்பதோடு அரசில் உள்நோக்கம்கொண்ட சில சக்திகள் உலமா சபையைப் பிளவுபடுத்தி தங்கள் அரசியல் இலக்குகளை அடைய எடுக்கின்ற முயற்சிகளைக் கட்சி கண்டிப்பதென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தம்புள்ள பள்ளி விவகாரத்தில் நியாயத்தின் பக்கம் நிற்கின்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஏனைய அரசியல் பிரமுகர்கள், மதப் பெரியார்கள் மற்றும் தமிழ், சிங்கள ச்கோதரர்கள் குறிப்பாக தம்புள்ள வாழ் சிங்கள மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் செயலாளர் நாயகம் ஹிமீட் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டை துண்டாட ரணில், சம்பந்தன் கூட்டு முயற்சி

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

பிரிவினைவாதத்தைத் தூண்டி விட்டு நாட்டை துண்டாட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் சம்பந்தன் குழுவினர் கூட்டு முயற்சியில் செயற்பட்டு வருகின்றனர்.

இதற்கு மேலும் வலிமை சேர்ப்பதற்காகவே மேதினத்தை நடத்தியுள்ளனர் என்று ஜாதிக ஹெறல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அமைச்சர் கூறுகையில்,

உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தலைநகரில் அரசுடன் இணைந்து மேதின நிகழ்வுகளை நடத்துகின்றோம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏனைய பிரிவினைவாத அமைப்புக்களுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மேதின நிகழ்வுகளை நடத்துவதாக கூறி இன மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்றார். (அ-2)

# கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் நபருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கசிப்புக்காய்ச்சிய நபருக்கு ஒரு வருடத்தின் பின்னர் யாழ். நிதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கடந்த வருட முற்பகுதியில் இராசாவின் தோட்டம் பகுதியில் கசிப்பு காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தினைச் சேர்ந்த நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு இதுவரை கால வழக்குகளிலும் தான் நிரபராதி எனவும் கசிப்பு காய்ச்சவில்லை எனவும் வாதாடி வந்துள்ளார்.

இவருக்கெதிரான சாட்சியங்களும் மன்றில் சமூகமளிக்காததன் காரணமாக இது வரை காலமும் நடைபெற்ற வழக்குகளில் குறித்த நபருக்கு எதிரான குற்றம் நிரூபிக்க முடியாமல் போனது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் மா. கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இவருக்கெதிரான குற்றம் நிரூபணமானதோடு குறித்த நபரும் குற்றத்தினை ஒப்புக் கொண்டார்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார்.

குறித்த நபர் சார்பில் சட்டத்தரணி எம்.றெமி டியஸ் ஆஜராகி இருந்தார். (அ-4)



யாழ்.மானிப்பாய் இந்துக்.கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி முதல்வர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாண்ட்வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஆசிய செயற்றிட்ட சேவைகள் லிமிட்டெட் முகாமைத்துவ இணைப்பாளர் திருக்குமார் நடேசன் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- அலுவலகச் செய்தி யாளர)*

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இருபாலை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறுமென தேவஸ்தான திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9-4)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் சித்திரை மாத ஞானச்சுடர் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலானது திருவிளையாடல், சிறுவர் கதைகள், ஆன்மீகத்தகவல்கள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (அ-9)

## புதுவருட அன்பளிப்பு நிகழ்வு நாளை

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்களுக்கான புதுவருட அன்பளிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்க ஆணையாளர் வீ.கே அருந்தவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கடந்த வருடத்தின் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் இலாபம் ஈட்டிய கிளை முகாமையாளர்கள், கடமைக்கு விடுமுறைகளை எடுக்காத பணியாளர்கள், நேரந்தவறாத பணியாளர்கள், சிறப்பாக செயலாற்றிய சாரதிகள் போன்றோர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-3-24)

# மாணவச் சமுதாயத்தின் ஆங்கிலமொழி ஆற்றல் மேம்படுத்தப்பட வேண்டும்

**நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**

இன்றைய உலக ஒழுங்கில் ஆங்கில மொழி இன்றியமையாததாகியுள்ளதுடன் உலகமொழியாக வியாபகமாகியுள்ளது. தொழில் சந்தை அதனை வெகுவாக அழுத்தி நிபந்தனையாக்குகின்றது. இந்நிலையில் எங்கள் மாணவர் சமுதாயத்தின் ஆங்கில மொழியாற்றலை மேம்படுத்துதல் எம் கடனாகின்றது. மாணவர்கள் ஆங்கில மொழியின் தேவையை உணர்ந்த போதும் அது கடினமாக உள்ளதாக முறையிடுகின்றனர். உண்மையில் இம் மாணவர்கள் எந்த மொழியையும் பயிலும் வல்லமை கொண்டவர்கள். இவர்கள் பிரச்சினையை இவர்களின் அனுபவ தளத்தில் நின்று நோக்குதல் அவசியம் என முன்னாள் துணைவேந்தர், சமூகவியல் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற ஆங்கில ஆசிரியை நாகநந்தினி சங்கரப்பிள்ளையின் வீனஸ் கவிதைநூல் வெளியீட்டு வைபவத்தின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கவிதை இதயத்தின் மொழி, அதனை மொழி பயில்வுக்கான ஊடகமாக பயன்படுத்தும் போது மாணவர்கள் மனவிருப்புடனும் ஆர்வத்துடனும் மொழியை பயிலும் நிலை ஏற்படும்.

ஆங்கில மொழிக்குமட்டுமன்றி எந்த மொழி பயில்வுக்கும் இலக்கியம் சிறந்த ஊடகம் என்பதனை உலக கல்வியியல் அனுபவங்கள் உணர்த்துகின்றன. சிறந்த ஆங்கில ஆசிரியராக அறியப்படும் நாகநந்தினி அவர்களின் கவிதை நூல் மாணவர்கள் மத்தியில் வெளியாகும் இந்நாள் மொழிகற்பித்தலில் இலக்கியங்களை ஊடமாக்கம் கலைத் திட்ட, கற்பித்தல் மாற்றங்களுக்கான விழிப்புக்கு வழிசமைக்க வேண்டும். ஆங்கில புலமையாளரும் கல்வியாளரும் இதில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கவிதை நூல் வெளியீட்டுரையை பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன், விமர்சன உரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறை விரிவுரையாளர்கள் திருமதி சிவாஜி, ஆசிரியர் பரந்தாமன், பேராசிரியர் ப. கோபாலகிருஸ்ணா, மகாஜன கல்லூரி அதிபர் வேல்சிவானந்தன், சென் ஹென்றிஸ் கல்லூரி அதிபர் ஆகியோர் நிகழ்த்தினர். (அ)



## சொற்பொழிவு

பருத்தித்துறை கற்பக விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் சிறப்பு நிகழ்வாக மகா கணபதியின் மாண்பு என்னும் தலைப்பில் சைவப்புலவர் பொன். சுகந்தன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு இன்று புதன்கிழமையும், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-9)

# ஆளணிப்பற்றாக்குறையுடன் அம்பன் வைத்தியசாலை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் பணியாளர்கள், மருந்துகள் இன்மையால் அப்பகுதி நோயாளிகள் பலமைல் தூரம் சென்று தமது வைத்தியசேவைகளை பெற வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேசம் யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்து அங்கிருந்த மக்கள் வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற நிலையில் மீள குடியமர்ந்துள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்டு நீண்டகாலமாகியும் மக்களின் முக்கிய பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலேயே உள்ளது. அப்பகுதி மக்களுக்கு அம்பன் வைத்தியசாலை சகல வசதிகளுடனும் இயங்க வேண்டிய தேவை மிக முக்கியமாக உள்ளது.

எனவே அவ்வைத்தியசாலை பலகுறைபாடுகளுடன் இயங்குவதனால் அப்பகுதி மக்கள் தமது திடீர் வைத்திய தேவைகளை பெறமுடியாமல் பல மைல் தூரம் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அம்பன் பிரதேச வைத்தியசாலையை ஓரளவேனும் சிறப்பாக நடத்த ஆவன செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)




## கண்காட்சியும் கௌரவிப்பும்

சுதந்திர ஊடகக்குரல் நடத்தும் சர்வதேச ஊடக சுதந்திர தினவிழா- 2012 புகைப் படக்கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்திலும் ஊடகவியலாளர் கௌரவிப்பு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது. (எ-11)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை,முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)


# இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டியில் சம்பியன்கள் தெரிவு

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இருபாலாருக்குமான கிரிக்கெட் இறுதிப்போட்டியில் யாழ்.மத்தியகல்லூரி அணியும் சுழிபுரம் விக்டோறியா கல்லூரி அணியும் யாழ். மாவட்ட சம்பியனாகின.

இமையாணன் மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் இறுதிப்போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி அணியை தோற்கடித்து யாழ் மத்தியகல்லூரி அணி சம்பியனாகியது. மூன்றாம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிபெற்றுக் கொண்டது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியை தோற்கடித்து சுழிபுரம் விக்டோறியா கல்லூரி அணி யாழ் மாவட்ட சம்பியனாகியது.மூன்றாம் இடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது. (அ-3-24)





யாழ். சிறைச்சாலையில் சிறைக்கைதிகளுக்கான புதுவருடப் பிறப்பு கொண்டாட்டம் அண்மையில் சிறைச்சாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். நீதவான் மா. கணேசராசா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.என். செனரத் பண்டார நிற்பதையும் மற்றும் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வு நடைபெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ. சாளீன்)

# அன்பை கொண்டாடுதல்



## ஆன்மீகம் 43

ஆசைகள்

*மக்கள் ஏன் பதவிமோகம் கொண்டு அலைகிறார்கள்?*


மக்கள் பதவிக்காக அலைகிறார்கள். ஏனெனில், அப்பொழுதுதான் எல்லாரையும் கவரலாம், தனக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். அதிகாரம் அல்லது பதவி என்பது, செல்வத்தைப்போல் ஒரு ஊடகம்தான்! அவருடைய பேராசையெல்லாம் அதை எட்டுவதுதான். பணம் அல்லது பதவி இவற்றில் ஏதேனும் ஒன்றை அடைவதுதான் வாழ்க்கையின் எல்லை என்று செயற்படுவார்கள், வாழ்கிறார்கள் என்று சொல்வதைவிட, ஏதோ உயிர் வாழ்கிறார்கள் என்றுதான் கொள்ளவேண்டும்.

நீங்கள்தான் சக்தி என்று உணர்ந்து, நீங்கள் தெளிவும் ஞானமும் பெற்றவர் என்று உங்களை நீங்கள் உணர முடியாதபொழுதுதான் வெளியே அதிகாரம், செல்வாக்கு இவற்றைத் தேடி அலைகிறீர்கள்!

உங்களுக்கு திறமை, அன்பு, ஆசை இல்லாவிடில்தான், அல்லது நீங்கள் கள்ளங்கபடமற்று, குழந்தையைப்போல வெகுளியாக இருக்க முடியாத போதுதான் மற்றவர் கவனத்தையும் அங்கீகாரத்தையும் தேடியலைவீர்கள். சில அரசியல்வாதிகளைப்போல் அதிகார மோகம் கொண்டு அதை அடைய முயல்வீர்கள். ஒரு கலைஞனைப்போல், ஒரு தன்னார்வத்தொண்டர்போல் நீங்கள் திறமையுள்ளவராக இருக்கமுடியாவிட்டால், இந்த சமுதாயத்திற்கு அதிகளவு பயன்தர முடியா விட்டால் தான் வேறு ஏதாவது வழியில் செல்வாக்கு கிடைக்காதா என்று பார்ப்பீர்கள். இந்த சமுதாயத்தில் ஒரு மாற்றம் கொண்டுவர ஆசை, அன்பு எதுவும் இல்லாமல் வாழும் பொழுது தான் செல்வாக்கு வேண்டும் என்று தவிக்கிறீர்கள்.

நீங்கள் வெகுளியாக கள்ளங்கபடமற்று இருக்கமுடியாமல், நீங்கள் இந்த உலகம் முழுவதற்கும் சொந்தமானவர் என்ற உணர்வு இல்லாமலும் இருந்தால், அப்பொழுதுதான் செல்வாக்கைத் தேடி அலைகிறீர்கள்.

உண்மையான சக்தி என்பது ஆன்மீக சக்திதான். உண்மையான தன்னம்பிக்கை, பலம், மகிழ்ச்சி இவை



யாவுமே ஆன்மீகத்தில் இருந்து தான் ஊற்றாய் வெளிவருகிறது. எவர் ஒருவர் இதை அறிந்து வைத்திருக்கிறாரோ யாருக்கு இது இருக்கிறதோ அவர் செல்வாக்கை வெளியே தேடி அலையமாட்டார்.

குறிக்கோள்

தீவிரமான குறிக்கோள் தன்னம்பிக்கை குறைபாட்டையே காட்டுகிறது. உங்களால் ஒன்றை சுலபமாக அடைந்துவிட முடியும் என்று அறிந்து கொண்டால், நீங்கள் அதீத ஆசை உடையவராக இருக்க மாட்டீர்கள். இயல்பாக அதைப்பற்றி நம்பிக்கையுடன் இருப்பீர்கள்! உங்கள் தீவிர ஆசை, சவாலையும், உறுதியற்ற தன்மையையுமே குறிக்கிறது. ஆகையால் அது நம்பிக்கைக்கு எதிரான ஒன்றாக ஆகிவிடுகிறது! பரிபூரணமாக தன்னம்பிக்கை உடையவர், அதீதமான ஆசை உடையவராக இருக்கமாட்டார்; அதேசமயம், சுத்தமாக நம்பிக்கையே இல்லாதவரும் அதீத ஆசை உடையவராக இருக்கமாட்டார். அதீத ஆசை உடையவராக இருப்பதற்கு, உங்களுக்குள் கொஞ்சமாக நம்பிக்கையும், தான் என்பது பற்றிய விவரமே அறியாமல், முழு அறியாமை உடையவராக இருக்க வேண்டும். *தன்னைப் பற்றிய அறிதல்* இன்றி முழு நம்பிக்கை உடையவராக இருப்பது அநேகமாக இயலாத ஒன்றாகவே இருக்கிறது.

மக்கள், தாங்கள் அதீத ஆசை அல்லது குறிக்கோளை எட்டுவதில் உள்ள அதிக ஆர்வத்தை பற்றி கர்வம்கொள்வர். உங்களால் அதிக பிரயத்தனம் இன்றி எதைச் சாதிக்க முடிகிறதோ அதைப்பற்றி நீங்கள் அதீத ஆசை கொள்ளவேண்டியது இல்லை! ஒரு செயலைச் செய்து முடிக்க, மிகுந்த பிரயத்தனம் தேவையாக இருந்தாலோ, அது ஒரு சவாலாகத்தோன்றினாலோ அதைச் செய்து சாதிக்க முடியுமா என்று உறுதியாகத் தெரியாவிட்டாலோதான், நீங்கள் அதீத ஆசையுடன் இருக்கலாம். அத்தருணத்தின் மகிழ்ச்சியை அதீத ஆசை அடித்துச் சென்றுவிடுகிறது. (தொடரும்)

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**


# உங்கள் கைரேகை பலன்கள்

## 43

### இருதய இரேகையிலுள்ள குற்றங்குறைகளும் பலாபலன்களும்

*9.* இருதய இரேகை துண்டுபட்டு ஒருமுனை சனி மேட்டை நோக்கியிருப்பது வாயு சம்பந்தமான நோய்களைக் குறிக்கும். மேலும் சனி ஆதிக்கத்தின் செல்வாக்கு அல்லது பலன் குறையும். இது ஆயுள் எல்லைவரை நீடிக்கும்.


*10.* இருதய இரேகை அடுத்தடுத்துத் துண்டுபட்டிருந்தால் ஆரோக்கியத்தில்அடிக்கடி பலவீனத்தையும் அன்புள்ளவிடத்தில் துடங்கலையும் குறிக்கும்.



*11.* இருதய இரேகை இரண்டு துண்டாகிப் பிற்பகுதியின் முன் புத்தி இரேகையில் படிந்து விடுமானால் இருதய இரேகை பிரிந்து காலளவில் சில அசந்தர்ப்பத்தைக் குறிக்கும்.

*12.* இருதய இரேகையின் பிற்பகுதியின் இறுதி புத்தி இரேகையைக் குறுக்கிட்டுச் சென்றால் அந்தக்கால அளவில் திடீரெனச் சம்பவிக்கும் மூளை நோயைக் குறிக்கும்.

*13.* இருதய இரேகை புத்தி இரேகையோடு சந்திக்குங்கால் ஒரு நக்ஷத்திரக் குறியும் காணப்படில், அந்தக் கால அளவில் மூளை ஜுரம், சில சமயம் ஆயுள் ஆபத்தையும் கொடுக்கலாம். அதேகால அளவில் இதர இரேகைகளின் குறிகளையும் கவனித்துக்கொள்ளவேண்டும்.




*14.* இருதய இரேகையின் மத்தியில் ஒரு நக்ஷத்திரக்குறி தோன்றியிருந்தால், அந்தக் கால அளவில் மரண பயம் ஏற்படலாம் அல்லது கொடிய இருதய நோய் உண்டாகலாம்.

*15.* இருதய இரேகை துண்டுபட்டு படத்திலுள்ளபடி இணைப்பிருந்தால், அந்தக் கால அளவில் இருதய நோய் உண்டாவதையும் பிறகு படிப்படியாக குணமடைவதையும் குறிக்கும்.

16.இருதய இரேகை துண்டுபட்டவிடத்தில் பாதுகாப்பு இரேகையும் உடனிருந்தால் இருதய நோய்வரினும் அவ்வளவு கஷ்டங்கொடாது என்பதைக் குறிக்கும்.

இருதய இரேகையில் காணப்படும் குற்றங்குறைகள் பொதுவாய் ஸ்தூல தேகத்தின் ஆரோக்கிய நிலைமையையும் குறிப்பாய் இருதய அங்கத்தையும் பாதிப்பதாகும். இருதய சக்தியின் ஓட்டமே தேகம் நிலைப்பதற்குக் காரணமாயிருக்கிறது. மக்களின் கையில் இருதய இரேகையின் விசித்திரமே வேறுபாடுகளைக் கொடுத்து வருகிறது. இருதய இரேகையைப் பார்த்தளவில் யாதும் திடீரெனக் கூறிவிட முடியாது. இது பல இரேகாம்சங்களுக்கும் காரணமாயிருப்பதால், ஒத்திட்டுணர்ந்தே பலனை அறியவேண்டும். இருதய இரேகை தங்கு தடையின்றி கையில் குறிக்கே போயிருந்தால், அத்தகையோர் இரேகைப் பலனையோ, சோதிடப் பலனையோ அறிந்து கொள்ள இஷ்டப்படார். ஏனெனில், இவர்களிடம் வாத தர்க்கம் கிடையா. முடிவான நிலைமையிலேயே பேசுவர். இதில் வெளிவந்திருக்கும் படங்கள் ஒரு சிறிது அனுபவத்தில் உதவி புரிவதற்கேயாகும். நன்கு ஆராய்ந்து காரணகாரியங்களோடு பலனை அறிவதுதான் சிலாக்கியமாகும். (தொடரும்)

## ரேகைகளும் கிரகங்களும்

**சக்தி**

# மனைவியால் சொத்து சேருமா?

இது ஒரு கேள்வி!

பையனைப் பெற்ற பெற்றோர்களுக்கு இது ஒரு நப்பாசை. வீட்டுக்கு மருமகளாக வரும் பெண் எவ்வளவு சீதனம் கொண்டு வருவாள் என்பதே குறிக்கோள்.

ஜோதிடரிடம் பையனின் ஜாதகத்தைக் காட்டும் போது மனைவியால் இவருக்கு சொத்து வரும் என்று ஜோதிடர்கள் சொன்னால் மகிழ்ச்சி.

அதே சமயம் பெண்களைப் பெற்ற பெற்றோர்களுக்கு தங்கள் மகளுக்கு கணவனாக வரும் பையன் மூலமாக தங்கள் பெண்ணின் வாழ்க்கை எந்த அளவுக்கு உயரும் என்பதே பிரச்சினை. இவர்களிடத்தில் கொஞ்சம் நியாயமிருக்கிறது. ஏனென்றால் ஆண் வர்க்கம் தான் சம்பாதிக்கத் தகுந்த யோக்யதை பெற்றவர்கள் என்பது நமது பாரம்பரியம். மகளுக்கு கணவனாக வரப் போகிறவனால் பெண் எந்த அளவு நிம்மதியான வாழ்க்கையை அடைய முடியும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமுண்டு.

ஆனால், மனைவியால் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள விரும்பும் ஆண் மகனைப் பற்றி என்னவென்று எண்ணுவது? குடும்பம் நடத்தக் கூடிய பாங்கு, குணச்சிறப்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய நற்குணங்களைத் தானே ஆண் வர்க்கம் எதிர்பார்க்க வேண்டும். இதை விடுத்து மனைவியால் சொத்து வரும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்?

மேலும் பல பெண்கள் இந்தக் கொடுமையால் திருமணமாகாமலேயே இருக்கிறார்கள். சிலர் சம்பாதித்து பணம் சேர்த்துக் கொண்டு திருமணம் செய்து கொள்ளலாம் என்கிற நோக்கில் வேலை பார்க்க சென்று விடுகிறார்கள். இதனால் வயதேறி விடுகிறது. மேலும் இப்போது வரதட்சணை எதிர்ப்பும் நடைமுறையில் இருந்து வருகிறது.

வரதட்சணை கொடுப்பதும் குற்றம் வாங்குவதும் குற்றம். பையனைப் பெற்ற பெற்றோர்கள் இதை நன்கு சிந்திக்க வேண்டும். பையனின் வருங்காலத்தை நல்லபடி சிறப்பிக்கச் செய்ய வேறு வழிகளில் இறங்க வேண்டுமே தவிர மணமகளால் என்ன ஆதாயம் என்று பார்க்கக் கூடாது.

பெற்றோர்களை விட்டுத் தள்ளுங்கள். பையன்களுக்கு கூட இது ஆசை!

ஏன்? திருமணமாகி குழந்தை குட்டிகள் இருக்கும் ஆண்கள் கூட வேறு ஒரு பெண் நேசம் கிடைத்தால் அவளால் ஏதாவது லாபமுண்டாவென்று எதிர்பார்ப்பவர்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

இது என்ன ஆசை?

என்னிடம் வரும் சிலர் வேறு ஜோதிடர்கள் அப்படிக் கூறியிருப்பதாக தங்கள் கருத்தை மெல்ல வெளியிடுகிறார்கள். சிலரது ஜாதகப்படி அப்படியும் அமைவதுண்டு. இதை நான் மறுக்கவில்லை. ஆனால் எல்லார்க்குமல்ல.

நண்பர் வைத்தியநாதன் ஓர் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் தான். படிப்பும் அதிகமில்லை. உயர்தரம் படிப்பதற்குள் போதுமென்றாகி விட்டது. அரச உத்தியோகத்தில் சேர்ந்தார். அவர் பெற்றோர்கள் தங்களுடைய மருமகளாக வருபவள் நிறைய சீதனம் கொண்டு வர வேண்டும் என ஆசைப்பட்டனர்.

வைத்தியநாதனின் ஜாதகத்தைப்பார்த்த ஜோதிடர்களும் மனைவியால் பாக்கியமுண்டு என்றே கூறி வந்தனர். ஏன் சொல்ல மாட்டார்கள்? அவரது ஜாதகம் ரிஷப லக்னம். தனாதிபதி புதனும், லாபாதிபதி குருவும், களத்திராபதி செவ்வாயோடு கலந்து பாக்கியஸ்தானம் பெற்றிருந்தார்கள்.

களத்திரகாரகனாகவும், லக்னாதிபதியாகவுமிருக்கின்ற சுக்கிர பகவான் லாபஸ்தானம் பெற்று உச்சமடைந்திருக்கிறான். ஏன் மனைவியால் சொத்து வராது? கண்டிப்பாக வரத்தானே வேண்டும். சுமாரான வசதி படைத்த இடத்தில் தான் திருமணம் நிச்சயம் ஆனது. ஒரே பெண் என்பதால் வீடு, நிலபுலன்கள் முதலியவற்றை அந்தப் பெண்ணுக்கே எழுதி வைத்து விட்டு மாப்பிள்ளையையும் வீட்டிலேயே வைத்துக் கொண்டார் பெண்ணின் தகப்பனார். சொந்தமாகப் பெரிய ஹோட்டல் ஒன்றுமிருந்தது. அதன் நிர்வாகப் பொறுப்பு வைத்தியநாதனுக்கு மாறியது. கேட்பானேன்– சகல பாக்கியங்களையும் பெற்று விட்டான் வைத்தியநாதன்.

இம் மாதிரி எல்லார்க்கும் அமைய வேண்டும் என்பது தான் ஆசை. சரி அப்படியே அமைவதாக வைத்துக் கொள்வோம். வைத்தியநாதனிடம் காணப்படும் பொறுமை எல்லோர்க்கும் வருமா? தங்கள் குடையின் கீழ் தான் வைத்தியநாதனின் வாழ்க்கை என்பதை அறிந்த அப் பெண் சக்கை போடு




போட்டாள். ஒவ்வொன்றிலும் கணவனை மிஞ்சி நடந்து வந்தாள். கணவனைத் தூக்கி எறிந்து பேசுவாள். அடக்கமென்பது சிறிதேனும் இல்லை. எப்படியிருக்கும் வைத்தியநாதனுக்கு! மனைவி சொத்தை விரும்பியதால் ஏற்பட்ட விளைவு தானே இது! ஏழை எளிய குடும்பத்தில் பிறந்தவளானால் எவ்வளவு குணச்சிறப்பு பெற்றிருப்பாள் என்று எண்ணத் தொடங்கி விட்டான். வாழ்க்கை வசதியாக இருந்தும் உள்ளூரப் புகைந்து கொண்டிருந்தது. சில வருடங்கள் ஓடின. பொறுமை எல்லை கடந்து போயிற்று. ஒருநாள் இந்தச் சுகமெல்லாம் போதும், சாதாரணமாக வாழ்ந்தால் போதுமென்றாகி விட்டது. சொல்லாமல் கொள்ளாமல் ஓட்டம் பிடித்தான். முடிவு விவாகரத்து!

பார்த்தீர்களா? மனைவி மூலம் வரும் சொத்தின் மேல் ஆசை வைத்தால் எப்படியாகிறது.

இன்னொரு நண்பர் பாஸ்கரனை எடுத்துக் கொள்வோம். மிகவும் அறிவாளி. அவன் ஜாதகப்படி மனைவி மூலம் சொத்துக் கிடைக்காது என்றேன். நான் அதை விரும்பவில்லை என்றான். தன் திறமையில் முழு நம்பிக்கை அவனுக்கு. சுமார் உயர்தரம் வரை படித்த மிக எளிய குடும்பத்திலுள்ள பெண்ணை மணம்முடித்தான். அவளால் சொத்து வரவில்லை. ஆனால் அவள் வந்த அதிர்ஷ்டம் வீட்டில் லட்சுமிகரம் பொங்கியது. குணமுள்ள மனைவி, கணவன் கருத்துக்கு இசைந்து நடந்து கொள்பவள். வீட்டிலுள்ள எல்லோருக்கும் அவள் பால் அன்பு வளர்ந்தது. வெகு சீக்கிரத்தில் நன்றாக சம்பாதித்து வீடு, வாகனம் முதலியவைகளைச் சேர்த்தார்கள்.

கணவனால் பாக்கியம் பெற்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். இது தான் நியாயமும் கூட. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் இருந்தாலும் அன்பளிப்பு என்ற பெயரால் பெண்ணைப் பெற்றவர்கள் சில ஆயிரங்களை செலவிட்டு விடுகிறார்கள். இந்நிலை அடியோடு மாற வேண்டும்.

சரி இருக்கட்டும் ஜோதிட சாஸ்திரப்படி ஜாதகம் எப்படியிருந்தால் மனைவி மூலமாகவோ அல்லது வேறு பெண்ணாலோ ஒருவர் சொத்து அடைய முடியுமென்று பார்க்கலாம்.

ஜென்ம லக்னத்துக்கு ஏழாம் இடமான களத்திரஸ்தானாதிபதி உச்சம்–ஆட்சி பெற்றிருந்தால் மட்டும் போதாது. ஏழாம் இடத்து அதிபதியோடு லாபாதிபதி லாபஸ்தானம் பெற்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால் மனைவியால் லாபமேற்படும். அப்படி வரும் லாபம் சொத்து மூலமாக வரும் என்று சொல்வதற்கில்லை. நல்லபடி சம்பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கும் பெண்ணே வாழ்க்கைத் துணைவியாக வர முடியும்.

ஆனால் ஜென்ம லக்னம் சரலக்னங்களில் ஒன்றாக இருந்து விட்டால் லாபஸ்தானமேறிய கிரகம் பாதக ஸ்தானம் பெற்றதாகி விடும். எனவே சரலக்னக்காரர்களுக்கு மனைவியால் லாபம் எனச் சொல்வதற்கில்லை. ஸ்திர லக்னங்களான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் முதலிய லக்னங்களில் பிறந்தவர்களுக்கு மனைவியால் லாபமேற்படலாம். விருச்சிக லக்னத்துக்கு மட்டும் களத்திராதிபதியான சுக்ரன் லாபஸ்தானம் ஏறினால் நீச்சமடைந்திருக்கிறானே என்று கேட்கலாம்: வாஸ்தவம் தான் ஆனால் நீச்சமடைந்தாலும் நான்கில் ஒரு பங்காவது நன்மையுண்டு. ஒருக்கால் புதனும் அங்கிருந்து விட்டால் சுக்ரனுக்கு நீச்ச பங்கம் ஏற்பட்டு விடுகின்றது.

எந்த ஸ்திர– உபய லக்னமானாலும் களஸ்திராதிபதி லாபஸ்தானம் பெற்று அவனோடு பூமிக்காரகனான செவ்வாயும் சேர்ந்தால் வீடு– நிலம் போன்ற ஸ்திர சொத்துக்கள் ஜாதகனை வந்தடையும். புதன் சேர்ந்தால் மனைவி கல்வி வளம் பெற்று உத்தியோகம் செய்து ஜீவிப்பவர்களாக இருப்பார்கள். லாபாதிபதி களஸ்திரஸ்தானம் பெற்றாலும் களஸ்திரம் மூலமாக அதாவது மனைவியால் சொத்து சேரும்.

அதுபோலவே பாக்கியாதிபதியான கிரகமும் 7 இற்குரிய கிரகமும் ஒன்றுகூடினாலும் மனைவியால் சொத்து ஏற்படலாம். பாக்கிய ஸ்தானத்தில் களஸ்திர ஸ்தானதிபதி இருந்தால் மனைவியால் சொத்து சேரும். இவர்களுடன் எந்த கிரகம் சேர்கிறதோ அந்த காரக விசேடத்தால் மனைவி மூலம் சொத்துக்கிடைக்கும். இவை மட்டுமல்ல. தனாதிபதி நிலையும் நன்கு கவனிக்க வேண்டும்.

என்னதான் மனைவி மூலமாக சொத்து கிடைத்தாலும் தனஸ்தானாதிபதி கெட்டிருந்தால் எல்லாம் தேய்ந்துவிடும். கெட்டிருப்பது என்பது பகை– நீச்சம் பெற்றிருப்பதும் 6, 8,12 இல் மறைவதும் ஆகும். ஆகவே தனாதிபதி நிலையையும் நன்கு கவனிக்க வேண்டியுள்ளது.

பாக்கியாதிபதியின் சேர்க்கையும் பாக்கிய ஸ்தானத்தில் களஸ்திர ஸ்தானாதிபதியின் இருக்கையும் மனைவி மூலமாக வரும் சொத்து முதலியவற்றை குறிப்பதாக கூறினோம். இங்கே ஸ்திர லக்னங்களுக்கு இது ஆகாது என்பதை உணர வேண்டும். நான்கு ஸ்திர லக்னங்களுக்கும் பாக்கிய ஸ்தானம் ஓர் பாதக ஸ்தானமாகும்.

## இலங்கையில் பணியாற்றிய இராஜதந்திரிக்கு பாதுகாப்புத் திணைக்களத்தில் உயர் பதவி

(கொழும்பு)

இலங்கையில் முன்னர் பணியாற்றிய இந்திய வம்சாவளி அமெரிக்கர் ஒருவர் அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்களமான பென்டகனின் உயர்நிலை பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் இனத்துவக் கற்றைகளுக்கான அனைத்துலக நிலையத்தின் தெற்காசிய சிறுபான்மையினர் உரிமைகள் என்ற திட்டத்தின் பணிப்பாளராகவும் பின்னர் வொய்ஸ் ஒவ் என்ற அமெரிக்காவின் கொழும்பு செய்தியாளராகவும் பணியாற்றிய விக்ரம்சிங் என்பவர் பென்டகனில் உயர் பதவியை பெற்றுள்ளாார்.

பென்டகனின் தெற்கு மற்றும் தென் கிழக்காசியாவுக்கான பிரதி உதவி பாதுகாப்பு செயலர் பதவிக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பாதுகாப்பு விவகாரங்களில் இவர் முக்கியமான பாத்திரத்தை வகிப்பார் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கொள்கை விவகாரங்களுக்கான பதில் கீழ்நிலைச் செயலர் ஜேம்ஸ் மில்லர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் இடம்பெற்ற போர்கள் பற்றிய உள்ளக மீளாய்வுக்குழுக்களுக்கும் இவர் தலைமையேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

## திராய்மடு பகுதியில் கைக்குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பின் புறநகர் பகுதியான திராய்மடு பகுதியில் உள்ள சுவிஸ் திராய்மடு சுனாமி வீட்டுத்திட்ட வீடு ஒன்றில் இருந்து இரண்டு கைக்குண்டுகளை மட்டக்களப்பு பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை அப்பகுதியில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் வளவொன் றில் இருந்து பொலிஸார் இந்த கைக்குண்டுகளை மீட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-9)

## தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம்; சென்னை தூதரகம் முற்றுகை




தம்புள்ளயில் உள்ள 67 ஆண்டுகள் பாரம்பரியம்மிக்க பள்ளிவாசலை சேதப்படுத்தி முற்றிலும் தகர்க்க முயலும் புத்த குருமார்களின் செயலையும் அதற்கு துணை போகும் இலங்கை ஜனாதிபதி அரசை கண்டித்தும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நேற்றுமுன்தினம் த.மு.க பொதுச் செயலாளர் அப்துல் சமது தலைமையில் நடைபெற்றது.


முதற்கட்டமாக இலங்கை அரசை கண்டித்து மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்கா அருகில் போராட்டம் நடந்தது. அப்போது இலங்கை அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பியவர்கள், ராஜபக்ஷ உருவப் பொம்மையை எரித்தனர். பின்னர் அங்கிருந்து பேரணியாக சென்று இலங்கை தூதரகத்தை முற்றுகையிட புறப்பட்டனர். அப்போது அந்த இடத்தில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் போராட்டக்காரர்களை கைது செய்தனர்.

எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ, , ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் மல்லை சத்யா, தென் சென்னை மாவட்ட செயலாளர் வேளச்சேரி மணிமாறன், ம.ம.க. பொதுச் செயலாளர் எம். தமிமுன் அன்சாரி, விடுதலைச்சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் வன்னியரசு உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

(அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 118



ஹங்கேரியக் குடியரசின் தலைவர் ஹோர்டி, ஹிட்லருடன்

மேலும் தாங்கள் இழைத்த கொடுமைகளுக்குத் தண்டனையை அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியுமென்றும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் உதவியால் ஆட்சியில் நிலைத்திருக்கலாம் என்றும் ஹோர்டிஸ்டுகள் கணக்கிட்டனர். அதோடுகூட பேச்சு வார்த்தைகளை இழுத்தடிப்பதை நோக்கமாகக் கொண்டு தந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஹங்கேரிய சர்வாதிகாரியின் மனதில், ஹிட்லர் படைகளால் சோவியத் துருப்புகளின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி அவற்றைக் கர்பாத்து மலைத் தொடருக்குப் பின்னால் தள்ள இயலும் என்று ஒரு நம்பிக்கையிருந்தது. ஹங்கேரிய பரப்பில் சண்டைகள் மூண்டபோது கூட இந்த நம்பிக்கை ஹோர்டியின் மனதை விட்டு அகலவில்லை. ஆனால், செஞ்சேனையின் வெற்றிகரமான முன்னேற்றம் ஹோர்டியின் எல்லா கணிப்புகளையும் தவிடு பொடியாக்கியதால், சமரசம் செய்து கொள்வது நல்லது என்று மாஸ்கோவிலிருந்த தன் தூதுக்குழுவுக்குழுவிற்கு கூறும்படி அவன் நிர்ப்பந்திக்கப்பட்டான். நேச நாடுகளின் சமரச நிபந்தனைகளை மையக துணைத்தலைவர் ஜெனரல் அன்தோனவ் ஜெனரல் ஃபரகோவிற்கு ஒரு செய்தி அனுப்பினார். அந்தச் செய்தி கிடைத்த 48 மணி நேரத்திற்குள் ஹங்கேரிய அரசாங்கம் சமரசத்தின் பூர்வாங்க நிபந்தனைகள் சம்பந்தமாக தான் ஏற்றுக்கொண்ட உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அதில் கோரப்பட்டிருந்தது. முதலாவதாக இது ஜேர்மனியுடன் உள்ள எல்லாத் தொடர்புகளையும் முறித்து அதற்கெதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தொடக்க வேண்டும். ருமேனிய, யுகோஸ்லாவியா, செக்கோஸ்லோவாக்கியா பரப்புகளிலிருந்து தனது துருப்புகளை வெளியேற்றத் தொடங்க வேண்டும். அக்டோபர் 16 ஆம்திகதி 8 மணி வாக்கில் ஜேர்மனிய

ஹங்கேரியில் அரசுக் கவிழ்ப்பிற்கு ஏற்பாடு செய்தது. ஆட்சிக்கு வந்த ஹங்கேரிய பாசிஸ்டுகளின் தலைவன் சலாஷி சோவியத் இராணுவத்திற்கு எதிரான போராட்டத்தைத் தொடருமாறு துருப்புகளுக்கு கட்டளையிட்டான். இது ஹங்கேரிய முற்போக்குச் சக்திகளின் எதிர்ப்பு அலையை தோற்றுவித்தது. ஆழ்ந்த தலைமறைவில் இயங்கிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அறைகூவலுக்கு இணங்கி உழைப்பாளிகள் மேன்மேலும் தீவிரமாக பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கினர். தொழிற்சாலைகளிலும் இருப்புப்பாதைகளிலும் நாச வேலைகள் நடந்தன. வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. பாசிச ஆட்சியாளர்களின் கட்டளைகள் மீறப்பட்டன. ஜேர்மனிக்கும் இதன் இராணுவத்திற்கும் விவசாயப் பொருட்களை அளிக்க விவசாயிகள் மறுத்தனர்.

நாட்டில் சலாஷி- பாசிச ஆட்சிக் கும்பலுக்கு எதிரான இயக்கம் தீவிரமடைந்தது. குறிப்பாக ஹங்கேரிய பரப்பினுள் செஞ்சேனை இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கியதையடுத்து இது மேலும் பலமடைந்தது. சோவியத் யூனியனிலிருந்து 10 கெரில்லாப்படை அணிகள் வந்து சேர்ந்தது, இதற்கு உதவியது. இவற்றில் 250 ஹங்கேரிய, 30 சோவியத் கெரில்லாப்படை வீரர்கள் போரிட்டனர். நன்கு பயிற்சி பெற்றிருந்த இந்த அணிகள் தமது போர் நட

கம்யூனிஸ்டுக் கட்சிவிளக்கியது. கம்யூனிஸ்டுகள் தொழிலாளர், விவசாயிகளின் கூட்டிற்கு முக்கியத்துவம் அளித்தனர். நான்கு கட்சிகள் சேர்ந்த ஹங்கேரிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்றுவிப்பதற்காகப் போராடினர். செப்ரெம்பர் மாதத்திலேயே இதன் நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்கமிட்டி ஸ்தலக் கமிட்டிகளை ஏற்படுத்தத் தொடங்கியது.



ஹங்கேரியக் குடியரசின் தலைவர் ஹோர்டி

நாட்டில் கெரில்லாப்படை இயக்கத்தை வளர்க்க ஹங்கேரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அயல்நாட்டுக்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

மற்றும் ஹங்கேரிய படைப்பிரிவுகளின் இடப்பெயர்வைப்பற்றிய முழு விவரங்களையும் சோவியத் படைத் தலைமைக்கு அளிக்க வேண்டும்



ஹோர்டி அட்மிரலாக பதவியிலிருந்த பொழுது போரின்போது காயமடைந்த நிலையில்

ஹங்கேரி ஏற்றுக் கொள்கிறது என்று ஃபராகோ விடுத்த அறிக்கையை சோவியத் அரசாங்கம் கவனத்தில் கொண்டது. ஆனால், ஹங்கேரி பாசிச ஜேர்மனிக்கு எதிராக யுத்தத்தில் இறங்குவதை விரும்பாத ஹோர்டிதான் முன்னர் ஒப்புக் கொண்ட சமரச நிபந்தனைகளை நிறைவேற்ற மறுத்தது விரைவிலேயே தெளிவாயிற்று. இதன் தொடர்பாய் செஞ்சேனை பிரதான படைத் தலை

சமரச நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட ஹோர்டி ஹிட்லர் துருப்புகளுக்கு எதிராக எவ்வித இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்ட ஜேர்மனியப் படைத் தலைமை பிற்போக்கு ஹங்கேரிய இராணுவ அதிகாரிகள் மற்றும் குறுக்காக வைக்கப்பட்ட அம்புகள் என்ற சலாஷிஸ்டுகளின் கட்சியின் ஆதரவோடு அக்டோபர் 15- 16 இல்

வடிக்கையாலும் எடுத்துக்காட்டாலும் இன்னும் 1500 பேர்களை எதிரிக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ளச் செய்தனர்.

1944 அக்டோபர்- நவம்பரில் ஆயிரக்கணக்கான கெரில்லாப்படை வீரர்கள் ஹங்கேரியில் போரிட்டனர். கெரில்லாப்படை வீரர்கள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதோடுகூட ஸ்தலமக்களின் மத்தியில் நிலைமையை விளக்கிப் பேசினர், உழைப்பாளிகளின் கூட்டங்களை நடத்தினர். பிரச்சார இலக்கியங்களை விநியோகித்தனர். எதிரியின் அடக்குமுறை பயங்கரத்திலிருந்து மக்களைக் காப்பாற்றினர். தம் பங்கிற்கு ஸ்தல மக்கள் இந்தக் கெரில்லாப்படை வீரர்களுக்கு சகலவிதங்களிலும் உதவினர்.

நாட்டு விடுதலை இயக்கத்தின் முன்னணிப்படையாக ஹங்கேரிய கம்யூனிஸ்டுக்கட்சி நடைபோட்டது. செப்ரம்பர் இறுதியில் கட்சி விடுத்த அறிக்கையிலேயே சுதந்திரமான ஹங்கேரிக்காகவும் ஜனநாயகக் குடியரசைத் தோற்றுவிப்பதற்காகவும் பாசிஸ்டுகளை விரட்டியடித்து பாசிச ஆட்சிக்கும்பலை முறியடிப்பதற்காகவும் நடைபெறும் போராட்டத்தை தீவிரப்படுத்துமாறு, இது உழைப்பாளிகளை அறைகூவியழைத்தது. ஹங்கேரிய மக்களின் அரசு உரிமையையும் நாட்டின் பொருளாதார, சமூக அமைப்பு பிரச்சினைகளைத் தானே தீர்த்துக் கொள்ளும் உரிமையையும் சோவியத் யூனியன் மீறாது என்று

காரியாலயம் பெரும் பணியாற்றியது. என்றாலும், ஹங்கேரிய தேசபக்தர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சியடையவில்லை. பாசிச சர்வாதிகாரத்தின் கொடூரமான அடக்குமுறை, வெகுஜனங்களை ஏமாற்றிய குறுகிய தேசிய வெறிப் பிரச்சாரம், யுத்த ஆண்டுகளில் ஜனநாயகச் சக்திகள் பலவீனமடைந்து, கம்யூனிஸ்டுக் கட்சி செயற்பட வேண்டியிருந்த கடுமையான தலைமறைவுச் சூழ்நிலைகள் ஆகியவையே இதற்குக் காரணம்.



பேர்லினில் ஹங்கேரியக் கொடியும் ஜேர்மனிய கொடியும் பறக்கவிடப்பட்டுள்ளன

(தொடரும்)

# இந்தியர்களின் கறுப்புப்பணம் தொடர்பான விபரங்களை வழங்க சுவிட்சர்லாந்து சம்மதம்

சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் கறுப்புப்பணம் குறித்த விபரங்களை தர அந்நாட்டு அரசு சம்மதித்துள்ளது. இது தொடர்பாக ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளது.

இந்தியாவில் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள் போன்ற செல்வந்தர்கள் அரசாங்கத்திற்கு வரி கட்டாமல் ஏமாற்றுகின்ற பணத்தை வெளிநாடுகளில் உள்ள இரகசிய வங்கிக் கணக்குகளில் முதலீடு செய்துள்ளனர்.

சுவிற்சர்லாந்து, மெக்சிக்கோ, மொரீசியஸ், ஷெசல்ஸ் போன்ற நாடுகளில் இவ்வகையான கறுப்புப்பண கணக்குகள் இருக்கின்றன.

மொத்தம் 25 இலட்சம் கோடி ரூபா கறுப்புப் பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ளதாக புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது.

கறுப்பு பணத்தை பதுக்க வசதி கொண்ட வங்கிகள் சுவிற்சர்லாந்து நாட்டில்தான் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. சுவிற்சர்லாந்து தேசிய வங்கி வெளியிட்ட புள்ளிவிபரப்படி இந்தியர்கள் மொத்தம் 12 ஆயிரத்து 500 கோடி ரூபா கறுப்பு பணத்தை சுவிஸ்வங்கிகளில் போட்டு வைத்துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு கறுப்பு பணம் தொடர்பான தகவல்களை வங்கிகளிடம் இருந்து பெறுவதற்காக சுவிற்சர்லாந்து அரசுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது.


இதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அந்த ஒப்பந்தத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியது. இதை சுவிற்சர்லாந்து அரசு ஏற்றுக் கொண்டது. புதிய ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி ஒப்புதல் அளித்தது.

இரு நாடுகளுக்கும் இடையே கடந்த 20 ஆம் திகதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் படி சுவிஸ் வங்கியில் கறுப்பு பணம் பதுக்கி வைத்துள்ள இந்தியர்கள் பற்றிய தகவல்களை இனிமேல் சுலபமாக பெற முடியும் என்று மத்திய நிதித்துறை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)




# எம்.பிக்கள் குழுவின் இலங்கை விஜயம் காலம்கடந்த ஞானம் போன்றது




இலங்கையில் தமிழினத்தின் அழிவுச் செயலுக்கு உறுதுணையாக இருந்த மத்திய அரசு இன்று எம்.பிக்கள் குழுவை அங்கு அனுப்பியது மிகவும் வேடிக்கையானது. இது கழுத்தை அறுத்துவிட்டு கைப்புண்ணுக்கு முதலுதவி செய்வதைப் போன்றது. என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ கூறியுள்ளார்.ஒசூரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது வைகோ மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் தமிழர்களின் அழிவுக்கு இலங்கை ஜனாதிபதியின் செயலுக்கு உறுதுணையாக இருந்த மத்திய அரசு இன்று எம்.பிக்கள் குழுவை அங்கு அனுப்பியது மிகவும் வேடிக்கையானது. இது கழுத்தை அறுத்துவிட்டு கைப்புண்ணுக்கு முதலுதவி செய்வதைப் போன்றது.

எம்.பிக்கள் குழு இலங்கை சென்று அங்கு மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு குறித்து பேசவில்லை என்று கன்னத்தில் அறைந்தார் போல் கூறிவிட்டார். இதனால்தான் எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி இலங்கை செல்லும் எம்.பிக்கள் குழுவில் ம.தி.மு.க. இடம்பெறாது என்று ஆரம்பத்திலேயே கூறிவிட்டார் என அவர் கூறினார். (அ-2)

# ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்படும் வேட்பாளரை ஏற்கமாட்டோம்

## பா.ஜ.கட்சி திட்டவட்டம்



ஜனாதிபதி தேர்தலில் பிரணாப் முகர்ஜி, ஹமீத் அன்சாரி உள்ளிட்ட காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்படும் எந்த வேட்பாளரையும் ஏற்கமாட்டோம். அப்துல்கலாம் போன்ற எந்தக்கட்சியையும் சேராத வேட்பாளரை நிறுத்தினால் அதை ஏற்றுக் கொள்வோம் என பா.ஜ.க.திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

காங்கிரஸ் சார்பில் அறிவிக்கப்படும் வேட்பாளரை பா.ஜ.க. ஆதரிக்குமா என்ற கேள்விக்கு அக்கட்சியின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் நேற்று முன்தினம் பதில் அளித்தார். அவர் கூறியதாவது,

தற்போதைய ஜனாதிபதி பிரதீபாவின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் இடம் பெறவுள்ளது.

திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி போன்ற கட்சிகள் எந்தக் கட்சியையும் சேராத முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமை மீண்டும் ஜனாதிபதியாக தேர்வு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. அப்துல் கலாம் போன்ற வேட்பாளரை நிறுத்தினால் தே.ஜ. கூட்டணி கட்சிகள் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் அவரை வெற்றிபெற வைக்க முடியும் என இந்த கட்சிகள் கருதுகின்றன.


காங்கிரஸ் கட்சி இதைவிரும்பவில்லை. தங்கள் கட்சியைச் சேர்ந்த பிரணாப்முகர்ஜி, தற்போதைய துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, லோக்சபா சபாநாயகர் மீரா குமார் ஆகியோரின் பெயர்களை ஜனாதிபதி வேட்பாளராக முன்நிறுத்தி கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறது.

அரசியல் வட்டாரத்தில் இந்த தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதை தொடர்ந்து இந்த விவகாரத்தில் பா.ஜ. க. தரப்பில் என்ன முடிவு ஏடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. பா.ஜ.க. தலைமையிலான தே.ஜ.கூட்டணி சார்பில் பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலை வேட்பாளராக நிறுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவரை ஜனா திபதியாக்க முடியாவிட்டாலும் துணை ஜனாதிபதி தேர்தலிலாவது வெற்றி பெற வைத்துவிட வேண்டும் என பா.ஜ.க. தலைவர்கள் உறுதி யாக உள்ளனர்.எதிர்வரும் 2014 இல் நடக்கவுள்ள லோக்சபா தேர்தல் தான் எங்கள் இலக்கு. எனவே, காங்கி ரசுடன் உடன்பாடு செய்து கொள்ளும் விருப்பமும் இல்லை. இவ்வாறு சுஷ்மா சுவராஜ் கூறினார்.

சுஷ்மாவின் இந்த அறிவிப்பை அடுத்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. (அ-2)

# இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் உதவிகள் முக்கியத்துவமானவை

## ஜேம்ஸ் அலெக்ஸ் தெரிவிப்பு



இந்தியாவை நம்பியே செஷல்ஸ் தீவு உள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜேம்ஸ் அலெக்ஸ் மிச்சல் இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேலிடம் தெரிவித்துள்ளார். இந்திய குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டேல் தன் கடைசி வெளிநாட்டு பயணமாக செஷல்ஸ் போய்ச் சேர்ந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாட்டு அதிகாரிகள் கலந்து கொண்டு இரு நாட்டு உறவு குறித்து விவாதித்தனர். இதில் செஷல்ஸ் தீவின் ஜனாதிபதி மிச்சல் இத்தீவு இந்தியாவை நம்பி இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் கடல் கொள்ளையர்களிடம் இருந்து இந்திய கடற்படை தங்களை பாதுகாத்து வருவதாகவும் செஷல்ஸ் நாடு இந்தியாவிற்கு கடமைப்பட்டுள்ளதாகவும் இந்தியா யு.என். பாதுகாப்பு குழுவின் நிரந்தர உறுப்பினராவதற்கு தங்கள் ஆதரவையும் தெரிவித்தார்.மேலும் இரு நாட்டு அமைச்சர்களும் இரண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர். இந்தியா சார்பில் ஐ.டி. அமைச்சர் சச்சின் பைலட் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். ஜனாதிபதி பதவியின் போது பிரதீபா செல்கின்ற கடைசி வெளிநாட்டு சுற்றுப்பயணமாக இது அமைகிறது. இப்போது 23 ஆண்டுகளுக்கு பின்னர் பிரதீபா செஷல்ஸ் பயணம் மேற்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ராஜீவ் கொலையாளிகளின் வழக்கு உச்ச நீதிமன்றிற்கு மாற்றம்




முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோர் தாக்கல் செய்த கருணை மனுக்கள் தமிழகத்தில் இருந்து உச்சநீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை தமிழக நீதிமன்றத்தில் இருந்து மாற்ற உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. முன்னதாக இவர்களின் கருணை மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்திருந்தது. தங்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க குடியரசுத் தலைவர் 11 ஆண்டுகள் எடுத்துக் கொண்டதால் தங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று 3 பேரும் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தனர். இவர்களின் வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி விசாரிக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# அதிசய உலகம்...


## 104 வயதில் பரசூட்டில் பறந்து பாட்டி சாதனை



வடக்கு சைப்ரஸை சேர்ந்த திருமதி பெகி மெக் அல்ப்பன் தன் 104 ஆவது வயதில் 2400 அடிய உயரத்தில் பரசூட்டில் பறந்து கின் னஸ் சாதனை படைத்துள்ளார். இரு பிள்ளைகள், நான்கு பேரப் பிள்ளைகள், இரண்டு கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் உள்ளனர் பெகிக்கு. இவருக்கு மலையே றுவது மிகவும் பிடித்த விடயமாகும். மலையில் ஏறிப்போய் அங்கிருந்து கீழே எறும்பு போலத் தெரியும் மனிதர்களைப் பார்ப்பதில் அவருக்கு மகிழ்ச்சி அதிகம்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு சாதனையை அமெரிக்காவைச் சேர்ந்த 101வயது பெண்மணி மேரி ஆலன் ஹேடிசன் செய்துள்ளார். இப்போது மீண்டும் பெகி புதிய சாதனையை படைத்து முறியடித்துவிட்டார். இந்த சாதனையை வேறு யாரேனும் முறியடித்தால் தான் மீண்டும் புதிய சாதனை படைக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


## பலவடிவங்களில் அசத்தும் எம்ப்ராய்ட்ரி தபால் அட்டைகள்



பொதுவாக துணிகளில் தான்எம்ப்ராய்ட்ரி (Embroidery) தையல் போடுவதை அறிந்திருப்போம். ஆனால் Shaun kardinalஎன்பவர் தபால் அட்டைகளிலும், புகைப்பட அட்டைகளிலும் புத்தகங்களிலும் எம்ப்ராய்ட்ரி தையலை விதவிதமான வடிவங்களில் போட்டுள்ளார்.

இந்த தபால் அட்டைகள் எம் பிராய்ட்ரி தையலின் மூலம் கண்ணுக்கு இனிய காட்சிகளாக மாறிவிட்டன. எம்பிராய்ட்ரி தையலில் தனக்கு ஆர்வம் அதிகம் எனக் கூறும் இவர் இதுவரை எம்ப் ராய்ட்ரி தையல் மூலம் தைத்த அனைத்தையும் விற்பனை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உணவருந்தும் தனது கோப்பையை தானே கழுவி சுத்தம் செய்யும் பூனை



பூனைக்குட்டி ஒன்று தான் உணவு உண்ணுவதற்காகப் பயன்படுத்தும் கோப்பையை தானே கழுவிச் சுத்தம் செய்கின்றது.

மனிதர்களே சில வேளைகளில் இவ்வாறு சுத்தம் செய்வதற்கு தயக்கம் காட்டும் தருணத்தில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் பூனைக் குட்டி மிகுந்த பொறுப்புடன் தனது கோப்பையை தானே சுத்தப்படுத்துவது ஆச்சரியம் ஊட்டும் வகையில் காணப்படுவதுடன் சிலருக்கு ஒரு பாடமாகவும் அமைகின்றது.

# பள்ளிவாசலை வேறு இடத்திற்கு மாற்ற இணங்கப்போவதில்லை

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

அரசாங்கம் சிறுபான்மை மதங்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தம்புள்ளையில் தாக்குதலுக்கு உள்ளான பள்ளிவாசலை வேறு இடமொன்றுக்கு மாற்றுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணங்கப்போவதில்லை.

அவ்வாறான நடவடிக்கை நாட்டுக்கு அழிவையே ஏற்படுத்தும். எனினும் இதனை சர்வதேச மயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இதனை உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்ள முடியும்.

1940 ஆம் வருடக் காலப்பகுதியில் இருந்து இஸ்லாமியர்கள் இந்தப் பள்ளிவாசலில் தொழுகையை நடத்தி வருகின்றனர். எனினும் இந்த பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணிப் பிரதேசம் புனிதமாகும் என்று பௌத்த பிக்குகள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் இந்த பள்ளிவாசலை அங்கிருந்து அகற்றி வேறிடமொன்றில் அமைப்பதற்கும் புதிய கட்டடத்திற்கான நிதியையும் வழங்குவதற்கு அரசாங்கம் உடன்பட்டிருந்தது.

எனினும் இந்த வருடத்தில் இணக்கப்பாட்டுக்கு வரப்போவதில்லை.

அத்துடன் வேறு நாட்டு சக்திகளிடம் நாட்டை பணயம் வைக்க அனுமதிக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார். தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பில் தமிழக அரசியல் தலைவர்களும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

தமிழகத்தில் வைகோ மாத்திரமல்ல ஜவாஹிருல்லா என்பவரின் கீழ் இயங்கும் இஸ்லாமிய அமைப்பும் தமது கண்டனத்தைள வெளியிட்டுள்ளதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார். (அ-2)

# 50 ஆயிரம் வருமானம் பெறும் அதிகாரிகள் வருமானவரி செலுத்த வேண்டும்

## சுற்றுநிருபம் தயாராகிறது

(கொழும்பு)

ஐம்பதாயிரம் ரூபாவுக்கு அதிகமாக மாத வருமானத்தை பெறும் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் இனிவரும் காலங்களில் வருமான வரியை செலுத்த வேண்டும்.

இதற்கான சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் 50 ஆயிரம் ரூபாவை வருமானமாகப் பெறும் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் 4 வீதத்தை வருமான வரியாக செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் இந்த நடைமுறை இருக்கவில்லை. எனினும் நாட்டின் நலன் கருதி இந்த நடைமுறையை பின்பற்ற அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் அர்ப்பணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (அ-2)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்


| அன்னை மடியில் | அரக்கனின் கையில் |
|---|---|
| 1984 | 2010 |
| 09 | 05 |
| 09 | 02 |



**செல்வன். மகாலிங்கம் சதீஷன்**

**பணிப்பாளர்**

**(பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்)**



அகவை இரண்டு சென்றாலும்
அகலக் கண் கொண்டு எதிர்பார்க்கின்றோம் - உன்னை
ஆண்டவனை நம்பி இருந்தோர் அன்று - உன்
ஆனந்தத்தை காண முடியவில்லை இன்றும் எம்மால்
இதயம் நெகிழ்ந்து இன்றும் தொடர்கின்றோம் - உன் முயற்சி

என்றும் உன் நினைவுடன் உறவுகள்

பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
தம்பளை,
பருத்தித்துறை.

(சி-6477)

# கலைஞரும் ஜெயாவும் இணைந்து குரல் கொடுத்தால்தான் ஈழம் பிறக்கும்

உயர்ந்த விஞ்ஞானி ஆவதற்கு ஒருவன் அறிவியலில் ஆழ்ந்த ஞானம் அடைய வேண்டும். தேர்ந்த வழக்கறிஞராகவோ, சிறந்த மருத்துவர் ஆகவோ வர விரும்பினால் சட்டமோ மருத்துவமோ முறையாக கற்றாக வேண்டும். ஆனால் ஓர் அரசியல் வாதியாக உருவாவதற்கு தன்னுடைய சொந்த நலன்களைப் பராமரிக்க தெரிந்தால்... அதுவே போதும் என்றார் அறிஞர். மேக்ஸ் ஓரேல் ஈழத்தமிழர் விவகாரத்தில் நம் அரசியல் த்லைவர்கள் அரிதாரம் பூசாமல் அன்றாடம் நடிக்கும் நாடகங்களைப் பார்த்தால் இந்தப் பொன்மொழி தான் பொருத்தமாகப்படுகிறது.

ஈழம் இரத்த நிலமானபோது அப்பாவித் தமிழர்கள் பல்லாயிரவர் படுகொலை செய்யப்பட்டபோது, எம் குலப் பெண்டிர் கதறக் கதற கற்பழிக்கப்பட்ட போது, வயது முதிர்ந்தோரும், வாய்திறந்து பேச இயலாத சின்னஞ்சிறாரும் வெடிகுண்டுகளில் உடல் சிதறி உருக்குலைந்த போது உயிரிழந்தும் உறுப்பிழந்தும் உடைமையிழந்தும் எழுத்தில் வடிக்க முடியாத பேரழிவைச் சந்தித்து நாம் தமிழினம் கண்ணீர் கடலில் மூழ்கிய போதும் இந்திய அரசியல்தலைவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?

தமிழினத்தை அழிக்க இலங்கை இராணுவத்துக்கு இந்திய அரசு ஆயுதங்கள் தந்த போது, தெலுங்கானா காங்கிரஸ்காரர்களைப் போல் அன்னை சோனியாவின் அருட் பார்வைக்கு அன்றாடம் தவமிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் இன உணர்வுடன் தொண்டர்களைத் திரட்டி தெருவில் நின்று குரல் கொடுத்தார்களா? நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் முடக்கி ஆட்சிப் பீடத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார்களா? இல்லையே. நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் பா.ஜ.க, மன்மோகன் சிங் அரசின் தவறான அணுகு முறைகளால் ஈழம் எரிந்த போது அதைத் தடுக்க எந்தெந்த



வகைகளில் முயற்சி மேற்கொண்டது? அந்த நேரத்தில் தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர், தன் பதவி பறிபோகாமல் பாதுகாத்துக்கொள்வதற்கு நடத்திய நாடகங்கள் ஒன்றா? இரண்டா?

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் அனைத்து வாழ்வாதாரங்களும் திட்டமிட்டு அழித்தொழிக்கப்பட்ட பின்பு, இந்திய அரசு நிவாரண நாடகத்தை அரங்கேற்றி 500 கோடி ரூபாயை ராஜபக்சவுக்கு அள்ளிக் கொடுத்தது. போர் முடிந்து ஈழம் எரிந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் அங்குள்ள தமிழர் வாழ்வில் அமைதி தழைக்கவில்லை.

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. தமிழகம் தந்த நிர்ப்பந்தத்தால் தீர்மானத்தை ஆதரித்த இந்திய அரசு, ராஜபக்ச வை மகிழ்விக்கவும், சர்வதேச நாடுகளிடம் இலங்கை அரசு தமிழருக்கு ஆற்றியுள்ள நற்பணிகளைப் பட்டியலிடவும் நாடாளுமன்றக் குழுவை அனுப்பி நாடகத்தின் அடுத்த காட்சியை நடத்திக் காட்டியது.

திருமதி சுஷ்மா சுவராஜ் தலைமையில் சென்ற 12 பேர் அடங்கிய குழு ஆறு நாட்கள் ஆய்வு மேற்கொண்டு இலங்கை அரசின் நிவாரணப் பணிகளுக்கு நற்சான்றிதழ் வழங்கி ராஜபக்ச சகோதரர்களுடன் விருந்து உண்டு இளைப்பாறி விட்டு இந்தியா திரும்பியது. தமிழர்கள் சிங்களவருடன் சமமாக வும் கண்ணியமாகவும் வாழ்வதற்கேற்ப அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப் படும்.13ஆவது சட்டத் திருத்தம் நடைமுறைப் படுத்தப்படும் என்று ராஜபக்ச தன்னிடம் உறுதி அளித்ததாக சுஷ்மா தெரிவித்தார். இந்தக் குழுவில் இடம்பெற்ற காங்கிரஸ் நாயன்மார்கள் நால்வரும் சத்தியமூர்த்தி பவனில் பத்திரிகையாளர்களிடம் தங்கள் சாதனைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

தோழர் ரங்கராஜன், இலங்கைப் போரில் 35 ஆயிரம் பெண்கள் விதவையராகி விட்டதைப் பார்த்தோம். இவர்களில் 13 ஆயிரம் பேர் 23 வயதுக்கும் குறைவானவர்கள் என்ற கண்ணீர் செய்தியைத் தெரிவித்ததுடன் அங்கு உள்ள தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட்ட இலங்கையில் அதிகாரப் பகிர்வையே விரும்புகின்றன் என்ற தகவலையும் தந்திருக்கிறார்.

ஒன்றுபட்ட இலங்கையில் சிங்களவருக்கு சமமாகத் தமிழருக்கு அரசியல் உரிமைகளும் அதிகாரப் பகிர்வும் கிடைத்தால் போதும். தமிழ் ஈழம் தேவையற்ற பிரிவினை என்பதே காங்கிரஸ், பா.ஜ.க, மார்க்சிஸ்ட் கட்சிகளின் அணுகுமுறை. ஆனால் ஜெயலலிதாவும் கலைஞரும் ஈழ நாடகத்தில் இரு வேடமிட்டு நடிப்பதில் இணையற்றவர்கள். இருவரும் கலையுலகப் பின்புலத்தோடு களம் இறங்கியதால் மற்றவர்களை விட இவர்களுடைய நடிப்பில் தான் நவரசங்களும் பளிச்சிடுகின்றன.

தனி ஈழம் காண டெசோ கண்டவர் கலைஞர். படை எங்கே... தடை எங்கே? என்று பரணி பாடியவர். கோட்டை நாற்காலி கொடுத்த ஞானத்தால் ஒன்றுபட்ட இலங்கையில் அதிகாரப் பகிர்வின்றித் தமிழ் ஈழம் சாத்தியம் இல்லை என்று தன் பாட்டின் பல்லவியை மாற்றிக் கொண்டவர். அதிகாரம் பறிபோனதும் தனி ஈழமே என் தணியாத தாகம் என்று இன்று வீதி நாடகத்தில் வீரப்பண் இசைப்பவர். ஏமாளித் தமிழர்களுக்குக் காசில்லாத பொழுதுபோக்கு நம் கலைஞரின் தயவால் தொடர்கிறது.

ராஜீவ்காந்தியும் ஜெயவர்த்தனவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. தமிழருக்கு மிகக் குறைந்த அதிகாரங்களை வழங்கும் இந்த 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் சோனியாவுக்கும், சுஷ்மாவுக்கும், காம்ரேடுகளுக்கும் ஒத்த கருத்து உண்டு. மன்மோகன் அரசின் நிலைப்பாடும் இது தான். வாஜ்பாய் அரசின் விருப்பமும் இதுவேதான். ஆனால் ஒப்பந்தம் நிறை வேறி 13ஆவது அரசியல் சட்டத் திருத்தம் அரங்கேறி 25 ஆண்டுகள் முடிந்த பின்பும் இலங்கையில் தமிழருக்கு மிகக் குறைந்த உரிமைகள் கூட இன்று வரை வழங்கப்படவில்லையே...ஏன்? இந்தியாவால் இலங் கையின் மீது எந்த அழுத்தத்தையும் இதுவரை செலுத்த முடியாத நிலையில் இனிமேல் அதிகாரப் பகிர்வு எப்படிச் சாத்தியமாகும்?

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தம் மாகாண அரசுக்கு நிதி நிர்வாகம் சம்பந்தப்பட்ட எந்த உரிமையையும் வழங்கவில்லை. மத்திய அரசை முழுமையாகச் சார்ந்தே மாகாண அரசு நிதியைப் பெற முடியும். அரசின் வருவாயை உயர்த்தும் எந்த நடவடிக்கையிலும் மாகாண அரசு ஈடுபடுவதற்கு உரிமை இல்லை. பொதுப் பட்டியலில் உள்ள எல்லா அம்சங்களிலும் மத்திய அரசின் முடிவே இறுதியானது. தேசியநலன் என்ற போர்வையில் மாகாண அரசுகளை அதிகாரமற்ற அலங்காரப் பொம்மைகளாக

# இந்தியக்குழுவின் ஈழ விஜயம் தீர்வைப் பெற்றுத்தருமா?

வைத்திருப்பதற்கே 13ஆவது திருத்தம் வழி வகுத்திருக்கிறது. வடக்கு கிழக்குப் பகுதிகள் ஒன்றிணைப்பு பொது வாக்கெடுப்பு (Referendum) மூலம் உறுதி செய்யப்படும் என்ற உருப்படியான ஒரு அம்சம் கூட இலங்கை உச்ச நீதிமன்றத்தால் நீக்கப்பட்டு விட்டது. காணி, பொலிஸ் இரண்டின் மீதும் மாகாண அரசுக்கு உரிமை வழங்க இலங்கை அரசு தயாராக இல்லை. ஓர் உரிமையைக் கூட ஒழுங்காகத் தராத இந்த 13ஆவது திருத்தமே இன்று வரை நடைமுறைக்கு வரவில்லை. இந்தியாவில் ஒரு மாநில அரசுக்குரிய உரிமைகளை இலங்கை அரசு வடக்கிலும் கிழக்கிலும் எப்படி வழங்கக் கூடும்?

விடுதலைப் புலிகளின் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதும் இலங்கை அரசு 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளோடு கூடுதலாகச் சில உரிமைகளையும் சேர்த்து வழங்கும் என்று உறுதியளித்த ராஜபக்ச, 13 ப்ளஸ் என்று அதற்கு நாமகரணம் சூட்டினார். ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் புதிதாக 18ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தி 13ஆவது திருத்தம் வழங்கும் குறைந்த உரிமைகளையும் குழி தோண்டிப் புதைத்தார் என்பதை அதிகாரப் பகிர்வுக்குப் பரிந்துரை செய்யும் நம் அறிவுஜீவிகள் அறிவார்களா?

இலங்கை அரசின் 1978ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் ஜனாதிபதியாக ஒருவர் இரு முறைக்கு மேல் இருக்கக் கூடாது என்று விதித்திருந்த தடை 18ஆவது திருத்தம் மூலம் தகர்க்கப்பட்டது. தேர்தல் கமிஷன், தேசிய பொலிஸ் கமிஷன், பொதுப் பணிக் கமிஷன், இலங்கை மனித உரிமைக் கமிஷன், ஊழல்



தமிழருவி மணியன்

விசாரணைக் கமிஷன் ஆகியவை சுயேச்சையாக செயற்படுவதில் தடை விதிக்கப்பட்டது. 17ஆவது திருத்தம் இலங்கை அரசின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது.

நீதித்துறை, பொலிஸ் நியமனங்கள் ஜனாதிபதியின் அளவற்ற அதிகார வளையத்தில் வருவதற்கேற்ப் 17ஆவது திருத்தம், 18ஆவது திருத்தம் மூலம் மாற்றப் பட்டது. சுருங்கச் சொல்வதெனில் ராஜபக்சவை ஒரு சர்வாதிகாரிக்குரிய சகல குணாம் சங்களுடனும் செயற்படுவதற்கு 18ஆவது திருத்தம் வழிவகுத்திருக்கிறது.

ஈழத் தமிழர்களின் இன்னல் தீர்வதற்கு ஒரே தீர்வு தமிழ் ஈழம்தான். பதவி நாற்காலியில் அமர்ந்திருந்த போது அதிகார மயக்கத்தில் இன உணர்வை மறந்து விட்ட கலைஞர் இப்போது தமிழீழ தாகம் கொண்டவராக மாறிவிட்டார். இன உணர்வும் தமிழ்ப் பற்றும் கொண்ட போராளியாய் கலைஞர் இறுதி வரை இருக்க வேண்டும் என்று தமிழகத்து வாக்காளர்கள் விரும்பினால்... மறந்தும் அவரை முதல்வராகவோ தி.மு.க வை ஆளும் கட்சியாகவோ மீண்டும் கொண்டு வர முயலக் கூடாது.

ஒரு முக்கியமான அரசியல் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தின் இரு பெரும் அரசியல் கட்சிகளான ஜெயலலிதாவும் கலைஞரும் இணைந்து குரல் கொடுத்ததனால்தான் மத்திய அரசு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்க முன் வந்தது.

இந்த இருவரும் சேர்ந்து அணி திரண்டால் தான், ஈழத் தமிழருக்கு தீர்வு கிடைக்க இந்திய அரசு வழிவகுக்கும். தமிழினம் தான் இருவருக்கும் பெரிய பேரும் புகழும் உருவாவதற்குக் காரணம். அதற்கு இவர்கள் செய்ய வேண்டிய ஒரே கைம்மாறு ஒற்றைக் குரலில் ஈழத் தமிழரின் இன்னலைத் தீர்க்க முனைந்து செயற்படுவது தான்.

இரத்தத்திலும் நெருப்பிலும் யுதேயா விழுந்தது. அதே இரத்தத்திலும் நெருப்பிலும் யுதேயா மீண்டும் எழும் என்று யூதர்கள் இசைத்தனர். இஸ்ரேல் பிறந்தது. மீண்டும் இரத்தமும் நெருப்பும் இல்லாமல் ஈழம் எழும். அதற்கு இந்தியாவின் துணை தேவை. இந்திய அரசை நிர்ப்பந்திக்க தமிழகம் ஒன்றாய் நிற்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

ஜூனியர் விகடன்

# துமிந்த சில்வாவின் சிகிச்சைக்காக 39 மில்லியன் ரூபாய்கள் செலவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் சந்தேகிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரின் மௌன்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்.

இந் நிலையில் இலங்கையில் வைத்து அவரின் சிகிச்சைக்காக 18 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. அதேநேரம் சிங்கப்பூரின் மௌன்ட் எலிசபெத் வைத்திய சாலையில் இதுவரை 39 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதாக சண்டே லீடர் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

துமிந்த சில்வா 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிங்கப்பூரின் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த ஏப்ரல் மாதத்துடன் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 180 நாட்கள் கடந்துள்ளன.

மேற்படி வைத்திசாலையில் செலவிடப்பட்ட இந்த தொகையில் சிகிச்சை அறைக்கான பணம் உள்ளடக்கப்பவில்லை. தகவல்களின் படி குறித்த வைத்தியசாலையின் தங்கும் அறை ஒன்றுக்கான வாடகை 99,255 ரூபாவாகும்.

உறவினர்களை அடையாளம் காணவும் நடக்கும் ஆற்றலும் அவருக்கு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிப்பதாக அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# அக்னி ஏவுகணை குறித்த ரணிலின் கருத்தால் கவலைப்படவில்லை

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கருத்தால் தாம் வருத்தப்படவில்லை என்று இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அக்னி ஏவுகணையை காட்டிலும் இலங்கையின் அஜித் நிவாட் கப்ரால் என்ற ஏவுகணை அழிக்கும் சக்தியை அதிகமாக கொண்டது என்று ரணில் விக்ரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் எதிர்க்கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த 6 வருடங்களாக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

எனினும் அதன் காரணமாக தாம் பின்னோக்கி செல்லப்போவதில்லை என்று கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் பொருளாதாரத்தில் பணவீக்கத்தை அவர்களால் ஒற்றை இலக்கங்களில் வைத்துக் கொள்ள முடியவில்லை. ரூபாவின் பெறுமதி 50 வீதத்தினால் தேய்மானம் கண்டது. இவை யாவும் இன்று மறந்துபோய் விட்டது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் ஒரு அரச நியமனமாவது வழங்கப்படவில்லை. அரச சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா மத்திய வங்கியின் செயற்பாடுகளை விமர்சித்து வருகிறார்.

எனினும் பொதுமக்கள் இந்த சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை கவனத்தில் கொள்ளமாட்டார்கள் என்று கப்ரால் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நில்வளகங்கையில் இறந்த முதலைகள்

(கொழும்பு)

நில்வளகங்கையில் கடந்த சில நாட்களாக இறந்த முதலைகளின் உடல்கள் மிதப்பதை அவதானித்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 26 ஆம் திகதி முதல் இதுவரையில் இவ்வாறு இறந்த 5 முதலைகளின் உடல்கள் நீரில் அடித்துச் செல்லப்படுவதை பிரதேச மக்கள் அவதானித்துள்ளனர்.

பாடசாலை மாணவி ஒருவரை முதலை தாக்கி மரணித்ததன் பின்னர் நில்வளகங்கையிலுள்ள முதலைகள் தொடர்பாக பாரிய குழப்பமான நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது முதலைகளை பிடிக்கும் பணி நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இறந்த முதலைகளின் உடல்கள் இவ்வாறு அடித்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (அ-9)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 02

★ 1568- ஸ்கொட்லாந்தில் லொக் லெவென் அரண்மனையில் சிறைவைக்கப்பட்டிருந்த முதலாம் மேரி அங்கிருந்து தப்பி வெளியேறினாள்.

★ 1808- மாட்ரிட் மக்கள் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

★ 1814-முதலாவது மெதடிஸ்த ஆயர் தோமஸ் கோக் தமது மதத்தைப் பரப்புவதற்காக கப்பலில் இங்கிலாந்தில் இருந்து இலங்கை வரும் வழியில் காலமானார்.

★ 1876-பல்கேரியாவில் ஏப்ரல் கிளர்ச்சி ஆரம்பித்தது.

★ 1885-புல்ஜிய மன்னர் இரண்டாம் லெயொபோல்ட் கொங்கோ சுதந்திர நாட்டை அமைத்தான்.

★ 1889-எதியோப்பியாவின் அர்சன் இரண்டாம் மெனெலிக் என்பவன் இத்தாலியுடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையின் படி எரித்திரியாவின் முழுப்பகுதியும் இத்தாலிக்கு தரப்பட்டது.

★ 1928- அமெரிக்காவின் பிரபல கேலிச்சித்திர ஓவியரான வோல்ட் டிஸ்னி பிரபல கேலிச்சித்திரக் கதாபாத்திரமான மிக்கி எலியின் படத்தினை வரைந்தார்.

★ 1933- ஹிட்லர் தொழிற்சங்கங்களை தடை செய்தார்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: பேர்லினைத் தாம் கைப்பற்றியதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது. ஜேர்மனியப் படைகள் இத்தாலியில் சரணடைந்தன.

★ 1952- உலகின் முதலாவது ஜெட் விமானம், டி ஹாவிலண்ட் கொமெட் 1, முதற்தடவையாக லண்டனுக்கும் ஜொகான்னஸ்பேர்க் நகருக்கும் இடையில் பறந்தது.

★ 1964- வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கக் கப்பல் ஒன்று குண்டு வெடிப்பில் மூழ்கியது.

★ 1964-8ஆயிரத்து 27 மீற்றர் உயர ஷிஷபங்குமா மலையின் உச்சியை சீனாவின் இரு மலையேறிகள் எட்டினர்.

★ 1982-போக்லாந்து போர்: பிரித்தானியாவின் எச்.எம்.எஸ்.கொன்கரர் என்ற நீர்மூழ்கிக் கப்பல் ஆர்ஜென்டீனாவின் போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.

★ 2002- கேரளாவில் பாலக்காடு நகரில் இடம்பெற்ற கலவரங்களில் 8 இந்துக்கள் உயிரிழந்தனர்.

★ 2004- நைஜீரியாவில் 630 முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களால் உயிரிழந்தனர்.

★ 2006- குஜராத் மாவட்டத்தில் மசூதி ஒன்று இடிக்கப்பட்டதை அடுத்து இடம்பெற்ற கலகத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

★ 2009-வல்லிபுரக்குறிச்சி மருதடி தான்தோன்றீஸ்வரர் தேர்.

### பிறப்புக்கள்

★ 1921-சத்யஜித் ராய், இந்தியத் திரைப்பட இயக்குநர் (இ.1992)

★ 1969- பிறயன் லாறா, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாளர்.

★ 1975- டேவிட் பெக்காம், இங்கிலாந்து கால்பந்து ஆட்டக்காரர்.

★ 1983- ஈழநிலா, ஈழத்துக் கவிஞர்.

### இறப்புக்கள்


★ 1519-லியனார்டோ டாவின்சி, இத்தாலிய ஓவியர் (பி.1452)

★ 2009- கே. பாலாஜி, தமிழ்த் திரைப்பட நடிகர், தயாரிப்பாளர்

### சிறப்பு நாட்கள்

★ போலந்து-கொடி தினம்

★ ஈரான்- ஆசிரியர் தினம்



புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய சித்திரைத் திருவிழா நிகழ்வில் வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசினை வேலணை பிரதேச சபை தவிசாளர் சிவராசா மற்றும் வவுனியா தபாலதிபர் என்.கமலதாஸன் ஆகியோர் வழங்குவதையும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட வீரர்களையும் படங்களில் காணலாம்.

# பிரேரணைத்தீர்மானத்திற்கும் பீரிஸின் அமெரிக்க விஜயத்திற்கும் தொடர்பில்லை



## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கும் இம்மாதம் நடுப்பகுதியில் வெளிவிவகார அமைச்சர் மேற்கொள்ள்வுள்ள அமெரிக்க விஜயத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனின் அழைப்பின் பேரில் இருதரப்பு பேச்சுக்களை மேற்கொள்ளவே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அமெரிக்கா செல்கின்றார்.

இம்மாத நடுப்பகுதியில் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டு அமெரிக்காவில் மே மாதம் இரண்டாம் வாரமளவில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் அந்நாட்டின் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனுடன் பேச்சுவார்த்தையும் நடத்தவுள்ளார்.

இதன்போது யுத்தத்தின் பின்னரான இலங்கையில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றங்கள், நல்லிணக்க செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான விளக்கத்தை அமெரிக்காவுக்கு அமைச்சர் பீரிஸ் வழங்கவுள்ளார்.

குறிப்பாக கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்படும். ஆனால், ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கும் வெளிவிவகார அமைச்சரின் அமெரிக்க விஜயத்துக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனின் அழைப்பின் பேரில் இருதரப்பு பேச்சுக்களை மேற்கொள்ளவே வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அமெரிக்கா செல்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு ஆட்டோ உரிமையாளர்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

போயிட்டி அச்செழுவைச் சேர்ந்த றொபோட் கிறிஸ்டன் (வயது 14) என்பவருடைய இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்படைந்துள்ளது.

சிறுநீரக மாற்றுச்சிகிச்சைக்கு உதவுமாறு நேற்றைய வலம்புரியில் விடுக்கப்பட்ட இக்கோரிக்கைக்கு அமைவாக இச் சிறுவனுக்கு உதவும் நோக்கில் கே.கே.எஸ்.வீதி கோண்டாவில் மேற்கில் ஆட்டோ தரிப்பை மேற்கொண்டு வரும் ஆட்டோ உரிமையாளர்கள் 8 ஆயிரத்து 50 ரூபாவை வழங்கியுள்ள்னர். (அ)

# இராஜதந்திர நெறிமுறைகளை மீறினார் ஜனாதிபதி மஹிந்த

## வெளிவிவகார அமைச்சின் அதிகாரி சுட்டிக்காட்டு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ளப்பட்ட இராஜதந்திர நெறிமுறைகளைப் பின்பற்றத் தவறுவதால் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளும் துறைசார்ந்த அமைச்சர்களும் பாரிய நெருக்கடிகளைச் சந்திப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய நாடாளுமன்றக் குழுவின் இலங்கை பயணத்தின் போது இராஜதந்திர நெறிமுறைகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக்குழு இரண்டாம் நிலைக்குழுவே என்றும் ஆனால், அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளாார்.

இரண்டாம் நிலைக்குழுவான இந்தியக் குழுவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜனாதிபதி மஹிந்த இரண்டுமுறை அவர்களைச் சந்தித்திருந்தார். முதலில் சுஷ்மா சுவராஜை தனியாகவும் மறுநாள் இந்திய நாடாளுமன்றக்குழுவுடனும் அவர் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

இது வெளிவிவகார அமைச்சரை நெருக்கடிக்குள் தள்ளியது. அத்துடன் இலங்கையின் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் இந்த இராஜதந்திர நெறிமுறையை பலமுறை மீறியுள்ளார்.

அவர் கொழும்பிலும் இந்தியக்குழுவினர் பயணம் செய்த முல்லைத்தீவு, ஹற்றன், மட்டக்களப்பு என்று ஏனைய பல இடங்களிலும் அவர்களைச் சந்தித்துள்ளார். இது இராஜதந்திர நெறிமுறைகளுக்கு முரணானது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# படகுகளில் பயணிப்போருக்கு உயிர்காப்பு அங்கி வழங்க உத்தரவு

படகு பயணம் மற்றும் கடற்றொழிலாளர் படகுகளிலும் செல்வோருக்கு உயிர் பாதுகாப்பு அங்கிகளை வழங்க வேண்டுமென படகுகளின் உரிமையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

வருடாந்தம் ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட இளைஞர்களும் பாடசாலை பிள்ளைகளும் நீரில் மூழ்கி பலியாவதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்விடயமாக பலமுறைகள் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் அநேகர் அதனைக் கருத்திற் கொள்வதில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இவ்விடயமாக கடற்றொழில் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

அங்கி அணியாமல் செல்லும் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பயணத்தில் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கே இந்த ஏற்பாடு அமுலாக்கப்பட்டுள்ளதெனவும் உல்லாச பிரயாண ஹோட்டல்களுக்காக வேலை செய்யும் தனியார், படகு உரிமையாளர்களும் பாதுகாப்பு அங்கிகளை வழங்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளனர். (அ-2)

# போதை தலைக்கேறி நடு வானில் கலகம் ஏற்படுத்திய மூவர் கைது

பாங்கொக்கில் இருந்து இலங்கை நோக்கி வந்த இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் குடிபோதையில் கலகம் ஏற்படுத்திய இருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டவர்கள் மாலைதீவு பிரஜைகள் என தெரிவந்துள்ளது. பாங்கொக்கில் இருந்து நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு இலங்கை நோக்கி வந்த விமானத்தில் இவர்கள் இவ்வாறு கலகம் ஏற்படுத்தியுள்ளதோடு நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு விமானம் கட்டுநாயக்கவை வந்தடைந்த பின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு சந்தேகநபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, டுபாயில் இருந்து வந்த இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் மது போதையில் கலகம் ஏற்படுத்திய இலங்கை பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (அ-9)

# ஐஸ் தொழிற்சாலையை ஆளுநர் பார்வையிட்டார்



வேலணை துறையூரில் JAICA நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ள ஐஸ் தொழிற்காலையை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அண்மையில் நேரில் சென்று அதன் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

இத்தொழிற்சாலையில் ஐஸ்கட்டி உற்பத்தி, சுகாதார முறையில் கருவாடு தயாரித்தல் மற்றும் உள்ளூரில் கொள்வனவு செய்யப்படும் மீன்கள்ளைப் பதனிடுதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆளுநரின் இவ்விஜயத்தின் போது ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர். (அ-9)

# யாழ்ப்பாண மே தினக்கூட்டத்தில் மக்களுக்கு அதிக விருப்பாம்

## ஜோன் அமரதுங்க எம்.பி.கூறுகிறார்


கொழும்பில் நடைபெறும் மேதினக் கூட்டங்களுக்கு பலவந்தமாக மக்களை அழைத்துவர முடிந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மேதினக்கூட்டத்தில் மக்கள் விருப்பத்துடனேயே கலந்துகொள்கின்றனர் என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பெருந்திரளான மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் அங்கு சென்றுள்ள ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு உணவு உபசரிப்புகளை வழங்கி வருகின்றனர்.

கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கு மக்களை பலவந்தமாக அழைத்து வரும் நடவடிக்கையானது காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவுக்கு செய்யும் அவமதிப்பாகும் எனவும் அமரதுங்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெறும் மேதினக் கூட்டங்களுக்கு மழை தடையேற்படுத்தக் கூடும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# ஐ.தே.கவினரின் யாழ்ப்பாண மேதினக் கூட்டம் சர்வதேசத்திற்கு தவறான செய்தியாகவே செல்லும்

## பிரதான எதிர்க்கட்சிக்கு கண்கள் இல்லையா எனக் கேட்கிறார் தினேஷ்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை இணைந்து நடத்தவுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் வடக்கில் மக்கள் அனுபவிக்கின்ற சுதந்திரத்தையும் அங்கு இடம்பெறுகின்ற பொருளாதார அபிவிருத்திகளையும் முதலில் கண்களைத் திறந்து பார்வையிடுமாறு கோருகின்றோம் என ஆளும் கட்சியின் பிரதமகொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்துகின்றனர்.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தின் மூலம் என்ன நடக்கப் போகின்றது என்பதனை எம்மால் தற்போதே கூறிவிட முடியும். அதாவது இந்த இரண்டு தரப்பினரும் இணைந்து நடத்தவுள்ள கூட்டத்தின் ஊடாக சர்வதேசத்துக்கு தவறான செய்தியே செல்லும் என்பதனை நாங்கள் உறுதியாக கூறுகின்றோம்.

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க வடக்கு பகுதிக்கு சென்று எவ்வாறான கூற்றுக்களை விடுத்தார் என்று அனைவருக்கும் தெரியும்.

இவர்களின் இந்த செயற்பாடு காரணமாக நாட்டுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ எவ்விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இதனை எம்மால் உறுதியாக கூற முடியும். யுத்தம் முடிந்துள்ள நிலையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி ஏற்பாடுகளை முதலில் பார்வையிடுங்கள். அதன் பின்னர் உங்கள் அரசியலை நடத்துங்கள் என்று அவர்களுக்கு கூறுகின்றோம் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(அ-2)

## செங்கல்பட்டு முகாமில் உண்ணாவிரதம் இருந்த 15 பேரை விடுதலை செய்ய அரசு சம்மதம்

தமிழகம், செங்கல்பட்டு இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் சிறைவைக்கப்பட்டுள்ளவர்கள் தம்மை விடுதலை செய்யக்கோரி கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரத போராட்டம் நடத்தி வந்துள்ள நிலையில் அவர்களில் 15 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் 13 நாட்களாக உண்ணாவிரதம் மேற்கொண்ட அகதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தங்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டுள்ளனர்.

கியூ பிரிவு பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகள் 32 பேர் செங்கல்பட்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தங்களை விடுவித்து திறந்தவெளி முகாமிற்கு மாற்ற வேண்டும். குடும்பத்துடன் சேர்த்து வாழவைக்க வேண்டும் என வலியுறுத்தி இவர்களில் 10 பேர் கடந்த ஏப்ரல் 16 ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் இவர்களுக்கு ஆதரவாக மேலும் 7 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். மொத்தம் 17 பேர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

எதிர்வரும் ஜுன் மாதம் 15 பேரும் பின்னர் அடுத்த கட்டமாக மற்றவர்களை விடுவிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்வதாக உறுதி அளித்ததன் பேரில் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு அதிகாரிகள் குளிர்பானம் கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தனர்.

இதேபோல் வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்ட 11 பேருக்கு அதிகாரிகள் இளநீர் கொடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தனர். (அ-2)

## பொன்சேகாவை பிணையில் விடுவிக்குமாறு கோரிய மனு மீதான விசாரணை இன்று

(கொழும்பு)


இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை பிணையில் விடுதலை செய்யுமாறு கோரிய மனு இன்று புதன்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவின் தலைமையிலான நீதியரசர்களின் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே வெள்ளைக்கொடி வழக்கில் தண்டனை பெற்றுள்ள சரத் பொன்சேகா அவரின் மருமகன் நடத்தி வந்த ஆயுத இறக்குமதி நிறுவன ஊழல் தொடர்பான வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டதன் முதல் தடவையாக சரத் பொன்சேகா பிணை கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)



செலிங்கோ ஆயுள் பகுதி நெல்லியடிக்கிளையின் வாடிக்கையாளரான தம்பிமுத்து ஆனந்தபாஸ்கரனின் மரணத்தையடுத்து அவரது இழப்பீட்டுத் தொகையாகிய ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையை நெல்லியடிக் கிளையின் முகாமையாளர் து.நிரோஜன், அவரது மனைவியாகிய திருமதி ஆ.சகுந்தலாதேவியிடம் வழங்குவதையும் அருகில் கிளையின் சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி த. இராஜகோபா, விற்பனை மேற்பார்வையாளர் கு.பகீரதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## போக்குவரத்து படியை அதிகரிக்கக்கோரி அரச மருத்துவர்கள் பகிஷ்கரிக்க தீர்மானம்

(கொழும்பு)

போக்குவரத்துப் படியை அதிகரிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் தவறியதையடுத்து எதிர்வரும் வாரம் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 60 கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கடந்த வார இறுதியில் நடைபெற்ற சங்கத்தின் கூட்டத்தின் போது ஏகமனதாக இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் அநுருத்த பாதெனிய கூறினார்.

தமது சங்கத்தின் பிரதிநிதிகள் இவ் வருட ஜனவரி மாதம் ஜனாதிபதியை சந்தித்த போது போக்குவரத்துப் படியை 15 ஆயிரம் ரூபாவிலிருந்து 29 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதாக உறுதியளிக்கப்பட்டதாகவும் ஆனால், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த 15 ஆயிரம் ரூபா அலவன்ஸ் எரிபொருள் செலவுக்கானதாகும். தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தொகை போதுமானதல்ல. அரசியல்வாதிகள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் அரச வாகனங்களையும் ஏனைய பல சலுகைகளையும் பெறுகின்றனர். நாம் அத்தகைய நன்மைகளை பெறுவதில்லை. அதனால் தான் இந்தப் படியை அதிகரிக்க வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார். அரசாங்க மருத்துவர்கள் குறைந்தபட்ச மாதாந்த சம்பளமாக 28 ஆயிரம் ரூபாவை பெறுகின்றனர். ஆரம்ப நிலை மருத்துவ அதிகாரிகள் அதிகபட்ச சம்பளமாக 56 ஆயிரம் ரூபாவை பெறுகின்றனர் என்றார். (அ)

## கழிவுப் பொருட்களில் மின்சாரம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு மின்சாரத்தை பெறும் வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பிக்க உலக வங்கி நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை இந்தியாவின் நிறுவனமொன்று பொறுப்பேற்றுள்ளதுடன் 9 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வழங்குகிறது.

இந்த திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற மின்சாரத்தை தேசிய மின்சார வலையமைப்புடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதில் இருந்து 10 மெகா வோல்ட் மின்சாரத்தை பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-9)

# தேசப்பற்று, தேசத்துரோகம் இவற்றிற்கு அரசு கொடுக்கும் வரைவிலக்கணம்....?



எத்தகைய சட்டத்தையும் ஆக்க முனையும்போது முதலில் பலியாவது ஜனநாயக விழுமியங்களே என்பதை மறைப்பதற்காக காட்டப்படும் கவர்ச்சிகளில் மயங்கியோர் தற்போது மயக்கம் தெளிய நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

அமெரிக்காவின் பொஸ்ரன் பல்கலைக்கழக அரசறிவியல் பேராசிரியராக இருந்த ஹொவார்ட் ஷீன் என்பவர் எதிர்த்து நிற்பதும் தேசப்பற்றுத்தான் என்று காரணங்களோடு விளக்கியிருந்தார். சில சட்டங்களை எதிர்ப்போர் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்கள் என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் காட்ட முற்பட்டபோது பலரும் அதற்கெதிராக ஆதாரங்காட்டியது, மேற்சொன்ன தேசப்பற்று விளக்கத்தையே.

ஒரு காலத்தில் சட்டமாக இருப்பது பின்னர் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணானதென்ற வகையில் மக்களால் நிராகரிக்கப்படும்போது ஆட்சியாளர்கள் அதை ஏற்றேயாகவேண்டும். உதாரணமாக, சட்டரீதியில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டிருந்த அடிமை முறையையும் கறுப்பின மக்களுக்கு எதிரான நிற வேறுபாட்டையும் பிந்நாட்களில் அமெரிக்க மக்கள் எங்ஙனம் வெறுத்தொதுக்கினர் என்பதைக் குறிப்பிடலாம். இங்கு தேசப்பற்று என்பது சட்டத்தை எதிர்ப்பதன் மூலமே வெளிக்காட்டப்பட்டது. அவர்கள் பயங்கர வாதிகளாகப் பார்க்கப்படவில்லை.


ஆனால், இலங்கையில் அத்தகைய சட்டங்கள் கொண்டுவரப்பட்டபோது மக்கள் எதிர்ப்பைக் காட்டாமல் அவற்றை ஆதரிப்பதே தேசப்பற்று எனக்கருதிக்கொண்டார்கள். அதன் விளைவு மக்களை ஜனநாயகத்தை மறக்கச் செய்வதில் கொண்டுபோய் விட்டது.

தேசப்பற்று என்பது, வெறுமனே நிலத்தின்மீதும் மக்களின்மீதும் கொண்ட பற்றல்ல. நாடு என்பது உயிர்ப்புள்ளது. அது இச்சமுதாயத்தின் முழுமையான அடிப்படை விழுமியங்கள், அரசாங்கம், மக்களின் ஒட்டுமொத்தக் கலாசாரம், நாட்டுச் சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கி நிற்கும் என்று ஹொவார்ட் ஷீன் குறிப்பிடுகின்றார்.

உண்மைக்கும் நீதிக்கும் ஜனநாயகத்திற்கும் எது முரணாக நிற்க முனைகிறதோ அதுவே தேசப்பற்றின் முதல் எதிரி என்று அடையாளப்படுத்தப்பட வேண்டும். அப்படிப் பார்ப்பின் இலங்கையில் எதனை தேசப்பற்று என்று எங்களால் வரைவு செய்ய முடியும்?

புனிதப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் சட்டம் தேசப்பற்றை வளர்க்க உதவுகின்றதா? பகைவர்களை உருவாக்கப்பயன்படுகிறதா? என்பது சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டிய விடயம்.

துரதிர்ஷ்டவசமாக, புனிதப்பிரதேசங்களும் உயர் பாதுகாப்பு வலயங்களும் பகைவர்களை உருவாக்கப் பயன்படுத்தப்படுவதே இங்கு வழக்காயிற்று.



பன்மைத்துவ சமூகம் என்று ஒரு புறத்தில் கூறிக்கொண்டு மறுபுறத்தில் குறிப்பிட்ட ஓரினத்தின் மரபுகளும் மதச்செயற்பாடுகளும் தேசத்தின் ஒட்டுமொத்த அடையாளமாகப் பாவிக்கப்படவேண்டுமென நிர்ப்பந்தித்தால் தேசப்பற்றும் அங்ஙனமே குறுகிய விதத்தில் வடிவமைக்கப்படும். எதிர்ப்பாளர்கள் எல்லோருமே மாற்றுமொழி, கலாச்சாரத்தைக் கடைப்பிடிப்பவர்களாக அந்நியப்படுத்தப்படுகின்றனர்.

ஆகவே, சமத்துவம் என்பது சுத்தமான ஏமாற்று என்பதும் உலக அரங்கில் உபயோகமாகும் வெற்றுச் சொற்றொடராகும் என்பதும் இதனால் பெறப்படும்.

பெரும்பான்மை வாக்குப் பலத்தால் ஆக்கப்படும் சட்டங்களால் எந்த இடங்களும் புனிதப்பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்படலாம். சிறுபான்மை இனங்கள் வாழும் நாட்டின் எல்லாப் பகுதியுமே உயர் வலயமாக ஆக்கப்பட முடியும். இதுவே ஜனநாயக அரசியல் பெரும்பான்மை ஆட்சியின் இலக்கணமாக மாறிவிடுகையில் பன்மைத்துவம் என்ற பதத்தின் பொருள் பெரும்பான்மை இனத்தின் நலன்களை மட்டுமே பாதுகாப்பதில் சிறுபான்மை இனங்களும் பங்குபற்றல் என்றாகிவிடுகின்றது.


இதனை இன்னொரு விதத்தில் கூறுவதாயின், வடக்கு- கிழக்கு முழுப்பகுதியையுமே உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தும் சட்டமொன்றை இலங்கைப் பாராளுமன்றம் ஆக்க விரும்பினால் அதைத் தடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் எதுவும் அரசியல் அமைப்பு உட்பட எந்த சட்டத்திலும் கிடையாது எனலாம்.

அங்ஙனமே எந்தக் காணித்துண்டும் திடீரெனப் புனிதப்பிரதேசமாக மாற்றப்பட்டால் யார்தான் தடுப்பது? பன்மைத்துவச் சமூகம் ஒன்றில எல்லோரும் சமமாக நடாத்தப்படுவதாகச் சொல்வதன்பொருள் அத்தகைய சட்டங்களை ஆக்கும்போது சிறுபான்மையினரும் பங்குபற்றி வாக்களிக்கலாம் என்பது மட்டுமே.

இந்த விடயத்தில் ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்படுவதற்காக அவர்களைப் பாராட்டலாம். "நாங்கள் நினைப்பதே சட்டம் எங்கள் நலன்களே நாட்டின் நலன்கள்" என்று அவர்கள் வெளிப்படுகிறார்கள். அந்த நலன்களைப் பாதுகாப்பதில் சிறுபான்மையினரும் பங்குபற்றலையே ஜனநாயகம் என்றும் தேசப்பற்று என்றும் ஏற்கும் கட்டாயத்தில் சிறுபான்மையினர் இருக்கின்றார்கள். தேசிய கீதமும் தேசியக்கொடியும் சிறுபான்மையினரைப்பொறுத்த வரையில் சொல்லாமல் சொல்லும் உண்மைகள் இவைதான்.

எனவேதான், சிலவேளைகளில் சட்டங்கள் சிலரால் மீறப்படும் போது அது தேசப்பற்றின் அடையாளச் செயற்பாடாக அமைந்து விடுகின்றது. அதே வேலையை வேறு சிலர் செய்கையில் அது தேசத்துரோகமாகிவிடுகிறது. அவர்களை பயங்கரவாதிகளாக அதே சட்டம் சித்தரிக்கும்.

குறிப்பிட்ட ஓரனத்துக்கோ, மதத்தினருக்கோ எதிராக வன்முறையைத்தூண்டும் விதத்தில் பேசுதல், எழுதுதல் எல்லாம் குற்றம் என்று பிரிட்டிஷார் ஆக்கிவைத்து விட்டுப்போன சட்டங்களில் குறிப்பிடப்பட்டள்ளது. ஆனால் இதைச் சிலர் செய்தால், அது தேசப்பற்றின் அடையாளம் என்றும் வேறு சிலர் செய்ய முற்பட்டால் பயங்கரவாதம் என்றும் நடைமுறையில் காட்டி நிற்கின்றது. வேடிக்கை என்னவென்றால், நாட்டின் பன்மைத்துவத் தன்மையைச் சுட்டிக்காட்டித்தான் இவையெல்லாம் நடைபெறுகின்றன.



மிகச்சிறந்த உதாரணம், பத்திரிகையாளர் ஜே.எஸ்.திசநாயகம் எழுதிய சில விடயங்களுக்காக அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டார். குற்றச்சாட்டு என்னவென்றால், இனங்களுக்கிடையில் குரோதத்தை தூண்டும் விதத்தில் எழுதினார் என்பதாகும்.

ஆனால், தம்புள்ளயில் நடந்தவற்றிற்கு எந்தச் சட்டத்தின்கிழ் வழக்கிடுவது? யாரைத்தண்டிப்பது? முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா வழங்கிய இரு தீர்ப்புகளிலும் தற்போதும் உயர்நீதிமன்ற நீதியரசராக உள்ள சிராணி திலகவர்த்தன வழங்கிய தீர்ப்பொன்றிலும் அரசியல் அமைப்பு நன்கு ஆராயப்பட்டு இலங்கை மதசார்பற்ற ஒரு நாடென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. ஆன்லும், என்ன பயன்? மதசார்பற்ற நாடொன்றில் புனிதப் பிரதேசங்கள் எப்படி உருவாகின்றன? புனிதப் பிரதேசங்கள் குறிப்பிட்ட ஒரு மதத்தினருக்கு மட்டும்தானா? யாரால் எதனைத் தடுத்துநிறுத்த முடிகின்றது?

தேசப் பற்றும் தேசத் துரோகமும் எங்ஙனம் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது ஏன்பது இதனால் புலனாகும். சிறுபான்மை சமூகங்களை ஒன்று கலக்கச்செய்ய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டுமானால் இச் சமூகங்களின் தனித்துவ அடையாளங்களைப் பேணும் விடயங்கள் அரசியல் அமைப்பு ரீதியில் உத்தரவாதப் படுத்தப்படவேண்டும். அவை ஒரு தரப்பால் மட்டுமே மாற்றப்பட முடியும் என்றநிலை இருக்கக்கூடாது. தனித்துவ அடையாள நலன்களைப் பேணுதலும் தேசப்பற்றின் இன்றியமையாத ஓர் அம்சமே என்பது எல்லோருக்கும் புரியவைக்கப்பட வேண்டும்.

உண்மையான தேசப்பற்றாளன் சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் சிந்திக்கமாட்டான். ஆனால், இலங்கையில் தேசப்பற்றாளருக்கு சட்டத்தின் ஆட்சி தேவைப்படாத ஒன்று போலவே தோன்றுகிறது.

பன்மைத்துவம் பற்றி வெளியில் பிரசங்கிப்பதற்குப் பதிலாக சமூகத்தின் அத்தன்மையைப் பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கத்தின் நேர்மறைக் கடப்பாடுகள் என்ன என்பதை பட்டியல் இட்டுக்காட்டும் மனப்பாங்கு ஆட்சியாளரிடம் ஏற்படும்வரை தேசப்பற்றும் சட்ட ஆட்சியும் ஒருவழிப் பாதையாகவே தொடர்ந்துமிருக்கும் எனலாம்.

இந்த ஒரு வழிப்பயணத்திற்கு ஜெனீவாவரை *ரிக்கற்* எடுப்பவர்கள் இனி ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசிக்கக்கூடும்.

நன்றி:இணையம்

# மனிதக்கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் கைதாகினர்

(கொழும்பு)

**மனிதக் கடத்தலில் ஈடுபட்ட, குறிப்பாக தமிழர்களை கனடாவுக்கு அழைத்துச் செல்வதாக பொய்கூறி டோகா மற்றும் நியூகினியாவுக்கு அழைத்துச் சென்றுவிடும் கும்பல் என கூறப்படும் மூவரை கொழும்பு குற்றத்தடுப்பு பணியகம் கைது செய்துள்ளது.**

இவர்களிடமிருந்து 269 தமிழர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றதை நிரூபிக்கும் ஆவணங்களை கைப்பற்றியுள்ளதாகவும் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மேற்கு ஆபிரிக்க நாடுகளான டோகாவிலும் நியூகினியாவிலும் போக்கிடமின்றி கைவிடப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கனடாவுக்குச் செல்ல விரும்புவோரை தேடிக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபரை குற்றத்தடுப்பு பணியகம் கடந்த சனிக்கிழமை கைது செய்த போது இந்த மனிதக்கடத்தல் மோசடி தொடர்பில் சனிக்கிழமையும் கைது செய்த போது இந்த மனிதக் கடத்தல் மோசடி தொடர்பில் தெரிய வந்துள்ளது.

ஆபிரிக்காவிலிருந்து போலிக்கடவுச்சீட்டுடன் இலங்கை வந்து வெள்ளவத்தையில் ஒரு விடுதியில் தங்கியிருந்த போது மற்றவர் கைது செய்யப்பட்டார்.

மனித கடத்திலில் இவரோடு சேர்ந்து செயற்பட்டதாக கூறப்படும் மற்றைய சந்தேக நபரும் நியூகினி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்நபர் கைது செய்யப்பட்டதை அடுத்தே பிரதான கடத்தல்காரர் இலங்கைக்கு வந்துள்ளார்.

அதே தினத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மாலியிலிருந்து வந்திறங்கிய புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் தம்பதியினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


மனிதக் கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கான தரகு வேலை பார்ப்பதில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என கூறப்பட்டது.

இவர்களில் ஒருவர் கொழும்பு பிரதான நீதவான் முன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்செய்யப்பட்டார்.

இவரை மே மாதம் 9 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதவான் பணித்தார்.

மனிதக் கடத்திலில் ஈடுபட்டோர் வாடகைக் கப்பலில் ஆட்களை அழைத்துச் சென்று இந்த மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கடற்கரைகளில் இறக்கிவிட்டு வந்துவிடுவதாக நியூகினி பொலிஸார் கூறினர். (அ-2)

## பாரதிதாசன் பல்கலைக்கழக விருது பேராசிரியர் வேல்நம்பிக்கு



யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தமிழ்நாடு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினால் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்குரியவராகத் (Distinguished Life time Achievement Award in Management 2012) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆய்வுகளும் பிரசுரிப்புகளும் நிர்வாக ரீதியான திறன்கள், உள்நாட்டு வெளிநாட்டு, கல்வி ரீதியான பங்களிப்புகள் என்ற அடிப்படையில் சர்வதேசரீதியிலான விண்ணப்பங்களுக்கு அமைய பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான முகாமைத்துவ ஆய்வு மையத்தினால் இவ்விருதுக்குரியவர் தெரிவு செய்யப்படுகின்றார். இவ்வாண்டுக்குரிய விருதுக்குரியவராக இலங்கையில் இருந்து பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புத்தூரை பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருநாவுக்கரசு– யோகமணி தம்பதியினரின் புதல்வரும் ஸ்ரீ.சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (ந)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தோல் நோய்களில் மூலிகை பாவனை

(சென்றவாரத் தொடர்ச்சி...)

+ சிலரது தோலில் கற்றாழை நாற்றம் போல் வியர்வைத் துர்நாற்றமடிக்கும். அவர்கள் ஒரு எலுமிச்சம் பழச்சாற்றின் சந்தனத்தை குழைத்து உடலில் பூசி 1/ 2 மணி நேரம் கழித்து குளிக்கவும். இவ் வாறு தொடர்ந்து 15 நாட்கள் செய்ய அகலும். அல்லது ஆவாரம் பூக்களை சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடி த்து அரித்த தூளில் தினமும் காலையில் 1/2 தேக்கரண்டி தண்ணீரில் கலக்கி 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம்.

+ கோடை காலத்தில் உடற்சூட்டினால் உண்டாகும் கட்டிகளுக்கு ஒரு சிறிய வெங்காயத்தை எடுத்து நெருப்பில் சுட்டு அத்துடன் 2 கிராம் மஞ்சள் தூள், 1/2 தேக்கரண்டி நெய் விட்டு பிசைந்து கட்டியின் மீது காலை, மாலை பூசலாம். அல்லது மல்லிகைப் பூக்கள் 1/2 கைபிடியளவு எடுத்து மைபோல அரைத்து வைத்துக் கட்டலாம். அல்லது ஊமத்தம் இலைகளின் மீது ஆமணக்கெண்ணெய் தடவி அனலில் காட்டி கட்டி மீது வைத்துக் கட்ட கட்டி பழுத்து உடையும்.

+ வண்டுகொல்லி இலையை இடித்துச் சாறுஎடுத்து சாற்றினுள் தேசிப்புளி விட்டு அந்தச்சாற்றை வட்டக்கடிக்குப் பூசலாம்.

+ வண்டுகொல்லி இலையை சுத்தமாகக் கழுவி சிறுசிறு துண்டுகளாக அரிந்து நெய்யில் வதக்கி ஒரு தேக்கரண்டி சாப்பிட மலக்கட்டி உள்ளவர்களுக்கு மறுநாள் 2-3முறை மலம் இலகுவாகக் கழியும். தோல் வியாதி உள்ளவர்களுக்கு மலம் ஒழுங்காகக் கழிக்கவேண்டும். ஏனெனில் தோல்வியாதியில் பித்ததோசம் சம்பந்தப்படுவதால் அதிகரித்த பித்தத்தை அகற்ற மலமிளக்கி, நீர்மலம்போக்கி செய்கைகள் அவசியம்.

+ அகத்திக்கீரையுடன் சம அளவு தேங்காய் சேர்த்து அரைத்துச் சாறு எடுக்கவும். பின்பு அதில் மஞ்சள்தூள் சிறிதளவு சேர்த்து கரும் படை, தேமல், சொறி, சிரங்கு போன்றவற்றிற்கு பற்றுப்போட்டால் விரைவில் குணமடையும்.

+ அத்திக்காயை துவரம்பருப்பு சேர்த்து சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடல் அரிப்புக் குணமாகும்.

+ கிரந்திநாயகன் எனும் செடி யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பரம்பிக் காணப்படும். இந்தச் செடிகளைச் சேகரித்து நிழலில் உலர்த்தி உலர்சரக்காக 35 கிராம் அளவு எடுத்து 400 மில்லி தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்கு வைக்கவோ அல்லது கிரந்திகளுக்கு வெளிப்பூச்சாகவோ சிறியவர் முதல் பெரியோர் வரை பயன்படுத்தலாம்.

+ குழந்தைகளுக்குக் கைப்பிடியளவு காக்கணவன் இலைகளை எடுத்து அரைத்து சிறு குழந்தைகளின் தலையில் தேய்த்துக் குளித்துவர சளி வராது தடுப்பதுடன் தலையிலுள்ள பொடுகுத்தொல்லை, அவியல் நீங்கும்.

+ பொடுதலை எனும் மூலிகையைச் சிறிதளவு துண்டுகளாக்கி நிழலில் காயவைத்து அதேயளவு சீயாக்காய், வெந்தயம், உலர்ந்த செவ்வரத்தம்பூ இதழ்களுடன் சேர்த்து பொடியாக்கி முழுகும்போது சம்போவுக்குப் பதிலாக இதனைச் சுடுநீரில் கரைத்து அடிமயிருக்கு ஒன்றாக நுரைக்கத்தேய்த்து குளிக்க பொடுகுத் தொல்லை நீங்கும்.

+ சந்தனக்கட்டையை அரைத்து வெண்சந்தனக்கழியாக எடுத்து அதனுள் பச்சைக்கற்பூரத்தை பொடித்து அதனுடன் கலந்து அரைத்து அக்கி, வியர்க்குருவுக்குப்பூசிவரக் குணமாகும். வெப்பகாலத்தில் ஏற்படும் வியர்வை நாற்றம் நீங்கி மேனி பளபளப்பாக வர கற்றாழைச்சோறு எடுத்துப் படிகாரத்தைத் தூவ சாறு இறங்கும். இந்தச்சாற்றை அரை அல்லது ஒரு மணித்தியாலத்திற்கு உடலில் பூசி சுத்தமான குளிர்நீரில் குளித்துவர மேனி பளபளப்பாகும்.





+ ஆடு தீண்டாப்பாளைச்சாற்றுடன் அதேயளவு நல்லெண்ணெய்கூட்டி எரித்து பக்குவப்பதத்திலெடுத்து வடிகட்டி கரும்படை, கரப்பானுக்குப்பூசலாம்.

+ இலைகளை எடுத்து அரைத்துப் புண், பேன் இவைகளைப்போக்க பூசிக்குளிக்கலாம். இலைகள் நல்ல மணமுடையதால் எண்ணெய்களில் சேர்ப்பதுண்டு.

+ மஞ்சள் சுட்ட சாம்பலை தேங்காய் எண்ணெயில் சிறிதுநேரம் சூடாக்கி பூசி வந்தால் தோல்நோய் படை, தேமல் குணமாகும்.

+ அம்மான் பச்சரிசிக் கீரை, கீழ்காய் நெல்லி, வெந்தயம் மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்துத் தினமும் காலை, மாலை இருவேளையும் 15கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் வெண்குஷ்டம் குணமாகும்.

+ அறுகம்புல் வேரைக்காயவைத்து பொடி செய்து ஒரு பங்கிற்கு 5 பங்கு நல்லெண்ணெய் கலந்து சூடுபடுத்தி உடலில் தேய்த்துக் குளிக்க தோல்நோய்கள் வராது.

+ ஆவாரம்பூ, பச்சைப்பயறு இரண்டையும் சேர்த்து அரைத்து நமைச்சல் உள்ள இடத்தில் தேய்த்துக்குளிக்க நமைச்சல் குணமாகும்.

+ எலுமிச்சைப்பழத்தை பிழிந்துவிட்டு அதன் தேலின் உட்புறம் வெளியேவரும்படி செய்து முழங்கை, பின்கழுத்து போன்ற இடங்களில் நன்றாகத் தேய்த்துவந்தால் கறுப்புநிறம் மறையும். அல்லது எலுமிச்சம்பழச் சாற்றில் தேன்கலந்து முகத்தில் பூசிவந்தால் தோல்சுருக்கம் மறையும்.

+ கருஞ்சீரகத்தை தயிர்சேர்த்து அரைத்து உடலில் அரிப்புள்ள இடங்களில் தடவி வந்தால் படைசொறி, சிரங்கு போன்றவை மறையும்.


+ தேள் கொடுக்கு இலைகளை கழுவிச் சுத்தம்செய்து இடித்துப் பிழிந்துசாற்றை தேசிப்புளி சேர்த்து சிரங்கு மற்றும் தொற்றுக்களால் ஏற்பட்ட தோல் நோய்களுக்குப் பூசலாம். அல்லது ஒரு கப் தேள்கொடுக்கு இலைச்சாற்றை 1 கப் தேங்காயெண்ணெய்யுடன் காய்ச்சி வற்றவைத்துக் கரப்பானுக்குப் பூசலாம்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

+ அனிச்சை இலைகளை சுத்தம் செய்து சமஅளவு மஞ்சளுடன் சேர்த்து பசைபோல் அரைத்து எடுத்து சிரங்கு, கரப்பானுக்கும் எவ்வகையான தோல்வியாதிகளுக்கும் சரி இதனைப்பூசி அரை மணித்தியாலம் கழித்து கழுவிவரவும். அதற்கு முன் வேப்பிலை, மஞ்சள் சேர்த்தரைத்து சாற்றால் கழுவிய பின் அனிச்சைப் பசையால் பூசவும்.

**குறிப்பு:- இங்கு குறிப்பிடப்பட்ட மூலிகைகள் அனைத்தும் யாழ். மாவட்டத்தில் இயற்கையாகப் பரம்பிக்காணப்படுபவையாகும்.**

**எனவே பக்கவிளைவுகளற்ற இம்மூலிகைகள் சருமத்தை பாதுகாக்கப் பயன்படுத்தத் தவறக் கூடாது.**







# சிறுவர் அரங்கம்

88


## அம்புலி மாமா கதைகள்

# மரணத்தின் தலைவாயிலில்...



பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒருநாள் ஔரங்கசீப், மார்வார் மன்னரான (தற்போது ஜோத்பூர்) ஜஸ்வந்த்சிங்கை தன் மாளிகைக்கு விருந்தினராக அழைத்திருந்தார். இருவரும் அரண்மனை நந்தவனத்தில் உலவிக் கொண்டிருந்த போது அங்கே ஒரு கூட்டில் அடைக்கப்பட்டிருந்த பயங்கரமான ஒரு புலியைக் காட்டி, "ஜஸ்வந்த்! இதுபோன்ற ஒரு புலியை நீங்கள் பார்த்ததுண்டா?" என்று ஔரங்கசீப் கேட்டார்.

அதற்கு ஜஸ்வந்த் சிங் எங்கள் ராஜபுத்திர வம்சத்தில் சிறுவர்கள் புலிகளுடன் விளையாடுவது வழக்கம்! என்று கிண்டலாகக் கூறியதோடு நிற்காமல் தன்னுடன் இருந்த தனது மகன் பிருத்விசிங்கைக் கூண்டினுள் நுழைந்து புலியுடன் சண்டையிடச் சொன்னார். பதினாறே வயதான அந்தச் சிறுவன் மிகவும் தைரியமாகக் கூண்டினுள் நுழைந்து புலியுடன் சண்டையிடத் தொடங்கினான். புலிக்கு சரிக்கு சரியாக மல்யுத்தம் புரிய புலியும் பிருத்விசிங்கும் கட்டிப் புரண்டனர். இறுதியில் தன் இடையிலிருந்த கத்தியை உருவி அவன் புலியின் மார்பில் பாய்ச்ச புலி துடிதுடித்து சுருண்டு விழுந்து இறந்தது. அதைக் கண்ட ஔரங்கசீப்பினால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. இந்தச் சிறுவனே புலியைக் கொல்லும் அளவிற்கு வீரன் எனில் அவனுடைய தந்தை எத்தகைய மகாவீரனாக இருப்பார் என்று நினைத்துப் பயந்தார்.



ஜஸ்வந்த்சிங்க் ஆண்டு வந்த மார்வார் ராஜ்யம் ராஜஸ்தானில் தார் பாலைவனத்திற்கு அருகிலிருந்தது. மிகவும் வறண்ட பூமியான அங்கு எப்போதும் தண்ணீருக்குப் பஞ்சம். ஆதலால் வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் மார்வார் நாட்டு ராஜபுத்திரர்கள் வீரத்திற்குப் புகழ் பெற்றவர்கள். தங்கள் தாய்நாட்டினை உயிருக்கும் மேலாக நேசிப்பவர்கள்! தங்கள் தாய் மண்ணைக் காக்க உயிரையும் திரணமாக மதிப்பவர்கள்!

அந்த வம்சத்தில் உதித்த ஜஸ்வந்த்சிங் வலிமையிலும் வீரத்திலும் சிறந்து விளங்கியதில் வியப்பு இல்லை. தனக்கு எதிர்காலத்தில் ஜஸ்வந்த்சிங் போட்டியாக வரக்கூடும் என்று எண்ணிய ஔரங்கசீப் அவரை முளையிலேயே கிள்ளியெறிய விரும்பினார்.

ஆனால் அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை. ஜஸ்வந்த்சிங்கை போரில் தோற்கடிக்க ஔரங்கசீப் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியுற்றன. அதற்கு முக்கிய காரணமாயிருந்தவன் முகுந்ததாஸ்! மன்னரின் நம்பிக்கைக்கு மிக்க பாத்திரமாக இருந்த அவனுடைய சாமர்த்தியத்தினால் ஔரங்கசீப் ஜஸ்வந்த்சிங்கை கொல்ல எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி பெறவில்லை.

ஆகவே முதலில் முகுந்ததாசை ஒழித்துக் கட்ட விரும்பிய ஔரங்கசீப், ஒருமுறை அவனை தன் தர்பாருக்கு வரவழைத்தார். ஜஸ்வந்த்சிங்கைக் கொல்ல அவர் முகுந்ததாசைத் தன்னுடன் ஒத்துழைக்கக்கோரினார். அதற்கு ஒப்புகொள்ள மறுத்த தாசை கடுமையாக தண்டிக்க எண்ணிய ஔரங்கசீப் அவனை ஒரு புலியின் கூண்டினுள் பிடித்துத் தள்ளி விட்டார். பசியுடனிருந்த புலி அவன் மீது பாய முயன்ற போது முகுந்ததாஸ் அதன் கண்களை உற்று நோக்கி ஔரங்கசீப்பின் புலியே ஜஸ்வந்தசிங்கின் வளர்ப்பு புலியுடன் மோதிப்பார்! வா என்று சவால் விட முகுந்ததாசின் பார்வையின் தீவிரத்தைப் பொறுக்க முடியாமல் புலி பின் வாங்கிவிட்டது.

ஔரங்கசீப் அவனுடைய வீரத்தைக் கண்டு வியந்து போனார். முகுந்ததாசின் துணிச்சலைப்பாராட்டி அவனுக்குப் பரிசுகள் அளித்து அனுப்பி வைத்தார். ஜஸ்வந்த்சிங்கின் நண்பர்களைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்டு அவரை அழிக்க முயன்றார். அதனால் ஜஸ்வந்த்சிங்குடன் சமரச பேச்சுவார்த்தைகள் நடத்தி அவரைத் தன் நண்பராக்கிக் கொண்டதுடன் அவரைத் தன் தளபதிகளில் ஒருவராக ஆக்கினார்.

பின்னர் ஆப்கானிஸ்தான் நாட்டுப் புரட்சியாளர்களை ஒடுக்க ஜஸ்வந்த்சிங் தலைமையில் ஒரு பெரும் முகலாயப் படையை காபூலுக்கு அனுப்பினார். ஔரங்கசீப்பின் நயவஞ்சகத் திட்டங்களில் அதுவும் ஒன்று என்று அறியாத ஜஸ்வந்த்சிங் தனது மனைவியுடனும், இரு புதல்வர்களுடனும் நூற்றுக்கணக்கான ராஜபுத்திர வீரர்களுடனும் காபூலுக்குச் சென்றார்.

தனது வலிமை மிக்க எதிரியை நட்பின் போர்வையில் வஞ்சகமாக காபூல் அனுப்பிய பின்னர் ஔரங்கசீப் ஜஸ்வந்த்சிங்கின் மூத்த மகன் பிருத்விசிங்கை தனது தர்பாருக்கு வரவழைத்து விருந்தினனாக சில நாட்கள் உபசரித்தபின் அவனுக்கு ஒரு பொன்னாடையைப் பரிசளித்துப் போர்த்தினார்.

அதைப் போர்த்திக் கொண்ட சில நிமிடங்களிலேயே உடலெங்கும் தீப்பிடித்தது போல் பற்றி எரிந்து கொப்புளங்கள் உண்டாகி பிருந்த்விசிங் துடிதுடித்து இறந்து போனான். அந்தப் பொன்னாடையில் கடுமையான விஷம் பூசப்பட்டிருந்தது.

தன் மூத்த மகன் இறந்த செய்தி கேட்டு காபூலில் இருந்த ஜஸ்வந்த்சிங் துடித்துப் போனார். காபூலில் புரட்சியாளர்களுடன்நிகழ்ந்த போரில் அவருடைய ஏனைய இரு புதல் வர்களும் கொல்லப்பட்டனர். இவ்வாறு தன் பிள்ளைகள் அனைவரையும் இழந்த சோகத்தில் ஜஸ்வந்த்சிங் காபூலிலேயே இறந்தார். ஔரங்கசீப்பின் திட்டம் முழுமையாக நிறைவேறியது. மார்வார் மீது ஔரங்கசீப் படையெடுத்து அதைத் தன் வசம் கொண்டு வந்து விட்டார்.

ஆனால் அவருடைய நிம்மதியைக் குலைக்கும் வண்ணம் ஒரு தகவல் அவர் செவிகளை எட்டியது. ஜஸ்வந்த்சிங் காபூலில் இறந்த சமயம் அவரது மனைவி கர்ப்பமாயிருந்தாள். சில மாதங்களுக்குப்பின் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ராணி தன் குழந்தை அஜீத்சிங்குடன் மார்வார் திரும்பி வருவதாகத் தகவல் கிடைத்தது. ஜஸ்வந்த்சிங்குடன் சென்ற ஆயிரக்கணக்கான ராஜபுத்திர வீரர்களும் நாடு திரும்புவதாக செய்தி கிடைத்தது. ஜஸ்வந்த் குடும்பத்தை ஆண் வாரிசே இல்லாமல் அழித்து விட்டதாக எண்ணிய ஔரங்கசீப்பிற்கு இந்தச்செய்தி கவலையளித்தது. பிறந்த குழந்தை அஜீத்சிங்கையும் கொன்றுவிடத் திட்டம் தீட்டினார்.

காபூலிலிருந்து திரும்பியவர்களை தன் தர்பாருக்கு அழைத்து அவர்களுக்கு நட்புக்கரம் நீட்டிய ஔரங்கசீப் அவர்களை விருந்தினர் மாளிகையில் தங்க வைத்து உபசரித்தார். போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கிய ராஜபுத்திர தளபதி துர்காதாசை தன்னிடம் அழைத்து ஔரங்கசீப் அவர்களுக்கு மார்வார் ராஜ்யத்தைத் திருப்பித் தருவதாக வாக்களித்தார். பதிலுக்கு அவர்கள் குழந்தை அஜீத்சிங்கைத் தன்னிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். ஔரங்கசீப்பின் வஞ்ச கத்தை அறிந்த துர்கா தாஸ் அதற்கு ஒப்பவில்லை. இனி அங்கு விருந்தாகியாகத் தங்கினால் குழந்தை அஜீத் சிங்கின் உயிருக்கு ஆபத்து என்று அறிந்து கொண்ட துர்காதாஸ் இளவரசனை அங்கிருந்து வெளியேற்றத் திட்டம் தீட்டினார்.

அதன்படி கோராதாயி என்ற ஆயா குழந்தை அஜீத்சிங்கை எடுத்துக்கொண்டு ரகசியமாக வெளியேறினாள். அதற்குப் பதில் தன் குழந்தையை விட்டுவிட்டுச்சென்று விட்டாள். இதை அறிந்து கடுங்கோபம் கொண்ட ஔரங்கசீப் அவர்களைப் பிடிக்கத் தன் படைவீரர்களை ஏவினார். முகலாய வீரர்கள் இளவரசன் அஜீத்சிங்கை கைப்பற்றுவதைத் தடுக்க துர்காதாஸ் எஞ்சிய முந்நூறு ராஜபுத்திர வீரர்களுடன் அவர்களை எதிர்த்து சண்டையிட்டார். அவர்களுடைய மனைவிமார்கள் முகாலய வீரர்களிடம் சிக்காமல் தங்கள் மானத்தை காப் பாற்றிக் கொள்ளத் தீக்குளித்தனர்.

கடல் அலை போல் திரண்டு வந்த முகலாய வீரர்களை எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருந்த ராஜபுத்திர வீரர்களினால் சமாளிக்க முடியவில்லை. அப்படியிருந்தும் தங்கள் இளவரசர் அவர்களிடம் சிக்கக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன் இரத்தமும் சிந்திப் போரிட்டனர். அவ்வாறு எதிர்த்து சண்டையிட்டவர்களில் ராணியும் ஒருத்தி. ஆனால் நாற்புறமும் முகலாய வீரர்கள் ராஜபுத்திரர்களை சூழ்ந்து கொள்ள அவர்களிடம் சிக்க விரும்பாத ராணி தன் மார்பில் வாளைப் பாய்ச்சிக் கொண்டு போர்களத்தில் இறந்தாள். ராஜபுத்திரர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டனர். உயிருடன் மிஞ்சியது ஏழுபேர் மட்டுமே. ஆனால் அவர்களுடைய அரும்முயற்சியினால் கோராதாயி இளவரசரை பத்திரமாக எடுத்துச்சென்று தப்பிவிட்டாள்.

கோராதாயி கண்காணாத ஒருமலைப் பிரதேசத்திற்கு இளவரசன் அஜீத்சிங்கை எடுத்துச்சென்று வளர்த்தாள். பல ஆண்டுகள் தான் யார் என்பதே தெரியாமல் வளர்ந்த அஜீத்சிங் பெரியவனான பிறகே தன்னைப் பற்றி அறிந்து கொண்டான். அதற்குள் மார்வார் நாட்டு மக்களுக்குத் தங்கள் இளவரசரைப் பற்றிய தகவல் தெரிந்து விட அவனை ராஜமரியாதையுடன் அழைத்து வந்தனர். வளர்ந்து வாலிபனான பின்னர் அஜீத்சிங் ராஜபுத்திர வீரர்களைத்திரட்டி இழந்த தன் ராஜ்யத்தை முகலாயர்களிடமிருந்து மீட்க ஏற்பாடுகள் செய்தான்.



வயோதிபத்தை அடைந்த ஔரங்கசீப் இறுதியில் 1707 ஆம் ஆண்டில் உயிர் நீத்தார். அதன்பின் முகலாயர்களின் சேனையும் வீரர்களும் பலவீனம் அடைந்தன. இதை அறிந்த அஜீத்சிங் அவர்களுடன் போராடி தன்னுடைய முன்னோர்கள் இழந்த தன் மார்வார் ராஜ்யத்தைத் திரும்பப் பெற்றான்.

# இங்கிலாந்தில் தொடர் மழை; வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு




(இங்கிலாந்து)

இங்கிலாந்தில் தொடர்ச்சியாக கனமழை பெய்து வருவதால் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.லண்டனின் தென்மேற்குப் பகுதி, வட கிழக்கு பகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்திருப்பதாக சுற்றுப்புறச்சூழல் மையம் அறிவித்துள்ளது.

மின்சாரக் கம்பங்கள் வீழ்ந்து விட்டதால் வேல்ஸ் வில்ட்ஷைர், ஆக்ஸ்ஃபோர்ட்ஷைர் மற்றும் சோமர்செட் பகுதிகளில் ஆயிரக்கணக்கான வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளன.

வடகிழக்குக் காற்று மணிக்கு 50,60 மீற்றர் வேகத்தில் வீசுவதால் மரங்கள் வேரோடு பெயர்ந்து விழும் ஆபத்தும் இருக்கின்றது என்று வானிலை ஆய்வு அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே பொது மக்கள் வெள்ள அபாயம் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பல்வேறு நகரங்களில் உள்ள ஆறுகளிலும் வெள்ளம் ஏற்படும்.செம்ஸ்ஃபோர்டு மற்றும் எஸ்லெக்ஸ் பகுதிகளில் ஆற்றோரத்து மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஆற்றோரத்து வீடுகளை வெள்ள அபாயம் சூளும் நிலை ஏற்பட்டுள்ளது. (அ-2)

# பாகிஸ்தானுக்கு வங்கதேச கிரிக்கெட் அணி வரக்கூடாது

## தூதரகத்திற்கு பயங்கரவாதிகள் மிரட்டல்

(கராச்சி)

பாகிஸ்தானுக்கு வங்கதேச கிரிக்கெட் அணி வரக்கூடாது என்ற பயங்கரவாதிகள் ஈ-மெயில் மூலம் வங்கதேச தூதரகத்துக்கு மிரட்டல் விடுத்துள்ள தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

முன்னதாக வங்கதேச அணி கடந்த ஏப்ரல் 29, 30 ஆம் திகதிகளில் பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இருந்தது. ஆனால் வங்கதேச நீதிமன்றில் இதனை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டதை அடுத்து வங்கதேச அணியினர் பாகிஸ்தான் செல்ல தடை விதிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பது இதற்கு முக்கிய காரணமாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வங்கதேச அணி பாகிஸ்தான் வரக்கூடாது என்று பாகிஸ்தானில் உள்ள வங்கதேச தூதரகத்துக்கு ஈ- மெயில், கடிதங்கள் மூலம் பல்வேறு மிரட்டல்கள் வந்துள்ள தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள தொலைக்காட்சி ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வங்கதேச அணி பாகிஸ்தான் வருகிறது என்று செய்தி வெளியான சில மணி நேரத்தில் இருந்தே வங்கதேச தூதரகத்தக்கு பல்வேறு மிரட்டல்கள் ஈ-மெயில்கள் வரத் தொடங்கின. பாகிஸ்தான் வந்தால் வங்கதேச வீரர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று பகிரங்கமாகவே மிரட்டல் விடுத்து சில பயங்கரவா அமைப்புக்கள் கடிதங்களையும் அனுப்பியுள்ளன என்று வங்கதேச தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக 2009 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சென்ற இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பின்னர் எந்தநாட்டு கிரிக்கெட் அணியும் பாகிஸ்தான் செல்ல இதுவரை முன்வரவில்லை. சமீபத்தில் வங்கதேச அணி பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டது. ஆனால் அதுவும் தடைப்பட்டது. (அ-2)




# சிரிய புலனாய்வு கட்டடம் மீது தற்கொலைப்படை தாக்குதல்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் இராணுவப் புலனாய்வு அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைப் படைத்தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் அமைதியை ஏற்படுத்த சர்வதேச பார்வையாளர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் தாக்குதல்கள் நிற்கவில்லை.

இதற்கிடையே நேற்று முன்தினம் இத்லிப் நகரில் உள்ள இராணுவ மற்றும் விமானப் படை புலனாய்வு அலுவலகங்கள் மீது தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் கட்டங்கள் பெரும் சேமடைந்துள்ளன. பலியான 20 பேரில் பெரும்பாலானோர் இராணுவ வீரர்கள் . டமாஸ்கஸ் நகரிலும் கார்க்குண்டு வெடித்தது. இதில் எத்தனை பேர் பலியாகினர் என்ற தகவல் இல்லை. (அ-2)

# பாராளுமன்ற புறக்கணிப்பை கைவிட்டு ஆங்சாங் சூகி இன்று பதவிப்பிரமாணம்

(யாங்கூன்)

மியன்மாார் ஜனநாயக ஆதரவுத் தலைவர் ஆங் சாங் சூகி நாடாளுமன்ற புறக்கணிப்பை கைவிட்டு இன்றைய தினம் பதவியேற்கவுள்ளார்.

முன்பு அரசாங்கத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்த பாராளுமன்ற கூட்டத்தை புறக்கணிக்க சூகி முடிபு செய்தார்.

பதவியேற்பதை தவிர்த்து அவர் நாடாளுமன்ற புறக்கணிப்பை கைவிட்டு நாளை பதவியேற்க உள்ளதாக அவரது கட்சியினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் அரசாங்க தரப்பிலும் சில அரசியல் கட்சி தலைவர்களும் சமரச முயற்சியில் ஈடுபட்டார்கள். இதனை அடுத்து ஆங் சாங் சூகி தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

தனது கட்சி நிர்வாகிகளுடன் நேற்று முன்தினம் அவர் ஆலோசனை நடத்தினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில்,

பல்வேறு ஜனநாயக அமைப்புக்களை சேர்ந்த தலைவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றும் மக்கள் நலனில் அக்கறை கொண்டும் பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ள முடிபு செய்துள்ளோம். நாங்கள் கொள்கைகளை கைவிடவில்லை. மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற பதவியேற்றுக் கொள்ள உள்ளோம் என்றார்.

எனவே இன்றையதினம் பாராளுமன்ற கூட்டத்தில் சூகி அவரது கட்சி எம். பிக்களும் கலந்து கொண்டு பதவி ஏற்கிறார்கள், மேலும் பதவி ஏற்பு உறுதிமொழிகளில் சில மாற்றம் செய்யவும் கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள்.

மியன்மார் நாட்டிற்கு சென்றுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனை தலைநகர் யாங்கூனில் சூகி நேற்றைய தினம் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



துனீசியா தலை நகர் துனிசில் அந்நாட்டு பிரமர் ஹமதி யெபாலியை (வலது) பாலஸ் தீனம் ஜனாதிபதி மூமத் அப்பாஸ் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# லெபனான் தாக்குதலின் எதிரொலி; தடுப்பு சுவர் அமைக்கும் இஸ்ரேல்

இஸ்ரேலிய இராணுவம் லெபனானுடன் தனது எல்லைப்பகுதியில் தடுப்புச் சுவரொன்றினை கட்ட தீர்மானித்துள்ளது.

இப்பணிகள் லெபனானில் உள்ள ஐ.நா.வின் இடைக்காலப் படையுடன் இணைந்து மேற்கொள்வதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையே தேவையில்லாத பிரச்சினை உருவாவதை தடுப்பதற்காகவும் இஸ்ரேலிய எல்லை நகரமான மீடுலாவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு பகுதிகளில் லெபனானின் தாக்குதலை தடுப்பதற்காகவும் இச்சுவர் கட்டப்படுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இச்சுவரானது 2 கிலோ மீற்றர் நீளமும் 10 மீற்றர் உயரமும் கொண்டதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சர்வாதிகாரி ஹிட்லரின் சுயசரிதை புத்தகம் ஜேர்மனியில் பாடநூலானது

(ஜேர்மன்)

சிறையில் இருந்தபோது ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லர் எழுதிய சுயசரிதைப் புத்தகம் பாடசாலை மாணவர்களுக்குப் பாடமாகிறது.

உலகப்புகழ்பெற்ற ஜேர்மனி சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர் முதல் உலகப்போர் முடிந்த பின்பு 1918 இல் ஜேர்மன் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார்.

அரசை எதிர்த்து 1923 இல் திடீர் புரட்சியில் ஈடுபட்டார். புரட்சி தோல்வியில் முடிந்ததால் கைது செய்யப்பட்டார்.

சிறையில் இருந்தபோது மெய்ன்காம்ஃப் (மைஸ்டிரகிள்) என்ற சுயசரிதை எழுதினார். ஹிட்லரின் அரசியல் சிந்தனையை விளக்கும் வகையிலான இந்தப்புத்தகம் முதலில் 1925ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

2ஆம் பாகம் 1926 இல் வெளியிடப்பட்டது. 1945ஆம் ஆண்டு வரை மொத்தம் ஒருகோடி பிரதிகள் அடிக்கப்பட்டன. அதற்குப் பின்னர் அச்சிடப்படவில்லை.


இந்நிலையில் கடந்த 67 ஆண்டுகளாக அச்சிடப்படாமல் இருக்கும் மைஸ்டிரகிள் புத்தகத்தை மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் அச்சிட்டு வழங்க ஜேர்மனியின் பவேரியா மாநில அரசு முடிபு செய்துள்ளது.

இது தொடர்பாக பவேரியா மாநில நிதியமைச்சர் மார்கஸ் சோடர் கூறியதாவது,

மைஸ்டிரகிள் அல்லது மைபேட்டில் என்ற பெயரில் மாணவர்களுக்கு இப்புத்தகம் வழங்கப்படவுள்ளது. இதில் ஹிட்லரின் தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கை குறித்த தகவல்கள் இருக்கும். பெர்லினில் ஹிட்லர் 1945ஆம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் பற்றிய தகவல்களை குழந்தைகள் அறிந்துகொள்வது அவசியம் என்பதால் தற்போது இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது. இவ ரைப் பற்றி அறிந்துகொள்வதும் புத்தகம் வெளியிடுவதும் சட்டத்துக்குப் புறம்பானது அல்ல.

வல்லுநர்களின் தீவிர ஆலோசனைக்குப் பின்னர் 67 ஆண்டுகள் கடந்த நிலையில் மை ஸ்டிரகிள் மீண்டும் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. இதற்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. (அ-2)





யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் இறுதியாட்டத்தில் சம்பியனாகிய யாழ். மத்திய கல்லூரி அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.செல்வதீபன்)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம் பதி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.15 மணிதொடக்கம் 10.30 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இவற்றிற்கான கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாகவும் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பக்தர்கள் பால்க்காப்பு, எண்ணெய்க் காப்பு சாத்துதலும் நடைபெறவுள்ளது என ஆலய புனருத்தாரண சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## 4 ஆம் கட்டை குறுக்கு வீதியை புனரமைக்க கோரிக்கை

(புளியம்பொக்கணை)

பரந்தன்- முல்லைத்தீவு வீதியில் 4 ஆம் கட்டை ஊடாக கிளிநொச்சி செல்லும் குறுக்கு வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

முரசுமோட்டை பகுதியில் இருந்து கிளிநொச்சி செல்லும் 6 கிலோமீற்றர் வரையான வீதி மீள்குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து திருத்த வேலைகள் எதுவும் இடம் பெறவில்லை.

இவ்வீதி ஊடாகவே இரணைமடுக்குளத்தின் கீழான நெற் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களையும் உள்ளீட்டுப் பொருட்களையும் கொண்டு செல்கின்றனர்.

இவ்வீதியில் கிளிநொச்சி முரசுமோட்டை அ.த.க.பாடசாலையும் கிளி/பன்னங்கண்டி இந்து ஆரம்ப வித்தியாலயமும் அமைந்துள்ளது.

எனவே, பாடசாலை மாணவர்கள் பயணிக்க முடியாத அவலநிலை உள்ளது. எனவே உரிய தரப்பினர் இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

## காற்பந்தாட்டப்போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

அகில இலங்கை காற்பந்தாட்ட சம்மேளன அனுசரணையுடன் வவுனியா மாவட்ட பாடசாலைகள் காற்பந்தாட்ட சங்கம் நடத்திய 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகள் பங்கு பற்றின. இறுதிப் போட்டியில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணியும் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இதில் 2:0 என்ற கோல்க் கணக்கில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (அ-3-266)

## கல்வி வலயங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி

(மல்லாவி)

முல்லை, துணுக்காய் கல்வி வலயங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை வியாழக்கிழமை 15, 17, 19 வயதுப் பிரிவைச் சேர்ந்த இருபாலாருக்குமான கரப்பந்தாட்டம் மு/ கலைமகள் வித்தியாலயத்திலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 19 வயதுப் பிரி வினைச் சேர்ந்த இருபாலாருக்குமான எல் லேப்போட்டி மு/ வித்தியானந்தா கல்லூரியி லும் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டி மு/ வற்றாப்பளை அ.த.க.பாடசாலையில் இடம்பெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 15,19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான சதுரங்கப்போட்டி மு / ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

17,19வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை மு/ யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் 15,19 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான உதைப்பந்தாட்டப் போட்டி மு/மல்லாவி மத்திய க்ல்லூரியிலும் இடம் பெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை 19 வயது இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டி மு/ மல்லாவி மத்திய கல்லூரியிலும் மு/யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 15, 19 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான கபடிப் போட்டி மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை 19 வயதுப் பிரிவு இருபாலருக்குமான கூடைப் பந்தாட்டப் போட்டி மு/ மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டி 15, 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான கரம்போட்டி மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 15,19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப்போட்டி வவுனியா கல்வியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை, 23 ஆம் திகதி புத ன்கிழ மையும் 15,17,19, 21ஆகியவயதுப் பிரிவு இரு பாலாருக்குமான மெய்வ ல்லுநர் போட்டிகள் மு/மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளதாகவும் போட்டிகள் யா வும் காலை 8.30 மணி க்கு ஆரம்பமாகும் என வும் அவர் தெரிவித்துள் ளார். (அ-3-15)

## மாதிரிப் பரீட்சைகளும் செயலமர்வுகளும்

2012 ஆம் ஆண்டு ஆவணி மாதம் உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சைகளும்,விசேட செயலமர்வுகளும் நாளை புதன்கிழமை காலை முற்பகல் 9 மணிக்குஆரம்பமாக இருப்பதால் சகல மாணவூர்களும் தவறாது சமூகம் தருமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ-9)

## மாவட்டமட்ட கபடி போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட கபடிபோட்டி நேற்று முன்தினம் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வெற்றிபெற்ற பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு,

15 வயது பிரிவு ஆண்; வவுனியா பறக்கும் மகா வித்தியாலயம், பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலயம் ,புதுக்குளம் மகா வித்தியாலயம்.

15 வயது பிரிவு பெண்;

பூவரசங்குளம் வித்தியாலயம்,ஓமந்தை மத்திய கல்லூரி, குளவி சுட்டான் அ.த.க.பாடசாலை,

19 வயது பிரிவு ஆண்;

வவுனியா பறக்கும் மகா வித்தியாலயம்,கல்மடு மகா வித்தியாலயம்,ஓமந்தை மத்திய கல்லூரி.

19 வயது பிரிவு பெண்;

பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலயம், கல்மடுமகா வித்தியாலயம்,வவுனியா பறக்கும் மகா வித்தியாலயம். (அ-3-266)


செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய திருவிழா
17.05.2012 - 26.05.2012



நற்கருணை வழிபாடு 25/05/2012 மாலை 5.00 மணி
திருநாட் திருப்பலி 26.05.2012 காலை 7.00 மணி
நவநாள் வழிபாடுகள் மாலை 5.00 மணிக்கு நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
❊ போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்
❊ வியாபாரம் மேற்கொள்ள விரும்புபவர்கள் 05.05.2012 காலை 10.00 மணிக்கு ஆலய நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொள்ளவும்.
(6278)
பங்குத்தந்தை

கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி – கிளியே
நாளில் மறப்பாரடி – பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எந்தப் புற்றில் எந்தப் பாம்பு!

மேதினம் நேற்று நடந்து முடிந்தாயிற்று. மேதினம் என்பது தொழிலாளர்களின் உரிமை வென்றெடுக்கப்பட்ட–வென்றெடுக்கப்படுவதற்கான தினமாக இருந்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக இலங்கைத்தீவில், அரசியல் கட்சிகள் தங்கள் கட்சிகளுக்கு உருவேற்ற–மீள்வலுப்பேற்ற நடக்கும் திருவிழாவாக மாறிவிட்டன.

தொழிலாளர் தினம் என்ற பெயரில் நடைபெறும் மேதினம் ஏதோவொரு வகையில் 'அரசியல்' தினமாக மாறியிருப்பதால், தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்புகள் அறவே இல்லாமல் போய்விடும்.

எதுவாயினும் அரசியல் நடத்துவதற்கான களமாக மாற்றப்பட்ட மேதினக் கொண்டாட்டங்களில் இம்முறை எதிர்க்கட்சிகளின் கூட்டு மேதினம் என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட தென் இலங்கையைச் சேர்ந்த சில எ்திர்க்கட்சிகளும் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் மேதினத்தை நடத்தியுள்ளன.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மேதினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் என்பது வேறு கதை.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியும் யாழ்ப்பாணத்தில் பேரணியுடன் தனது மேதினக் கொண்டாட்டத்த்த நடத்தியுள்ளது.

எதுவாயினும் நீண்டகாலங்களுக்குப் பின்னர். யாழ்ப்பாணத்தில் 'மேதினம்' களை கட்டியமை 'அரசியல் வேர்கள்' யாழ். மண்ணில் ஆழமாக ஊடுருவுகின்றன என்பதை சுட்டி நிற்பதாகும்.

மேதினக் கூட்டங்கள் பற்றி யாழ்ப்பாண மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டார்கள் என்பது தெரிந்த விடயமாகையால், மேதினக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை என்பது ஏற்றியிறக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையாக இருக்குமே அன்றி அதுபற்றிய விமர்சனங்கள் தேவையற்றவை எனலாம்.

இருந்தும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் கலந்து கொள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய மேதினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த மேதினம் என்பதன் அடிப்படையில் பெருமளவு சிங்கள மக்கள் கலந்து கொண்டனர்.

இங்கு தான் மதிப்பீடு தேவையாகின்றது. அதாவது யாழ்ப்பாண மண்ணில் நடத்தப்படுகின்ற மே தின கூட்டத்தில் பெருந்தொகையான சிங்கள மக்கள் கலந்து கொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய நன்மை என்ன என்பதே அந்த மதிப்பீடாகும்.

தனித் தமிழீழம் என்ற கோசத்தோடு விடுதலைப்புலிகளின் பரிந்துரையால் பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில், அதிலும் யாழ்ப்பாணத்தில் சிங்கள மக்களே அதிகம் கலந்து கொண்டனர் என்பதை ஒரு கணம் சிந்தித்தால், எந்த புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ யார் அறிவார்?

# மாணவர்கள் நல்ல பழக்கவழக்கங்களுடன் வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும்

## வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

நகர்ப்புறப் பாடசாலைகள் மட்டுமல்ல; கிராமப்புற பாடசாலைகளும் உட்கட்டமைப்பு வசதிகளின் ஊடாக மாணவர்களது கல்வித்தரம் உயர்வடைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகவுள்ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

நலிவுற்ற பாடசாலை மாண்வர்களுக்காக பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற போது அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக இந்த மாவட்டத்தின் பெறுபேறுகளைப் பார்க்கும்போது நகரப் பாடசாலைகளில்தான் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கின்றது. அதன் காரணமாக கிராமப்புற மாணவர்கள் பலசிரமங்களுக்கு மத்தியில் நகரப் பாடசாலைகளுக்கு வரவேண்டியுள்ளது.

எனவே இந்த நிலை மாற்றம் பெற வேண்டுமானால் அனைத்துப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்குத் தயாராக ஆசிரியர்கள் வரவேண்டும். அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு பணிபுரியவேண்டும். அண்மையில் எனது அதிகாரிகள் சிலர் பாடசாலைகளுக்கு விஜயம் செய்தபோது அவர்கள் தந்த அறிக்கை மிகவும் வேதனை தரும் அறிக்கைகளாக இருக்கின்றது.

இந்த அறிக்கையின் பிரகாரம் நாம் தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதைவிட மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சொல்கின்ற விடயம் வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம், தொழில் நுட்பம் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் அதன்மூலம் மாணவர்கள் பயனடையவேண்டுமென்பதே எனதும் அரசாங்கத்தினதும் மாணவர்களின் நலன் சார்ந்தவர்களினதும் எதிர்ப்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு மாணவர்கள் அர்ப்பணிப்புடன் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். இதற்காக நாங்களும் பொலிஸாரும் நீதிமன்றமும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தப்பிரதேசத்தின் கலாசாரம், சமயத்தின் மீதுள்ள நம்பிக்கை, உங்களுடைய நடத்தைக் கோலங்களில் உள்ள நிலைகளை உணர்ந்தவர்களாக நீங்கள் இருக்கவேண்டும். பல பாடசாலைகளிலும் மாலைநேர வகுப்புக்களுக்கு செல்லும் போதும் நடைபெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக எமக்குஅறிக்கைகள் கிடைத்தவண்ணமுள்ளன. எவையுமே சந்தோசம் தரக்கூடியதாக இல்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஒவ்வொரு செயற்பாட்டையும் உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.

பிள்ளைகளுக்குப் பொக்கெட் மணி, கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள், இன்டர்நெட் வசதி என்பவற்றினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு செய்திகள் வருகின்றன. அவற்றை இங்கு கூறமுடியாது. வாய்கூசுமளவிற்கு மிகவும் மோசமாகவுள்ளது. ஏன் இவற்றை கூறுகின்றேன் எனில் பொருளாதாரத்தில் நாம் முன்னேறலாம், வாழ்க்கை வருமானத்தை அதிகரிக்கலாம். அழகாக உடுக்கப் பழகிக் கொள்ளலாம்.

ஆனால் சீரழிந்துபோன இளைய சமுதாயத்துடன் இவையெல்லாம் தோற்றுப்போன விடயங்கள் என அவர் மேலும் தெரி வித்தார். (அ-9,266)

## திட்டமிடல் பிரதிக்கல்வி பணிப்பாளர் நியமனம்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்விவலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக செல்வி அம்பிகைபாலன் லதாங்கி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வடமாகாண கல்வி அமைச்சின் ஆசிரியர் நியமனக் கிளையின் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர்.

வவுனியா தெற்கு கல்விவலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய சிவபாலகுரு ஓய்வு பெற்றதையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-3-266)

## மாலுசந்தி இராணுவ காவலரண் அவுட்

(கரவெட்டி)

மாலுசந்தியில் உள்ள இராணுவ காவலரண் 16 ஆண்டுகளுக்குப் பின் இராணுவத்தால் அகற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது 1996ஆம் ஆண்டு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் பெரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

அதற்கு உதவியாக மாலுசந்தியில் இக்காவலரண் அமைக்கப்பட்டு யுத்த காலப் பகுதியில் முக்கிய சோதனை காவலரணாக விளங்கியது.

தற்போது இக்காவலரண் முற்றாக அகற்றப்பட்டுள்ளது. (அ-3,24)

## மாநகரசபை பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் இவ்வாண்டுக்கான மார்ச் மாத கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் ஏப்ரல் மாதத்திற்கான கூட்டம் அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கும் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபைச் செயலாளர் திருமதி ரூ. சத்தியானந்தன் அறிவித்துள்ளார். மேற்படி இரு கூட்டங்களும் கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## வழிபடு தலங்களை நாசப்படுத்துவதை நாகரிக உலகு ஏற்காது–கருணாநிதி

பள்ளிவாசல்கள், கோவில்களை நாசப்படுத்துவதை நாகரிக உலகம் ஏற்றுக்கொள்ளாது என தி.மு.கவின் தலைவர் மு.கருணாநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் அவர் வெளியிட்ட கேள்வி-பதில் அறிக்கையிலே இவ்வாறு குறிப்படப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங்கையில் பலர் கண்டித்துள்ளனர். இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நிறுவுவதில் இலங்கை அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டு வருகின்றது.

இந்நோக்கத்தை நிறைவேற்ற தமிழ் மக்களின் தாயகப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம், இராணுவமயப்படுத்தல் மற்றும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களை நாசப்படுத்தல் போன்ற இன மதங்களுக்கு எதிரான வன்முறைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே தற்போது பள்ளிவாசல்களின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய தாக்குதல்கள் புத்தர் போதித்த அன்பு, அறம், அமைதி ஆகியவற்றுக்கு எதிரானவை.

பள்ளிவாசல்களாயினும், தேவாலயங்களாயினும், கோவில்களாயினும் அவற்றைத் தாக்கி நாசப்படுத்துவதை நாகரிக உலகம் ஏற்றக்கொள்ளாது. இலங்கையில் நடைபெறும் இத்தகைய நிகழ்வுகள் கடும் கண்டனத்திற்குரியவை என கருணாநிதிவெளியிட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுளுக்கு அர்ப்பணியுங்கள்



ஆன்மீக உயர்வு பெற வேண்டுமானால் மனதில் குறுகிய எண்ணங்களுக்கு இடம் தாராதீர்கள்.

தனக்கு என்று எதையும் வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விடும் துணிவு பக்திக்கு மிக அவசியம்.

எப்போதெல்லாம் சுயநலம் நமக்குள் எழுகிறதோ அப்போதெல்லாம் மன ஆற்றல் அனைத் தும் நாலாபுறமும் சிதறுகின்றது.

எப்போதும் உழைத்துக்கொண்டே இருங்கள். ஆனால் செயலால் ஏற்படும் விளைவு மனதில் பதிவுகளை உண்டாக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

புலன்கள் என்னும் குதிரைகளை மனம் என்னும் கடிவாளத்தால் இழுத்துப் பிடியுங்கள்.

அறியாமை நம்மிடம் இருக்கும் வரை நம்மை விட்டு துன்பங்கள் விலகாது. இதற்கு ஒரே தீர்வு நாம் ஆன்மீக வலிமை மிக்க தூய்மையானவர்களாக மாறுவதுதான்.

நாய்க்கு சோறு இடுவதாக இருந்தாலும் அதற்குள் இருக்கும் கடவுளுக்கு தான் நீங்கள் சேவை செய்யும் வாய்ப்பை பெறுகிறீர்கள்.

# அரசின் அபிவிருத்தி திட்டங்களை விருப்புடன் செயற்படுத்துங்கள்!

## அமைச்சர் றிசாத் கோரிக்கை



(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் மஹிந்த சிந்தனை திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற விடயத்தில் சில அரச அதிகாரிகள் செய்யும் கயிறு இழுப்பால் தேவை கொண்ட எமது மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவது அதிகரித்து வருவதாக வடமாகாண அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரும் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு சங்க கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சகல அபிவிருத்தி திட்டங்களும் மக்களுக்கானது என்பதை அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனையுடன்தான் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். ஏனெனில் மக்களுடன் இரண்டறக்கலந்து நிற்பவர்கள் அவர்கள் தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சில அதிகாரிகள் அவர்களது விருப்பங்களுக்கு ஏற்றவாறு திட்டங்களை நடைமுறைபடுத்திவிட்டு கொடுப்பனவுக்காக அனுமதியினை பெற எம்மிடம் ஆவணங்களை சமர்ப்பிக்கின்றனர். அது நியாயமானதல்ல. இம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டிய கடமையும் தேவையும் எமக்குள்ளது.

அழிந்து போன எமது மாவட்டங்களை அபிவிருத்தி செய்கின்ற பணியில் நாம் ஈடுபடுகின்ற போது சில குழப்பவாதிகள் அதனை குழப்ப முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு தேவை இந்த அரசாங்கம் மக்களுக்கு எதையும் செய்வதில்லை என்பதை காட்டுவதே. அந்த செயலுக்கு சில அதிகாரிகள் துணை போகின்றனர்.

இந்த நாட்டில் முழுமையான ஜனநாயகம் இருக்கின்றது. தனிப்பட்ட செயற்பாடுகளை எவரும் செய்யலாம். அது அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையோடு தொடர்புபட்டதாக இருக்க வேண்டும். அரசாங்க ஊழியர்களாக இருந்து கொண்டு அதற்கு எதிரான செயற்பாடுகளை செய்வது அனுமதிக்க முடியாது.

அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாது என்றால் அந்த இடத்தில் இருந்து கொண்டு தொடர்ந்து தடையாக இருக்காமல் அதனை செய்யக்கூடிய ஒருவருக்கு இடம் கொடுப்பதுதான் சமூகத்திற்கு செய்யும் பெரும் கைங்கரியமாகும்.

பிரதேச அபிவிருத்தி குழுவின் முதல் அதிகாரம் பெறப்பட்டு பின்னர் அவை மாவட்ட அபிவிருத்தி குழுவிற்கு சமர்ப்பித்து அதனது அனுமதியினையும் பெற்றதன் பின்னர் தான் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் உரிய அதிகாரிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்என்பதை வலியுறுத்தி கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தமதுரையில் கூறினார். (அ)

# திருடர்கள் அகப்பட்டனர்

(புளியம்பொக்கணை)

தர்மபுரம் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டில் ஈடுபட்டு வந்த மூன்று நபர்களை கிளிநொச்சி பொலிஸார் கடந்த 27 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

தர்மபுரம் பகுதியில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டு மற்றும் தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நீர்ப்பம்பி திருடப்பட்டது போன்ற குற்றச்சாட்டுக்களில் பொலிஸாரால் தேடப்பட்ட திருடர்கள் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டதுடன் களவாடப்பட்ட பொருட்களும் அவர்களிடம் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (அ-3-263)

# ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 வீத பணம் உறுப்பினர்களுக்கு

## அமைச்சர் காமினி லொக்குகே தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 சத வீத பணத்தை அதன் உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முதல் அமுலுக்கு வரும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியும் கிடைத்துள்ளது. 30 வீதமான பணத்தை பெற்றுக்கொள்வது தொடர்பான சட்ட திருத்தங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகவே அதனை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தற்போது ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கம் வகிக்கும் ஊழியர்கள் தமக்கு அவசரமாக பணம் தேவைப்படும் பட்சத்தில் அதில் இருந்து 30 வீத பணத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். (அ-9)

# களியாட்ட விடுதியில் நேபாள பிரஜை மரணம்

பம்பலப்பிட்டியில் இயங்கி வரும் இரவு களியாட்ட விடுதி ஒன்றில் நேபாள நாட்டு பிரஜை ஒருவர் தூக்கிட்டு மரணமடைந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வன புர்னா பஹதுர் தமஹன் (வயது 32) என்ற நேபாள நாட்டு பிரஜையே உயிரிழந்தவராவார். குறித்த களியாட்ட விடுதியில் இசை வழங்குநராக செயற்பட்டு வந்துள்ளார்.

அளுத்கடை இலக்கம் 5 நீதவான் மூலம் மரண விசாரணைகள் இடம்பெற்று வருகின்றதுடன் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)




UR.FR.LE.NO FOUNDATION நிறுவனத்தினரால் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் மகளிர் தின நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் 2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண்மணிக்கான நேர்முகத் தேர்வில் யாழ். பிரதேச செயலக மட்டத்தில் முதலாமிடத்தையும் யாழ். மாவட்டத் தெரிவில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்ட திருமதி பேக்மன் குணரத்தினத்திற்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த நினைவுச்சின்னம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டைகள், ஆள் அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் என்பன கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் ஏ.எஸ்.பிரசாத் அறிவித்துள்ளார்.

சுந்தரம்பிள்ளை சுதர்சினி (சித்தன் குறிச்சி, பூநகரி) என்பவரின் 807774921 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், சியாமளா மகேசன் (இராச வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி) என்பவரின் 757092140 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, 090301253 இலக்கமுடைய ஆள் அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவித்துள்ளார். (அ-9)

# மரண அறிவித்தல்

## திருமதி. கனகலட்சுமி கணேசபிள்ளை



கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கனகலட்சுமி கணேசபிள்ளை 27.04.2012 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கனகமாணிக்கம்-நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும்,

காலஞ்சென்ற சுப்பிரமணியம்-ராசம்மா ஆகியோரின் மருமகளும், கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், லோகலட்சுமி, கிருஷ்ணவேணி ஆகியோரின் சகோதரியும் ஆவார். இவர் ஜெயகௌரி (லண்டன்), பிரியதர்சினி, நளாயினி, (ஆசிரியர், யாழ்/இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் தாயாரும், சிவகுமார் (பொறியியலாளர்-லண்டன்), புஸ்பராஜா(வைத்திய கலாநிதி), ஆனந்த செந்தூரன் ஆகியோரின் மாமியாரும், கபிலன், சங்கவி, காயத்திரி, லட்சுமி, சாயிப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 03.05.2012 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 2 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.


94/6, அருணாசலம் லேன்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி (இ)

தகவல்
குடும்பத்தினர்.

# டெக்கான் அபார வெற்றி

ஐ.பி.எல் தொடரின் புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான நேற்றைய போட்டியில் சங்கக்காரவின் அதிரடியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐந்தாவது ஐ.பி.எல் இருபது-20 கிரிக்கெட் தொடரின் 42 ஆவது லீக் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ், புனே வாரியர்ஸ் அணிகள் கட்டாக் பாரபக்தி மைதானத்தில் நேற்று மோதின.




நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. தொடக்கவீரர்களாக களமிறங்கிய பார்த்திவ் பட்டேல் ஓட்டங்கள் எதுவுமின்றி சாமுவேல்ஸ் பந்திலும், ஷிகார் தவான் 13 ஓட்டங்கள் எடுத்தநிலையில் புவனேஸ்குமார் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 186 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் சங்கக்கார 82 ஓட்டங்களையும் கமரூன் வைற் 74 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதனையடுத்து 187 ஓட்டங்கள் இலக்குடன் புனே வாரியர்ஸ் அணி துடுப்பெடுத்தாட தொடங்கியது.

தொடக்க வீரராக களமிறங்கிய மனிஷ் பான்டே ஓட்டங்கள் ஏதுமின்றி சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்கவீரான மைக்கல் கிளார்க் 41 ஓட்டங்களும் அணித்தலைவர் சௌரவ் கங்குலி 45 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் புனே வாரியர்ஸ் அணி 5 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்கள் மட்டுமேஎடுத்து தோல்வியடைந்தது. இதன்மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக சங்கக்கார தேர்வானார்.

# சென்னைக்கு சவால்தான் -பிளமிங்

(சென்னை)

ஐ.பி.எல், வரலாற்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதன்முறையாக சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தங்களது பட்டத்தை தக்வைத்துக் கொள்வதற்காக கடுமையான அழுத்தத்தை எதிர் கொண்டு காணப்படுகிறது.

இத் தொடர் முழுவதும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தேவையானளவுக்கு திறமைகளை வெளிப்படுத்தவில்லை என்பதை ஏற்றுக் கொண்ட ஸ்ரீபன் பிளமிங், ஐ.பி.எல். தொடரில் முதன்முறையாக சவாலுக்குள்ளாக்கப்படுவதன் காரணமாக அதைப் பற்றி ஆராய வேண்டிய தேவையுள்ளதாக தெரிவித்தார்.

வழக்கமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்ச்சியான திறமைகளை வெளிப்படுத்தும் வழக்கம் கொண்ட போதிலும் இம்முறை அணியில் காணப்படும் சில குறைகளை நீக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இத்தொடரில் இருந்து சென்னை அணி இன்னமும் வெளியேற்றப்படாத போதிலும் விரைவாக சிறப்பாகச் செயற்பட்டு முன்னேற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**

இரவு 8 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி எதிர் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி மோதுகிறது.

# டில்லியின் வெற்றி தொடர்கிறது

ஐ.பி.எல்.போட்டித் தொடரின் 42-வது லீக் ஆட்டம் ஜெய்ப்பூரில் நேற்றிரவு நடைபெற்றது.


இந்த ஆட்டத்தில் டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது.

அதன்படி அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அஜன்கியா ரகானேயும், ராகுல் டிராவிட்டும் களமிறங்கினர்.

இருவரும் அதிரடியாக விளையாடினர். ரகானே 42 ஓட்டங்களையும் ராவிட் 57 ஓட்டங்களையும் பெற 20 ஓவர் முடிபில் 6 விக்கெட்டுகளை இழந்து ராஜஸ்தான் 141 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கி டில்லி அணி சேவாக்கின் அதிரடியால் 15.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



இதனால் டில்லி அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக நெகி தேர்வானார்.

# பழைய அனுபவங்களை மற...

டையாக காட்டி நிற்கின்றது. தமிழ் பேசும் மக்களுக்கும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கும் இடையில் பல விதமான வித்தியாசங்கள் இருந்திருக்கலாம்.

ஆனால் நாங்கள் தொடர்ந்து இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழவேண்டியவர்கள். எமது பழைய அனுபவங்களை மறந்து நாங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். எல்லா இனங்களும் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சூழல் இந்தநாட்டில் உள்ளது என்பதை இன்றைய (நேற்று) மே தினம் எடுத்துக் காட்டுகின்றது.

இந்த நிலை தொடர்ந்து இருப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். சகல இன மக்களும் இங்கு வந்து இந்த மே தின நிகழ்வில் பங்குகொண்டுள்ளனர்.

சில அரசியல்வாதிகளும், சில அரசியல் கட்சிகளும் வெவ்வேறு இனங்களைச் சார்ந்த மக்களைப் பிரித்து வைத்து அதன் ஊடாக அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றார்கள்.

அவர்கள் நினைகின்றார்கள் அவ்வாறு பல இனம் சார்ந்த மக்களைப் பிரித்து வைத்தால் தாங்கள் ஆட்சியில் இருப்பது இலகுவாக இருக்குமென்று.

இவ்விதமான தீய சிந்தனைக்கு இடம் கொடுக்காமல் செயற்படுவது எல்லோருடைய கடமையுமாகும் என நான் கருதுகிறேன்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காக அரசாங்துடன் இணைந்து செயற்பட பலமுறை நாங்கள் முயற்சித்தோம். ஆனால் எமது ஒத்துழைப்பை பெற அரசாங்கம் விரும்பவில்லை.

எமது ஒத்துழைப்பை பெற்றிருந்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை இன்று முன்னேற்றம் கண்டிருக்கும்.

வெளிநாட்டவர்களின் ஒத்துழைப்புடன் அவர்களுக்கு போதியளவு உதவிகளை எங்களால் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். ஆனால் குறுகிய அரசியல் காரணங்களுக்காக எம்மை புறக்கணித்திருந்தது இந்த அரசாங்கம்.

எமது மக்களுக்கு ஏற்படும் துயரம் துன்பங்களில் அவர்களுக்கு அக்கறையில்லை என்றுதான் கூறமுடியும்.

ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு இந்த நாட்டில் ஏற்படவேண்டும். எமது மக்களின் உடனடித் தேவைகள் நிறைவேற்றப்பட்டு அவர்களின் துன்ப துயரங்கள் ஒரு முடிபிற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்குமென இந்த இடத்தில் வைத்து நான் பகிரங்கமாக கூறிக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# பிரி. அரசின்...

டிசம்பர்மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நாம் போதியளவு ஆராயவில்லை என, ஐக்கிய இராச்சிய அறிக்கையில் எவ்வாறு கூறமுடியும்? இப்போது நாம் அவற்றை ஆராய ஆரம்பித்துள்ளோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சில ஏற்கெனவே அமுல்படுத்தப்படுகின்றன.

இப்போது மே மாதத்தில் இருக்கிறோம். ஒக்டோபருக்கு இன்னும் நீண்டகாலம் உள்ளது. எமக்கு அவகாசம் உள்ள நிலையில், ஏற்கெனவே நாம் பல விவகாரங்கள் தொடர்பாக பணியாற்ற ஆரம்பித்துள்ள நிலையில் அவர்கள் எம் தொடர்பாக முன்கூட்டியே தீர்ப்பளிக்க முடியாது என பிரதியமைச்சர் நியோமல் பெரேரா மேலும் தெரிவித்தார். (ந-8-11)



## உரிமை என்பது வெறும்...

அனைத்து தொழிலாளர்களின் உரிமை வென்றெடுக்கப்பட்ட தினம்.

இத் தினத்தில் இருந்து நாம் எம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்தும் போராடுவோம்.

நாம் அரசியல் ஆதாயத்தினை தேடுவதற்காகக் போராடவில்லை.

எமது மக்களின் அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே நாம் போராடி வருகிறோம்.

எமது போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமாக அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டமாகவே முன்னெடுத்து வருகிறோம்.

எமது இப் போராட்டம் வெற்றியை நோக்கி கொண்டு செல்லும்போதுதான் சூறாவளி வீசத் தொடங்கியது.

எமது சகோதரர் இயக்கங்களிடையிலான யுத்தம் ஆரம்பமாகி எமது போராட்டத்தை சீர்குலைத்துவிட்டது.

இதன் பின்னரும் எமக்கான நல்லூ தொரு சந்தர்ப்பம் சில அரசியல்வாதிகளினால் பறிபோனது.

இலங்கை -இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அதனை சரியாகப் பயன்படுத்தத் தவறியிருந்தனர்.

அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அத் தீர்வுக்கு பதிலாக வேறு எதனையும் முன்வைக்கவும் இல்லை; நடைமுறைப் படுத்தவும் இல்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அல்லது அதற்கான வேறு தீர்வு ஏதேனும் முன்வைக்கப் பட்டிருந்தால் இன்று இந்த இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதனைத் தவிர்த்திருக்க முடியும்.

தமிழ் மக்களுக்காக சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் பலருடன் ஈடுபட்ட பேச்சுவார்த்தைகளினைத் தொடர்ந்து குழப்பியும் வந்துள்ளனர்

வன்னியில் யுத்தம் ஆரம்பமாவற்கு முன்னரும் இறுதிக்கட்ட போரின்போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் தனியாகவும் உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஓர் இனக்கப்பாட்டுக்கு வாருங்கள் என அவர்களிடம் கேட்டோம். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக அன்றைய ஜனாதிபதி பிரேமதாச, சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சு நடத்தியது. ஒன்றிலும் உருப்படியான தீர்வு எட்டப்படவில்லை.

நாம் அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு சேர்ந்து அவர்களின் கொள்கைகளில் எடுபட்டிருந்தால் வன்னியில் நடந்ததுதான் இன்று இங்கும் நடந்திருக்கும்.

ஜெனிவா கூட்டத் தொடரின் போதும் எம் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு எம்மக்களின் உண்மை நிலைப்பாட்டினை கூறுவதற்காக நாம் அந்த கூட்டத் தொடரில் பங்கேற்றோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிற்கு ஆதரவாக கூட்டத் தொடரில் பங்கேற்காமல் புறக்கணித்து அரசிற்கு எதிரான தீர்மானத்தையும் கொச்சைப் படுத்தியது.

போராட்டத்தின் மூலம் உரிமைகள்ளை வென்றெடுத்தவர்கள உலகெங்கும் உள்ளனர். தமிழ் மக்களுக்கும் இவ்வுரிமைகளினை வென்றெடுக்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால் எமது போராட்டத்தினை சில சந்தர்ப்பங்களில் நாம் திசைதிருப்பியிருக்க வேண்டும்.

பல்லினங்கள் வாழுகின்ற இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் உரிமையுடனும், சம அந்தஸ்துடனும் வாழ்கின்ற தீர்வினை நாம் இனியும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## ஐ.தே.கவின் ஆதரவா...

இருந்து வந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களே பெருமளவில் கலந்து கொண்டனர்.

இவர்கள் பேரணியிலும் கூட்டத்திலும் பச்சை நிறத்தில் பதாகைளை ஏந்தி நின்றனர். (ந-6)


Parami Ayurveda Panchakarma Centre

புதிதாக திறக்கப்படவுள்ளது

03.05.2012

* முழு உடலுக்குமான மசாஜ்
* தலை மசாஜ்
* நீராவி குளியல்
* பாதங்களுக்கான மசாஜ்
* எண்ணெய் மருத்துவம்

Open:-9.00a.m
Close:-7.00 p.m





இல.03, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே:-071 7770050

(8271)


## மரண அறிவித்தல்

# புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்




பிரான்பற்று பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி வேலும்மயிலும் அவர்கள் 28.04.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லக்கிளியின் அன்புக்கணவரும், விநாயகமூர்த்தி (ஜேர்மன்), கோமதி (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆசிரியை), வதனி (நல்லூர் பிரதேச செயலக சமூர்த்தி உத்தியோகத்தர்), சிவகுமார் (கனடா), செல்வக்குமார் (கனடா), சுதா (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி எழுதுவினைஞர்), சுரேஸ்குமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைவாணி (ஜேர்மன்), சுரேஸ்குமார் (வியாபாரம்), கமலநாதன் (மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் நிர்வாகி) ஆகியோரின் மாமனும், அமரர் மகாலிங்கம், அமரர் அருந்தவம், அமரர் செல்லத்துரை, அமரர் துரைசிங்கம், திருச்செல்வம், மல்லிகைமலர் ஆகியோரின் சகோதரனும், பரமேஸ்வரன் (ஜேர்மன்), தங்கேஸ்வரன் (ஜேர்மன்), ஜெயந்தி (லண்டன்), சாந்தி (ஜேர்மன்), ஜெகதீஸ்வரன் (ஜேர்மன்), தயாபரன் (ஜேர்மன்) ஆகியோரின் சித்தப்பாவும், தர்சிகா, கோகிலா, விஜிகரன், யசோதரன், தாரணி, துளசி ஆகியோரின் அன்பு மாமனும், நல்லசேகரம், அருளம்பலம் ஆகியோரின் பெறாமகனும் வரப்பிரகாஷ், சரணிஜா, தரன்சியா, சிந்துர்ஜா, தக்சயப்பிரகாஷ், திஷான், இசாளினி, சிந்துஜன், லக்ஷனா, கபிலன், நவிந்தன், அபிலாஷ், கனுஜன், சுருதி, பிரவீன், அஸ்வின், தினேஸ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 03.05.2012 நாளை வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.
தொலைபேசி: 021 3734566, 0776148768

தகவல்: குடும்பத்தினர்

(C-6479)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.